Malaimugadu

# மலைமுகடு

இதழ் 01

ஜனவரி - மார்ச் 2012

ISSN :2279-1116

M. மதிவண்ணன்
தரம் - 13.



அறிவுச் சமூகத்தை நோக்கிய பயணம் ...

ரூபா 100/-

# உள்ளடக்கம்


- தேடி வாசித்தலின் தேவை 03
- என். எஸ். எம். ராமையாவின் ஒரு கூடைக் கொழுந்து 05
- நீர்மலி கண்ணொடு நினைப்பாகின்றே 09
- தமிழில் திருப்பள்ளி எழுச்சி 12
- அரசியல் அதிகாரம் 18
- மோதலும் மோதல் தீர்வும்: கோட்பாட்டு ரீதியான விளக்கம் 21
- உலகமயமாதலின் பரிமாணங்களும் விளைவுகளும் 28
- அரசியல் சமூகமயமாதல் 36
- உலகின் இயற்கை அனர்த்தங்கள் 43
- புவி வெப்பமடைதலும் அதன் விளைவுகளும் 53
- குறிஞ்சித் தென்னவனின் சம்பளநாள் - ஒரு மதிப்பீடு 60

Malaimugadu

# மலைமுகடு

காலாண்டு இதழ் 001

**ஆசிரியர் :**
பெருமாள் சரவணகுமார்

**இணை ஆசிரியர்கள் :**
செல்வி அ. அருளரசி
திரு. இரா. ரமேஷ்
திரு. எம். எம். ஜெயசீலன்
திரு. எஸ். தவச்செல்வன்

**நிர்வாக ஆசிரியர்கள் :**
திரு. பெ. யோகேஸ்வரன்
திரு. இரா. சதீஸ்

**இதழ் வடிவமைப்பு :**
செல்வி தனுமிலா சிங்

**வெளியீடும் விநியோகமும் :**
ஈஸ்வரன் புத்தகாலயம்
126, கொழும்பு வீதி, கண்டி.
இலங்கை.

**தொடர்புகளுக்கு :**
''உதயம்'' கல்வியகம்
திம்புள்ள வீதி, ஹட்டன்.
தொ.பே. இல - 071 5372368 / 075 9192989
Email: malaimugadu@gmail.com

## ஆசிரியரிடமிருந்து...

இன்றைய இலங்கைச் சூழலில் பாடசாலைக் கல்விமுறை பரீட்சையை மையப்படுத்தியதாகவே அமைந்துள்ளது. வினாப்பத்திரத்தின் கேள்வி அமைப்புக்கேற்ப மாணவர்களின் அறிவு மட்டமும் வரையறுக்கப்பட்டுவிட்டது. பாடசாலை மாணவர்களின் அறிவு விருத்திக்கும், படைப்பாற்றல் விருத்திக்கும் அடித்தளம் இடும் வகையில் கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. இன்று, பாடவிதானத்தில் உள்ளவற்றையே மீண்டும் மீண்டும் மனப்பாடம் செய்யத் தூண்டுவது பொது வழக்காகவும், பொது வியாதியாகவும் மாறிவிட்டது.

க.பொ.த உயர்தர மாணவர்களைப் பொறுத்தமட்டில், குறிப்பாக கலைத்துறை மாணர்களின் கற்றல், கற்பித்தல் பொறிமுறைகள் பழைய தளத்திலேயே சென்று கொண்டிருக்கின்றது. பாடவிதானத்தோடு, தொடர்புடைய பரந்த அறிவை மாணவர்கள் பெற்றுக்கொள்வது மிக மிகக் குறைவு. இதற்கு அறிவுச் சமூகமே பொறுப்புக் கூறுதல் வேண்டும்.

2009 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு, எழுதப்பட்ட கட்டுரைகளை உள்வாங்கி "மலைமுகடு" காலாண்டு இதழாக வெளிவருகின்றது. கலைத்துறைப் பாடங்களான தமிழ், அரசறிவியல், புவியியல் ஆகியவற்றோடு தொடர்புடையதாக ஒவ்வொரு கட்டுரையும் அமைந்துள்ளதை ஆசிரியர்களும், மாணவர்களும் உணர்ந்துக் கொள்ளுவர்.

ஆசிரியர்களிடமிருந்தும், மாணவர்களிடமிருந்தும் வரும் தரமான ஆக்கங்கள் அடுத்துவரும் இதழ்களில் பிரசுரமாகும்.

மலைமுகடு இதழ் க. பொ. த உயர்தர மாணவர்களின் அறிவுமட்டத்தை விசாலிக்கும் நோக்கோடு வெளிவருகின்றது. அவ்வகையில் "அறிவுச் சமூகத்தை நோக்கிய பயணத்தின்" ஒரு தொடக்கப் புள்ளியாக இவ்விதழ் அமைவதற்கு ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் ஒத்துழைப்பை நாம் வேண்டி நிற்கின்றோம்.

இவ்விதழுக்கு ஆக்கங்களைத் தந்துதவிய அனைவருக்கும் எமது நன்றி.

'மலைமுகடு' இதழின் அறிவுப் பயணம் தொடரும்...

பெருமாள் சரவணகுமார்

# தேடி வாசித்தலின் தேவை

## சி.சிவசேகரம்

தகவல்களைப் பெறுவதும், அவற்றைப் பரிமாறுவதும் எல்லா மனிதரதும் உரிமை. தகவல் பரிமாற்றத்தில் பேச்சு மட்டுமே ஆதிக்கத்தில் இருந்த காலம் ஒன்று இருந்தது. அது மிகவும் வரையறைப்பட்டு இருந்தது. எழுத்தின் வருகை தகவல்களின் பதிவின் மூலம் தகவல்கள் பரிமாறலின் கால எல்லையை நீட்டியது. பிரதியெடுத்தல் மூலமே சமூகத்தில் தகவல்கள் பெருமளவில் பலரையும் எட்ட இயலுமாயிற்று. நவீன உற்பத்தி முறைகள் வருமுன்பே நூல்கள் இருந்தன. அவை மிகுந்த சிரமத்துடன் பிரதியெடுக்கப்பட்டன. எனவே நூல்கள் எல்லோரையும் எளிதில் எட்டவில்லை. அவை சான்றோர் எனப்பட்டோருக்கே வரையறைப்பட்டிருந்தன எனலாம். அச்சியந்திரத்தின் வருகை தகவல்களின் சனநாயகப்படுத்தலின் தொடக்கப்புள்ளி எனலாம். அதையடுத்தே செய்திகள் மக்களிடையே பரவுவது இலகுவானது. நீண்ட காலமாக நாம் செய்திகட்கு அச்சு ஊடகத்தையே பெரிதும் நம்பியிருந்துள்ளோம்.

காட்சி ஊடகத்தின் வருகையால் நிலைமைகள் மாறின. ஒலியும், ஒளியும் இணைந்த சினிமாவின் வருகை கதைகூறலில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவந்தது. ஒரு வகையில் காட்சிப்படுத்தல் வாசிப்புச் சோம்பலுக்கு காரணமாய் இருந்தது என்றாலும், அதன் காரணமாக வாசிப்பு அழிந்துவிடவில்லை. அதற்கு ஒரு காரணம், சினிமாவைப் பார்க்க ஒருவர் வீட்டை விட்டுச் செல்லவேண்டும் என்பதாகும்.

தொலைக்காட்சியின் வருகை கூட உடனடியாக வாசிப்பின் மீது பெருமளவு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. எனினும், நவீன தகவல் தொழில்நுட்பமும், உலகமயமாக்கலும் நிலைமைகளை மிகவும் மாற்றியுள்ளன. பார்ப்பதற்குக் கிடைக்கக்கூடிய தொலைக்காட்சி "வாய்க்கால்களின்" (Channels) எண்ணிக்கை மட்டற்றுப் பெருகி வருவதும், சிந்தனைக்கு எவ்விதமான சவாலாகவும் அமையாத சின்னத்திரைச் சித்திரங்களின் பெருக்கமும் வாசிப்பிற்கு இடையூறு செய்துள்ளன.

வானொலியில் 5 - 10 நிமிடத்திற் சொல்லக்கூடிய தகவல்கள் அதிகம் பயனற்ற முறையில் அமைந்த காட்சிகளின் துணையுடன் அரை மணி நேரம் வரை இழுத்தடிக்கப் படுகின்றன. அதற்கும் மேலாக செய்திகளின் வடிகட்டலும், திரிப்பும், அறிய அவசியமான விடயங்களில் இருந்து கவனத்தைத் திருப்புகிற விதமாக, பெரும் பரபரப்பிற்கும், கிளுகிளுப்புக்குமான சில்லறைத் தகவல்களும் செய்திகளில் இருந்து உண்மைகளை அறியும் அக்கறையைக் கெடுக்கின்றன.

இணையத்தளங்களின் வருகை முக்கியமான ஒரு வகையில் தகவல் பரிமாற்றத்தைத் துரிதப்படுத்தி எளிதாக்கியுள்ள போதும், இணையத்தளங்கள் வழங்குகின்ற வாசிப்பு முறையும், தகவல்களைத் தேடிப் பெறும் முறையும், ஒருவரிடம் தகவல்களை உறுதிப்படுத்தும் பழக்கம் இல்லாதபோது, கண்ணில் படுகின்ற எதையும் அப்படியே ஏற்றுக்கொள்ளுகிற ஒரு போக்கை ஊக்குவிக்கின்றன. இதன் விளைவாகப் பெரிய ஊடக நிறுவனங்களால் தகவல் பரிமாற்றத்தின் மீது ஆதிக்கம் செலுத்த முடிகிறது.

இவற்றுக்கு மாறாக, இணையத் தளத்தில் ஆழமான விசாரணைகளை மேற்கொள்ள இயலும். அதற்கு அடிப்படையாக நூல்களதும், சஞ்சிகைகளதும் வாசிப்புப் பழக்கமும், தகவல்களை ஒப்பிடும் பழக்கமும் அமைகின்றன. தொடர்ச்சியான வாசிப்புப் பழக்கம் இருப்பவர்களுக்கு மட்டுமே ஒப்பிடுவதும் விசாரிப்பதும் எளிதிற் கைவருகிறது. எனவே வாசிப்பு என்பது சிந்தனை விருத்தியில் முக்கியமான பங்களிக்கிறது.

வாசிப்பதும், வாசித்தவற்றை நினைவில் இருத்துவதும், முன்னர் வாசித்தவற்றுடன் தொடர்புபடுத்துவதும் பயிற்சியின் மூலமே கைகூடுவன.

சிறுவயதில் நாம் எல்லாருமே செய்ய எளிதானவற்றையே செய்ய விரும்புகிறோம். எதையாவது அறிய விரும்பினால், எதற்குக் குறைவான முயற்சி தேவைப்படுகிறதோ அதையே தெரிகிறோம். அதன் விளைவாகச் சில ஆற்றல்கள் நமக்கு மறுக்கப்படுகின்றன. சில பழக்கங்களை இளவயதில் ஏற்படுத்திக் கொள்ளாவிடின் வயது வந்த பின்பு அவற்றைக் கைக்கொள்வது கடினமாகிறது.

வாசிப்பு என்பது படிநிலைகளில் விருத்தி பெறுகிறது. முதலில் வருவது வாசித்தறியும் அக்கறையின் உருவாக்கம். இதன்போது அடிப்படை எழுத்தாற்றலும், வாசிப்புப் பழக்கமும் நிலைபெறுகின்றன. அடுத்ததாக வாசித்ததை விளங்கி ஆராயும் சிந்தனைப் பயிற்சி. இது வெறுமனே பாடங்களுக்கு மட்டுமன்றி பொதுவாக எல்லாவிதமான தகவல்கட்கும், கதை, கவிதை போன்றனவற்றுக்கும் பொருந்தும். இதன்போது தொடர்ச்சியாக நீண்ட வாசிப்பு முயற்சிகள் இடம்பெறுகின்றன. வாசிப்பைப் பற்றிய கருத்துப் பரிமாற்றமும் இடம்பெறுகிறது. அதன் பின்பு வாசித்ததை விளங்குவதோடு மட்டுமன்றி, அதைப் பல்வேறு அளவுகோல்களின் அடிப்படையில் மதிப்பிடவும், தனக்குள்ளேயே விவாதித்து முடிவுகளை வந்தடையவும் இயலுமாகிறது.

மனிதர் அகச்சார்பான சிந்தனை உடையோர். நம் அகவிருப்பங்களே நம்மை இயக்குகின்றன. அகவிருப்பங்கள் சமூக அக்கறையையொட்டி விருத்தி பெறும்போது சுயநலமற்ற மனிதராக நாம் வளரலாம். எனினும் அகவிருப்பங்கள் நம் கண்ணை மறைக்கும்போது நாம் உண்மைகளைத் தவறவிடுகிறோம். இங்குதான் வெறுமனே நமக்கு மனநிறைவைத் தரக்கூடியதும், நம்முடைய நம்பிக்கைகளைக் கேள்விக்குட்படுத்தாததுமான விடயங்களை மட்டுமே வாசிப்பது நமக்குக் கேடாகிறது. நாம் நம்புவது உண்மையேயானாலும் மாற்றுச் சிந்தனைகளையும், சவால்களையும் அந்த உண்மை எதிர்கொள்ளவேண்டும். நமது வாசிப்பு அவற்றை உள்ளடக்கவேண்டும்.



தேடி வாசித்தல் என்பது நாம் அறியாத விடங்களை அறியும் நோக்குடனும், அறிந்தவற்றை மேலும் ஆழமாக அறியும் நோக்குடனும், நாம் அறிந்தவற்றுக்கு முரணான விடயங்களை அறியவும், ஒவ்வொன்றினதும் மெய், பொய்யை அறியவுமான நோக்கையுடையது வாசிப்பு.

நாம் எதைத் தேடுகிறோம்? எவ்வாறு தேடுகிறவற்றைப் பெறுகிறோம்? எவ்வாறு அவற்றால் பயன் பெறுகிறோம்? என்பன, நமது மனத்தை எவ்வாறு வளப்படுத்தி விருத்திசெய்கிறோம்? என்பதை முடிவு செய்கிறது.

எனவே எதையும் வாசிக்க ஆயத்தமாகவும், அவ்வாசிப்பின் பயனாக மேலும் பயனுள்ள வாசிப்புக்களை மேற்கொள்ளுமாறாகவும் நாம் நமது வாசிப்பை விருத்திசெய்வது முக்கியமானது.

இணையத்தள வாசிப்பு தீங்கானதல்ல, ஆனால் இணையத்தளங்களுக்குள் முடக்கப்பட்ட வாசிப்பு தேடலுக்கும் பயனுள்ள வாசிப்புக்கும் தடையாகலாம். ஆகவே அதை நூல்களினதும், சஞ்சிகைகளதும், பத்திரிகைகளதும் வாசிப்பின்மூலம் நாம் பயனுள்ளதாக்கலாம்.

வாசிப்பை ஊக்குவிப்பதில் பெற்றோரின் பங்கு முக்கியமானது. பிள்ளைகளின் வாசிப்பை நெறிப்படுத்துவதில் அவர்கட்கு ஒரு பெரும் பங்குண்டு. அதைச் செய்யத் தவறும்போது அவர்கள் பிள்ளைகளின் அறிவாற்றல் விருத்திக்கு ஊறுசெய்தோராவர்.

# என். எஸ். எம். ராமையாவின்
# ஒரு கூடைக் கொழுந்து - ஒரு விமர்சன நோக்கு

- கலாநிதி துரை. மனோகரன் -
தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

இலங்கைத் தமிழ்ச் சிறுகதைச் வளர்ச்சியில் மலையக எழுத்தாளர்களின் பங்களிப்பும் கணிசமானது. இந்நாட்டின் தமிழ்ச் சிறுகதைத் துறையைத் தொடக்கிவைத்த பெருமை கோ. நடேசய்யருக்கு உரியது. இப்போது கிடைக்கும் தகவல்களின்படி, அவரது சிறுகதை, இலங்கையின் முதலாவது சிறுகதையாகக் கொள்ளத்தக்கது. அறுபதுகளில் இருந்து ஓர் ஆற்றல் வாய்ந்த சிறுகதை எழுத்தாளர் பரம்பரையொன்று மலையகத்தில் தோற்றம் பெறுகிறது. என். எஸ். எம். ராமையா, தெளிவத்தை ஜோசப், சாரல்நாடன், திருச்செந்தூரன், ஏ.வி.பி. கோமஸ், மலரன்பன், மாத்தளை வடிவேலன், மாத்தளை சோமு, மு. சிவலிங்கம், மொழிவரதன், கே. கோவிந்தராஜ் உட்படக் கணிசமானோர் பல்வேறு புதிய பொருட்பரப்பில் தமது சிறுகதைகளை எழுதிவந்துள்ளனர். மலையகச் சிறுகதைகள் பற்றிப் பேராசிரியர் க. கைலாசபதி குறிப்பிடும்போது,

> "பிரதேச வாழ்க்கையைப் பொருளாய்க் கொண்டு எழுதப்பட்டு வந்துள்ள படைப்புக்களில், பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்குக் களமாக உள்ள மலைநாட்டை மையமாகக் கொண்டு எழுதப்படிருப்பனவற்றிற்குத் தனியிடமுண்டு. சிறுகதை, நாவல், நாடகம், கவிதை என்ற இலக்கிய பிரிவுகளில் சிறுகதையே மலைப்பிரதேசம் பற்றிய படைப்புகளில் முதலிடம்பெற்றுள்ளது எனலாம்."

எனத் தெரிவித்துள்ளார்.

மலையகச் சிறுகதை எழுத்தாளர்களுள் படைப்பாளுமை மிக்கவருள் ஒருவராக என்.எஸ்.எம். ராமையா விளங்குகின்றார். 1960களில் எழுத்துத்துறைக்குள் நுழைந்தவர், அவர். ஆரம்பத்தில் நாடகத்துறையில் ஈடுபாடு காட்டிவந்த என். எஸ். எம். ராமையாவைச் சிறுகதைத்துறையில் ஈடுபடுத்தியவர், க. கைலாசபதி. 1990 வரை வாழ்ந்த அவரின் பன்னிரண்டு சிறுகதைகள் ஒரு கூடைக் கொழுந்து என்னும் தொகுதியாக நூலுருவம் பெற்றுள்ளன.

என். எஸ். எம். ராமையாவின் சிறுகதைகளுள் ஒரு கூடைக்கொழுந்து என்ற படைப்பு இங்கு நோக்கப்படுகின்றது. "அக்கா எனக்கு எது நெறை?" என்று தொடங்கும் இச்சிறுகதை மிகக் கட்டுக்கோப்புடன் அமைந்துள்ளது. லட்சுமி கொழுந்து எடுப்பதற்காக வெற்றுக் கூடையுடன் தோட்டத்திற்குச் செல்கிறாள். வழமையாக அவளை வரவேற்கும் 'வயசுப் பெண்கள்' கூட அவளைப் பொருட்படுத்தாமல் இருக்கிறார்கள். கங்காணியிடம் போய்த் தனக்கு நிறை எங்கே என்று கேட்டபோதும், வழமைக்கு மாறாக அவன் எரிந்து விழுந்தான். 'தொலைஞ்சுப்போ! கடேசித் தொங்கலுக்கு!" என்று அனுப்பிவைக்கிறான். அவளும் அப்படியே சென்று கொழுந்தெடுத்துவிட்டு மாலை நான்கு மணிச் சங்கு ஊதியதும், மற்றவர்களோடு ஸ்டோருக்கு முன்னால் வந்து நிற்கிறாள். அப்போது இளைஞனான கணக்கப்பிள்ளை முன்னர் ஐம்பது ஏழு இறாத்தல் கொழுந்து எடுத்ததைப் போலத் திரும்பவும் ஒன்பது மணிக்கும் ஒரு மணிக்கும் இடையே அதேயளவு கொழுந்து எடுத்துக்காட்ட முடியுமா? என்று கேட்கிறார். தன்னால் அந்தளவு கொழுந்து எடுத்துக்காட்டமுடியும் என்று திடமாகச் சொல்கிறாள். அவளுடையஎதிர்காலக் கணவன் ஆறுமுகம்தான் சில நாட்களுக்கு முன்னர் அவளுக்கு உதவியாகக் கொழுந்து கிள்ளிக் கொடுத்து, ஐம்பத்து ஏழு இறாத்தல் பிரச்சினையை ஏற்படுத்தியவன். அவன் அவளுக்கு ஏற்பட்ட தற்போதைய பிரச்சினையிலும் அவளுக்குக் கொழுந்து கிள்ளிக்கொடுத்து உதவலாம் என விரும்புகிறான். ஆனால், லெட்சுமி அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. மிகவும் சிரமப்பட்டு அறுபத்தொரு இறாத்தல் கொழுந்து எடுத்தாள். கணக்கப்பிள்ளை அவள் எடுத்த கொழுந்தில் குறை காண்கிறார். நார்க்குச்சியும், முற்றிய இலைகளுமாக இருப்பதனாலே அறுபத்தொரு இறாத்தலைத் தரமுடியாது. இருபது இறாத்தலைக் குறைக்கப்போவதாகச் சொல்கிறார். கங்காணிக்கிழவன் மனம் நொந்து, லெட்சுமியின் ஆள்காட்டி விரலின் ஓரப்பகுதிகள் இரண்டும் தோல் கிழிந்து இரத்தம் கசிந்து உறைந்துபோயிருப்பதைக் கணக்கப்பிள்ளைக்குக் காட்டி, அது எத்தகைய கொழுந்தாக இருந்தாலும், அதனை எடுத்தது அவளின் கை. அவளுக்குரிய நிறையைக் கொடுக்காமல் இருப்பது தவறு என்பதைச் சுட்டிக்காட்டுகிறான். கணக்கப்பிள்ளை காலைக் கொழுந்தின் நிறையோடு

அறுபத்தொரு இறாத்தலையும்சேர்த்துப் போடுகிறார். லெட்சுமி, தனது சபதம் நிறைவேரிய பின்னரும்கூட அந்த மலையில் வேலை செய்ய விரும்பாதவளாய் வேறு மலைக்குப் போகிறாள். "அவள் போன பிறகுதான் 'ஐயாவுக்கு அவள்மீது உண்மையில் காதல் பிறக்கத் துவங்கியது!" எனச் சிறுகதையை முடிக்கிறார், என். எஸ். எம். ராமையா.

இச்சிறுகதை மையக்கருவை நோக்கி அழகாக நகர்த்தப்படுவது, இதன் சிறப்பம்சங்களில் ஒன்றாகும். லெட்சுமிக்கு அதிகமாக நிறை போடப்பட்டுவிட்ட பொறாமையால் அவளோடு வழமையாக நன்றாகப் பழகும் "வயசுப் பெண்கள்" கூட அவளோடு அன்று பேசாமல் இருக்கும் சூழ்நிலையைக் கதாசிரியர் அழகாகக் காட்டுகிறார். "இங்கே வாடி லெட்சுமி! என்கிட்டே நிறை தாரேன்," "ஐயோ! லெட்சுமிக்குட்டி! என்கிட்டே நிற்கட்டுண்டி" என்றெல்லாம் நாலாபக்கத்தில் இருந்தும் வரும் அழைப்புகளை அவளைக் கண்டதும், இருக்கும் இரண்டு முன் பற்களும் தெரியச் சிரித்தவாறு "என்ன ஆயி! இப்பத்தான் வாறியா? போ போ ........ முப்பத்திரண்டாவது நிறை ஒனக்கு. அய்யா வர்றத்துக்குள்ளே ஓடு" என்று கனியும் கங்காணிக் கிழவன் கூட அவள்மீது அன்று எரிந்துவிழுந்தான். இவ்வாறு, அவளுக்கு எதிரான சூழ்நிலையொன்று உருவாகியிருப்பதைக் காட்டி, கதையை ராமையா நகர்த்திச் செல்கிறார்.



கதையினூடாகக் கொழுந்து எடுக்கும் களத்தையும் காட்சிப்படுத்துகிறார், கதாசிரியர். வழக்கமாகக் கொஞ்சம் அதிகமாகவே நிறைபோட விரும்பும் எடுவைக்காரிகள் (கொழுந்து பறிப்பவர்கள்) மலையில் முதல் தொங்கல் கடைசித் தொங்கலுக்குப் போவதே இல்லை. அதற்கான காரணத்தையும் அவர் குறிப்பிடுகிறார்.

"முதல் தொங்கலென்றால் ஒழுங்கான நிறை கிடையாது. எல்லாம் குறை நிறைகளாக ஆயிரம் தடவை ஏறியிறங்கவேண்டும். கடைசித் தொங்கலென்றால் பிள்ளைக்காரிகளோடை 'மாரடிக்க' முடியாது. ஆடி அசைந்து அம்மன் பவனி வருவதுபோல் எட்டுமணிக்குத்தான் வருவார்கள். ஒருமணிநேரம் ஏதோ பெயருக்கு நாலைந்து றாத்தலை எடுத்துவிட்டு ஒன்பது மணிக்கெல்லாம் 'அடியே ஏங்கொழுந்தையும் நிறுத்துர்நீ...' என்று பல்லைக் காட்டிவிட்டு லயத்துக்கோ பிள்ளைக்காம்பிராவுக்கோ போய்விடுவார்கள். அவர்களுடைய கொழுந்தையும் நிறுத்துக்கொள்ளவேண்டும். கூடையையும் பார்த்துக்கொள்ளவேண்டும். போதாத குறைக்கு அவர்களுடைய நிறையையும் சேர்த்து எடுத்துப்போக வேண்டும். இந்தத் தொல்லைகளுக்காகத்தான் அவள் அங்குமிங்கும் போவதில்லை. அவளுடைய கலகலத்த சுபாவமும் எளிமையான அழகும் மற்றப் பெண்களுக்கு மத்தியில் ஒரு தனித்துவத்தை ஏற்படுத்தி இருந்தன. ஆகவே, அவளை மற்றப் பெண்களும்போகவிடுவதில்லை."

கொழுந்து எடுக்கும்போது முதல்பிடிக் கொழுந்தைக் கூடைக்குள் போடும்போது பக்கத்தில் இருப்பவர் பொலி சொல்வது ஒரு மரபு. அதற்கேற்பப் பக்கத்தில் கொழுந்து பறித்துக்கொண்டிருந்த கிழவியைக் கொண்டு பொலி சொல்லச் சொல்லி முதல் பிடிக் கொழுந்தைக் கூடையில் போடுகிறாள், லெட்சுமி. "அம்மாயி" பொலி சொல்றியா, கொழுந்தைப் போட்டுக்கிறேன்.." என்று லெட்சுமி கேட்க, கிழவியும் "போடு அப்பனே, சம்முகா! பொலியோ ....பொலி ....பொலி... பொலி" என்று சொல்வதைக் கதாசிரியர் காட்டுகிறார்.

இந்தச் சிறுகதையில் இடம்பெறும் பாத்திரங்களின் சித்திரிப்பைத் தத்ரூபமாகச் சொல்லிருக்கிறார் கதாசிரியர் ராமையா. இதில் இடம்பெறும் கணக்கப்பிள்ளை பற்றிய சித்திரிப்பு பின்வருமாறு அமைகிறது.

"அவர் அரைந்து வந்துநின்ற தோரணையும், ஆட்களைப் பார்த்த விதமும், ஏதோ தவறுதலாகக் கறுப்பாகப் பிறந்துவிட்ட வெள்ளைக்காரனைப் போலிருந்தது. பேச்சும்கூடச் சுத்தத் தமிழாக இருக்காது. வெள்ளைத்துரை ஒருவன் சிரமப்பட்டு 'டமில்' பேசுவதுபோலிருக்கும். நாமாக இருந்தால் சிரித்திருப்போம் 'அது' களுக்கு முன்னால் இப்படி ஜபர்தஸ்து பண்ணுவதில் ஒருசில விடலைப் பிள்ளைகளுக்கு என்னமோ ஓர் 'இது!'

இதே கணக்கப்பிள்ளை தம்மீது களங்கம் ஏற்படக் கூடாதென்று சங்கடப்படுவதையும் கதாசிரியர் காட்டுகிறார்.

"லெட்சுமி! உங்க எல்லாருக்கும் நல்லாத்தெரியும். கணக்கப்பிள்ளைகளுக்கு 'பொம்பிளைகேஸ்' எவ்வளவு ஆபத்தானதுன்னு. அதிலேயும் நான் கல்யாணம் கட்டாதவன். அப்படிப்பட்டவங்களுக்கு சும்மா கட்டுக் கதையைக் கட்டவிட்டாக்கூட நெசம்னு எங்க மேலிடம் நம்பும். இது உனக்குநல்லா தெரியும். என்னைவிட நல்லா எடுக்கக்கூடிய ஆளுக உனக்கு முந்தியே பேரு பதிஞ்சு எத்தனையோ வருஷம் 'சர்வீசு' உள்ள ஆளுக இங்கே இருக்கு.

அவுகளை எல்லாம்விட போனவருஷம் வேலைக்கு வந்த நீ ஐம்பத்து ஏழு றாத்தல் எடுத்தது எல்லோருக்கும் ரொம்ப சந்தேகத்தைக் குடுத்திருக்கு. ஆனா இன்னம் யாராவது என்கிட்டே நேரே கேட்கலை. அவுங்களுக்குள்ளே பேச்சு நடக்குதாம்."

கணக்கப்பிள்ளைக்கு ஏற்பட்ட இச்சங்கடமே, லெட்சுமிக்குப் பிரச்சினையாகிவிட்டது.

இச்சிறுகதையில் இடம்பெறும் இன்னொரு முக்கிய பாத்திரம், கங்காணிக்கிழவன். இயல்பாகவே லெட்சுமிமீது இரக்க சுபாவம் உள்ளவன் அவன். ஆனால், கணக்கப்பிள்ளையைக் கண்டு 'ஐயா! என்று கூறும்போது அவனது முதுகு கூனிவிடும். 'இந்த' ஐயாப்பட்டம் போடும்போது ஏன்தான் முதுகு கூனுகிறதோ? " என்று கிண்டலாகக் கதாசிரியர் எழுதுகிறார். லெட்சுமி அதிகமாகக் கொழுந்து எடுத்த விவகாரத்தைக் கணக்கப்பிள்ளைபெரிதுபடுத்தாமல் விடவேண்டும் என்று கங்காணி முயற்சிக்கிறான். "இப்ப...அது கிடந்துட்டு போகுதுங்க.." என்று சொல்லி சொல்லிசமாளிக்கப் பார்க்கிறான். ஆனால், அது அவனால் முடியவில்லை. கணக்கப்பிள்ளையின் உத்தரவுப்படி லெட்சுமி அறுபத்தொரு இறாத்தல் கொழுந்து எடுத்தபோதும், அவர் அதில் குறைகண்டார். அந்தச் சந்தர்ப்பத்தில் கங்காணி இயங்கிய முறைதான் இச்சிறுகதைக்குப் பெறுமதியைத் தருகிறது. இப்படைப்பின் உச்சக்கட்டமாகவும் கங்காணியின் இயக்கமே அமைந்துள்ளது.

"ஐயா!' கங்காணிக் கிழவன் வெறித்துப் பார்த்தான். விடுவிடென்று லெட்சுமி அருகில்போய் அவளது வலதுகையின் ஆள்காட்டி விரலைப் பிடித்து அவர்முன் காட்டினான். அந்த விரலின் ஓரப்பகுதிகள் இரண்டும் தோல்கிழிந்து இரத்தம் கசிந்து உறைந்துபோயிருந்தன. "இதைப் பார்த்துவிட்டுப் போங்க ஐயா, இது நல்ல கொழுந்தோ, கெட்ட கொழுந்தோ இவ்வளவையும் எடுத்தது இந்தக் கையி! இந்த றாத்தலைத் தரமாட்டேன்னு சொலிறீங்க? "

கணக்கப்பிள்ளையைக் காணும்போதெல்லாம் முதுகு கூனி, பயபக்தியோடு காட்சியளிக்கும் கங்காணிக்கிழவன், ஓர் அநியாயம் நிகழும்போது தட்டிக்கேட்கிற பாத்திரமாகவும் உயர்ந்து நிற்கிறான். என்.எஸ். எம். ராமையாவின் பாத்திரவார்ப்புத் திறமையை இது காட்டுகிறது.

ஒரு கூடைக்கொழுந்தின் நாயகி லெட்சுமியும் சிறப்பாகப் படைக்கப்பட்ட ஒரு பாத்திரமாகும். தொழில் விசுவாசம் கொண்ட அவளுக்குச் சவால் ஏற்படும்போது அதனை எதிர்கொள்ளும் பாத்திரமாக அவள் படைக்கப்பட்டுள்ளாள். முதல் தடவை அவளது எதிர்காலக் கணவன் ஆறுமுகம் கொழுந்து பறித்துக்கொடுத்து உதவியதைப் போல, அவளுக்குப் பிரச்சினை ஏற்பட்ட சமயத்திலும் லெட்சுமிக்கு உதவ விரும்புகிறான். அதனை மறுத்த அவள்,

"நானே எடுக்கிறேன். முடிஞ்சமட்டும் எடுக்கிறது. முடியாட்டிதுண்டு வாங்கிக்கிட்டு மத்த மலைக்குப் போறேன். இல்லே இஸ்டோருக்கு எல பொறக்கப் போறேன். மலையில இருந்தாத்தானே ஐயாமேல சந்தேகப்படுவாங்க?'


என்று கூறுவது, அவளது மனத்திண்மையைக் காட்டுகிறது.

சிறுகதையின் முடிவும் லெட்சுமியின் பாத்திரப் பண்பை இனங்காட்டுகின்றது. 'சபதம் நிறைவேறாவிட்டால் மற்ற மலைக்கு மாறிப்போகிறேன் என்று சொன்னவள் சபதம் நிறைவேறிய பின்பும் அந்த மலையில் நிற்க விரும்பவில்லை. அவள் போனபிறகுதான் 'ஐயாவுக்கு அவள்மீது உண்மையில் காதல் பிறக்கத் துவங்கியது!' என்று இச்சிறுகதை முடிகின்றது.

என்.எஸ். எம். ராமையாவின் பாத்திரங்கள் இயல்காக வார்க்கப்பட்டமைக்குப் பிறிதோர் எடுத்துக்காட்டாக விளங்குவது, லெட்சுமியின் எதிர்காலக் கணவனான ஆறுமுகம். சாயந்தரவேளைகளில் அவன் அவள் வீட்டுக்கு வந்தால் கொஞ்சநேரம் எல்லோருடனும் பொதுவாகப் பேசிவிட்டு லெட்சுமியுடன் தனியாகக் கொஞ்சம் பேசுவான். ஐம்பத்து ஏழு இறாத்தல் கொழுந்துப் பிரச்சினைகூட அவனால ஏற்பட்டதுதான். லெட்சுமிக்கு நல்லத செய்யப்போய், அவளுக்குப் பிரச்சினையை ஏற்படுத்திவிட்டான் அவள் திரும்பவும் அதேயளவு கொழுந்து எடுத்துக்காட்டவேண்டும் என்று கணக்கப்பிள்ளை உத்தரவு போட்டபோதும் அவளுக்கு உதவ அவன் விரும்பினான். ஆனால், லெட்சுமி அதற்கு உடன்படவில்லை. தோட்டத்தில் வேலை செய்யும் ஆண்களுக்கு வேலை ஒரு மணியோடு முடிந்தாலும், அவன் பன்னிரண்டு மணிக்கே கங்காணியிடம் பல்லைக்காட்டிவிட்டு நழுவிவிடும் துணிச்சல் பேர்வழிகளுள் ஒருவனாக இருந்தான். கதை நகர்வுக்குத் துணை செய்யும் ஒரு பாத்திரமாக ஆறுமுகம் விளங்குகிறான்.

ஒரு கூடைக் கொழுந்து, சிறுகதைக்குரிய கட்டுக்கோப்போடு அமைந்துள்ளது. பாத்திரங்களின் இயல்புக்கேற்ப உரையாடலைச் சிறப்பாக ராமையா பயன்படுத்தியுள்ளார். இந்தச் சிறுகதைக்கு வலுவும், வனப்பும் சேர்ப்பதில் மலையகப் பேச்சுவழக்கைப் பாத்திர உரையாடல்களில் இலாவகமாகக் கையாண்டுள்ளமையும் முக்கிய பங்களிப்புச் செலுத்தியிருக்கிறது.

என்.எஸ். எம். ராமையா படைத்த சிறந்த சிறுகதைகளுள் ஒன்றாக ஒரு கூடைக் கொழுந்து விளங்குகிறது. கதைக்கரு, பாத்திரவார்ப்பு, கதைசொல்லும் திறன், சிறுகதைக் கட்டுக்கோப்பு முதலிய அனைத்திலும் சிறந்து விளங்குவதாக இச்சிறுகதை அமைந்துள்ளது. இலங்கைச் சிறுகதை வளர்ச்சியின் அடையாளத்தைக் காட்டுவதாகவும் ஒருகூடைக் கொழுந்து விளங்குகின்றது.



## மலர்களின் வாழ்வும் மானிடனும்

மானிட மேன்மைக்காய் மலர்ந்தோம்
ஒருநாள் ஆயுள் என்றாலும்
பல நன்மை செய்துவிட்டே
மடிந்தோம்...
கடவுளின் அர்ச்சனைப் பூக்களாய் - ஒருநேரம்
காதலின் சின்னமாய்....
இரு மனங்களின் திருமணத்தில்
மணமாலையாய்..
பெண்களின் நீள்கூந்தலில்
சிரிக்கும் மல்லிகையாய் ஆனோம்....
இப்படி எத்தனையோ?
என்றாவது மனிதன்
எங்களைச் செடியில் சிரிக்கவிட்டு
பார்த்தானா!
நாம் எம் உறவுகளிடமிருந்து
பறிக்கப்பட்ட வேதனையை அவன் அறிவானா?
வாய்ப்பேசாப் பூக்கள் நாங்கள்
பிறர்தீங்கு மறந்தோம்!
மானிடன் மட்டும் ஏனோ
சிந்தனை மிருகமாய்
மாறியது ஏனோ?
நாம் பூக்களாய் பிறந்தது
மனிதம் எனும் பூவைப் பார்ப்பதற்கே!

ஜோ. ஜெகதீஸ்வரன்

# நீர்மலி கண்ணொடு நினைப்பாகின்றே!


## கலாநிதி வ. மகேஸ்வரன்

தமிழ்த்துறைத் தலைவர்,

பேராதனைப் பல்கலைக்கழகம்.


குறிஞ்சிநிலத்துத் தலைமகள் ஒருத்திக்கு தலைவன் ஒருவனுடன் (குறிஞ்சி நாடன்) – கேண்மை (நட்பு) – அன்புடை நெஞ்சம் தாம் கலந்த உறவு உண்டாயிற்று; அந்த உறவு களவு ஒழுக்கத்தில் இனித்தது – ஆயின், களவு முற்றிக் கற்பாக அது மாறவில்லை. இருவரது மனங்களுள்ளேயே அந்த நட்பு நிலைத்தது. தோழி மாத்திரமே இதை அறிந்திருந்தாள். இப்போ தலைவன் வரை போருக்குச் சென்று விட்டான். விரைவில் மீளுவேன் என்றவன் காலந்தாழ்த்தினான். தலைவிக்குப் பிரிவைத் தாங்க முடியவில்லை. வெளியில் காட்டிக் கொள்ளவும் முடியவில்லை. அவனது நினைப்பு அவளது நெஞ்சக் கூட்டுக்குள் நின்று நிலை குலைத்தது. ஒருவேளை தலைவனுடன் தான் கொண்ட உறவு தகாதது ஒன்றோ! என அவள் மனம் பேதலிக்கிறது. எனினும், அந்த நினைப்பு – அந்த உறவு அவளைப் பேதலிக்கச் செய்கிறது. அவளது கண்களிலிருந்து பெருகும் கண்ணீரே அதனை வெளிப்படுத்துவதற்கான வடிகாலாக அமைகின்றது. தோழியொருத்திக்குத் தன் மன அவசத்தை எடுத்துரைப்பதனூடாகவே அவள் மனம் ஆறுதல் கொள்ள முடியும்.

“தோழியே எனது தலைவனுடனான எனது நட்பு உண்மையாகாமல் என் நினைவில் மட்டுமே நின்று என்னைப் பெரிதும் வருத்துகின்றது” என்று கூறுகின்றாள். இந்தச் செய்தியை அனுபவமிக்க சங்கப் புலவன் நுணுக்கமாகக் கவிதையாக்குகின்றான்.

முதலில் தலைவன் பற்றிய தகவலை அவள் கூறுவதாக அப்பாடல் அமைகின்றது.

“தோழி! குறவனுடைய தோட்டத்தில் விளைந்த பொன்போன்ற சிறிய தினையில் புதிது உண்ணும் கடவுளுக்குப் படைப்பதற்காக ஒதுக்கப்பட்ட செழுமையான கதிரினை அறியாது (அது தெய்வத்துக்கு ஒதுக்கப்பட்டது என) உண்ட மயிலானது ஆடுமகளானவள் வெறியுற்று ஆடுகின்ற தன்மையை (அழகை) ஒத்து துன்புற்று நடுங்குதலைச் செய்கின்ற செயலுக்கு இடமானதும், அச்சம் தருகின்ற தெய்வங்கள் வாழுகின்றதுமான மலைநாட்டையுடைய தலைவன் அத்தலைவனுடனான நட்பானது, நீர் நிறைந்த கண்களுடனுன் வருந்தி நினைப்பில் மாத்திரம் நிலைக்கின்ற தன்மையுடையதாயிற்றே என்கிறாள். சங்க அகத்திணைக் கவிதையாக்கம் என்பது மன உணர்வுகளின் வடிகாலாக அமைவதை இப்பாடல் ஊடாக உணரலாம்.'

இப் பாடலில் முதலில் தலைமகன் சுட்டப்படுகின்றான். அவன் 'மலைநாடன்' – மலை நாட்டின் தலைவன், நாடு என்பது பல ஊர்கள் சேர்ந்த அமைப்பு – அதன் தலைவன். அதுவும் மலைநாட்டுத் தலைவன்.

'மலைநாடன்' என்ற பதம் இங்கே தலைவனைப் பொது நிலையிலேயே குறிக்கின்றது. இந்தத் தலைவியினது கெண்மைக்கு உரியவன் எவன் என்று சுட்டிப் பெயர் சொல்லப்படவில்லை. பொதுமையில் 'மலைநாடன்' என்றே குறிப்பிடப்படுகின்றான். – 'ஊரன்', 'பொருப்பன்', 'சேர்ப்பன்' என்று முறையே குறிஞ்சிநில, நெய்தல்நில, மருதநில தலைமகன்கள் அகத்துறைப் பாடல்களில் அழைக்கப்படுவது மரபு. இதனைத்தான் தொல்காப்பியம்,

மக்கள் நுதலிய அகனைந்திணையும்  
சுட்டியொருவர் பெயர் கொளப்பெறாஅர்'

என்று குறிப்பிடுகின்றது. அதாவது அகப் பாடல்களில் 'சுட்டி ஒருவர் பெயர் சொல்லாக் காமமும்' என்ற பெரும் நாகரிகப் பண்பு நிலைத்தது என்று தொல்காப்பியர் பதிவு செய்கின்றார்.

இனி, இப்பாடலில் தலைவனின் மலைநாட்டுச் சிறப்பு இவ்வளவு விஸ்தாரமாக இடம் பெறுவதற்குக் காரணம் என்ன என்பதும் அடுத்த வினாவாகும். சங்கப்பாடல்களிலும் கவிதை ஆக்கமுறையில் இன்னோர் சிறப்புக் கூறு கருப்பொருள் பற்றிய பிரஸ்தாபிப்பாகும். குறிஞ்சிநிலத்துக் கருப்பொருள்களான துடவை, சிறுதினை, தெய்வம், ஆடுமகள், மஞ்ஞை யாவும் இங்கு இடம்பெறுகின்றன. இவையாவும் வெறுமனே அழகுக் கோலங் காட்டப் புனையப்படவில்லை. அவை,

சங்கச் சமூகம் ஒன்றின் பண்பாட்டைப் புனைந்து கூறுவதாக அமைக்கப்பட்டுள்ளன. ஆனால், அவை கவிதையின் அழகியல் அம்சமாகவோ கற்பனைக் கோலமாகவோ இடம்பெறவில்லை. இயற்கைச் சம்பவம் கருத்துக்களத்தை விளக்கும் ஊடகமாக அமைகிறது. மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்போது கடவுட்கு இட்டு வைக்கப்பட்ட தினைக்கதிரினை அறியாது உண்ட மயில் ஆடுமகள் வெறியாடுவது போல நடுங்குவதான இயற்கைச் செயற்பாடு போலத்தான் அதனைப் பொருள்கொள்ள நேரிடும். ஆயின், சங்கப்புலவனின் நோக்கம் அதுவல்ல. அதனை உள்ளுறுத்து இன்னோர் செய்தியையும் அதனூடாகப் புலப்படுத்துகின்றார். இதனையே உள்ளுறை உவமம் என்று தொல்காப்பியம் பதிவு செய்யும்.

'உள்ளுறுத்து இதனோடு ஒத்துப் பொருள் முடிகென
உள்ளுறுத்து உரைப்பது உள்ளுறை உவமம்'

என அது குறிப்பிடுகின்றது. அதாவது, உவமையிற் கொள்ளும் வினை, பயன், மெய், உரு, உவமங்கள் அன்றி பொருள் உவமம் கொள்ளுதலை இது குறிக்கும். இங்கே, கருப்பொருள்களைத் தொடர்புபடுத்திக் கூறப்பட்ட சம்பவம், உள்ளுறை உவமமாக அமைகின்றது. கடவுட்கு இட்ட கதிரை அறியாது உண்ட மயில் வெய்யுற்று நடுங்கும் என்பது தலைவனது அருமைத் தன்மையையும், அதனை அறியாமல் அவனுடன் கேண்மை கொண்டு நான் இப்போது அக்கேண்மை காரணமாக வருந்துகின்றேன் என்ற உட்கருத்தை விளக்குவதாக அமைகின்றது.

'சூர்மலை நாடன்' என்றதும் - தீண்டிவருத்தும் தெய்வங்கள் உறைகின்ற மலைநாடன் எனப் பொருள்கோடலால் தலைவியுடன் கேண்மை கொண்டு அவளை வருத்தும் தன்மையுயவன் தலைவன் என்ற கருத்தும் இதில் தோன்றா நிற்கின்றது.

இனி இப்பாடல் வெளிப்படுத்தும் பல பண்பாட்டுக் கூறுகளை இதனால் அறிய முடிகின்றது. குறிஞ்சிநில உற்பத்தியாளன் 'புனவன்' எனப்பட்டான். அவனது சிறு தோட்டம் 'துடவை' எனப்பட்டது. அதில் விளைந்த தினை, 'பொன்போற் சிறுதினை' எனப்பட்டது. இது, ஒன்று பொன்போன்ற நிறத்தையுடைய சிறுதினை என்பது, மற்றது பொன்போல உற்பத்தியாக்கிப் பாதுகாக்கின்ற சிறுதினை என்றும் பொருள் கொள்ளக் கூடியது.

தினைப்புன உற்பத்தியாளர்கள் தமது விளைபொருட்களின் முதல் தொகுதியைக் கடவுளுக்குப் படைத்து உண்பது வழக்கம். கடியுண் என்பது புத்துணவு.

'சிறு தினை முந்துவிளை யாணர் நாட்புதிதுண்மார்' என புறநானூறு (197) இவ்வாறான வழமைபற்றிக் குறிப்பிடுகின்றது.

புனத்தினை கிள்ளி புதுவவிக்காட்டி நின் பொன்னடி வாழ்கவென்
றினக் குறவர் புதியதுண்ணுந் திருமாலிருஞ் சோலை

எனப் பெரிய திருமொழியும் இவ்வாறான வழக்கினைப் பதிவுசெய்கின்றது.

வெறியாட்டு என்ற சடங்கு பற்றியும் இப்பாடல் குறிப்பிடுகின்றது. தமிழருடைய வழிபாட்டிலே வெறியாட்டு முதலிய ஆட்டங்கள் முக்கிய இடம் பெற்றன. முருக வழிபாடு கூறப்படும் இடங்களில் இத்தகைய கூத்துக்கள் வர்ணிக்கப்படுகின்றன. இவ்விழிபாடுகளில் பூசாரிகள் இல்லை. வழிபடுவோர் இறைவன் தம்மிலே வந்து வெளிப்படுவான் என்னும் நம்பிக்கையுடன் கூத்தாடினர். குறமகள் கோடும் மணியும் ஒலிக்க யாவரும் அஞ்சத்தக்க முறையில் ஆடுதல் பல இடங்களில் கூறப்படுகின்றது. (சு. வித்தியானந்தன், 2003 : 20) பெண்கள் ஆடுகின்ற வெறியாட்டுக்குரியவள் விறலி என்றே குறிப்பிடப்படுகின்றாள். இவ் ஆடுமகள் பற்றிய செய்திகளை சங்க இலக்கியங்களில் பரவலாகக் காணலாம்.

நீயே கானல் ஒழிய, யானே
வெறிகொள் பாவையின் பொலிந்த என் அணி துறந்து
ஆடுமகள் போலப் பெயர்தல்
ஆற்றேன் தெய்ய: அல்க இவ் ஊரே (அகம் 370)

'தலைவனே! நீ கடற்கரைக் கானலில் நிற்க, நான் வெறியாடும் மகள் போன்ற பொலிவுற்ற என் அழகினைத் துறந்து அவ்வாடுமகள் தனித்து மீண்டு சென்றார் போல, நான் நின்னிற் பரிந்து செல்லேன். நின்னொடு நிற்பேன். இவ்வூர் வாழ் மக்கள் அலர் தூற்றினும் தூற்றுக' என்றவாறு இதன் பொருள் அமைகின்றது. இதுபோலவே பட்டினப்பாலை (153 – 155)

காந்தளந் துடுப்பிற் கவி குலையன்ன
செறி தொடி முன்கை கூப்பிச் செவ்வேள்
வெறி யாடு மகளிரொடு

என அவர்களது கோலம் பற்றிக் குறிப்பிடுகின்றது. எனவே, ஆடுமகள் வெறியாடுதல் தமிழர் பண்பாட்டில் ஒரு மரபாக இருந்துவந்துள்ளது.

இப்பாடலில் மயில் வெறியுறு வனப்பின் வெய்துற்று நடுங்கும் என்ற அடிக்கு உரைகாரர்,

"அரங்கின் கண் கூத்தாடுகின்ற விறலி
வெறியுற்றோள் அவிநயம் காட்டும்
வனப்பினை ஒத்துத் துன்புற்று நடுங்குதலைச்
செய்தற்கு இடமான"

என்று குறிப்பிடுவர். "அவிநயங்காட்டும் வனப்பு" என்பதற்கு அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்துக்கு எழுதிய உரையிலே விளக்கம் கிடைக்கின்றது.

தெய்வமுற்றோ னவிநயம் செப்பின்
கைவிட்டெறிந்த கலக்கமுடைமையும்
மடித்து எயிறு கௌவிய வாய்த்தொழிலுடைமையும்
துடித்த புருவமும் துளங்கிய நிலையும்
செய்யமுகமும் சேர்ந்த செருக்கும்
எய்துமென்ப இயல்புணந்தோரே –

அதாவது, கலக்கமுடைமை, பல்லால் இதழ் கடித்தநிலை, துடித்தபுருவம், நடுங்கிய நிலை, சினந்தமுகம், அகங்காரம் - இவையே தெய்வமுற்றோள் காட்டும் அவிநயம். இந்த நிலையை அறியாதுண்ட மஞ்ஞை அடைந்தது. மஞ்ஞை மட்டுமல்ல தலைவியும் இந்நிலைக்கு ஆளானாள் என்பதுதான் அதன் உட்பொருள்.

இவ்வாறாகப் பல பண்பாட்டுக் கோலங்களை வெளிப்படுத்தி நிற்கின்றது, நக்கீரர் பாடிய அந்த குறுந்தொகைப் பாடல்,

புனவன் துடவைப் பொன்போற் சிறுதினைக்
கடியுண் கடவுட்கிட்ட செழுங்குரல்
அறியாதுண்ட மஞ்ஞை ஆடுமகள்
வெளியுறு வனப்பின் வெய்துற்று நடுங்கும்
சூர்மலை நாடன் கேண்மை
நீர்மலி கண்ணோடு நினைப்பாகின்றே (குறந் - 105)

அடிப்படையில் தலைவியினது துயரை வெளிப்படுத்துவதுதான் புலவனின் நோக்கம். ஆயின், அதனை வெளிப்படுத்தும் முறையில் அவன் தனது தேர்ந்த நிலையை இனங்காட்டிக்கொள்கிறான். களம், பண்பாடு, வழக்கு என்பவற்றினூடாக கவிதையாக்கம் நிகழ்கிறது. அவையாவற்றையும் உள்வாங்கி, தலைவியின் துயரம் முதன்மைப்படுத்தப்படுகின்றது. "நீர்மலி கண்ணொடு நினைப்பாகின்றே" என்ற ஒற்றை வரி ஆயிரம் அர்த்தந் தரவல்லது. வாசகரிலும் தலைவியின் துயரத்தைத் தொற்றச் செய்வது.

தம்முடைய தண்ணிளியுந் தானுந் தன்மான் தேரும்
எம்மை நினையாது விட்டாரோ விட்டகல்க
அம்மென் இணர அடும்புகாள், அன்னங்காள்
நம்மை மறந்தாரை யாம்மறக்க மாட்டேமால். (சிலப்பதிகாரம் - கானல்வரி)

# தமிழில் திருப்பள்ளி எழுச்சி
# மரபும் மாற்றமும்

## பாரதியின் 'பாரத மாதா திருப்பள்ளியெழுச்சி' யை முன்வைத்து :

- பெருமாள் சரவணகுமார் -

தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சியையும் வளத்தையும் வெளிப்படுத்தும் இலக்கிய வடிவங்களுள் பிரபந்தங்கள் முதன்மையான இடத்தைப் பெறுகின்றன. இந்தப் பிரபந்த இலக்கிய வடிவங்கள், தமிழ் இலக்கியத்தின் கால ஓட்டத்துக்கேற்ப மெது மெதுவாக வளர்ந்து 'முழுவடிவம்' பெற்றவைகளாகும். தமிழில் காணப்படும் பெரும்பாலான சிற்றிலக்கிய வடிவங்களின் உருவாக்கம் இவ்வகைமையைச் சார்ந்தவைகளாகும். பேரிலக்கிய வடிவங்களுக்குச் சிற்றிலக்கியங்களே வழிகோலின என்பதை, 'சிற்றிலக்கிய வரலாறு' எடுத்துக்காட்டுகின்றது. ஒவ்வொரு காலத்தினதும், சமூகப் பின்புலங்களுக்கு ஏற்பவும், அரசியற் தேவைக்கு ஏற்பவும் பொருள் நிலையிலும், வடிவ நிலையிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டுவந்த இலக்கிய வடிவங்களாகவே இவைகள் விளங்குகின்றன. அவ்வகையில், திருப்பள்ளி எழுச்சி என்ற இலக்கிய வடிவம் எவ்வாறு தமிழில் உருப்பெற்றது, அதன் சமூகப் பின்புலம் என்ன, அதன் வளர்ச்சி நிலைகள், பாரதியின் பாரதமாதா திருப்பள்ளி எழுச்சியின் முக்கியத்துவம் முதலான அம்சங்கள் பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

பள்ளியெழுச்சி என்பது துயில்நிலையில் இருக்கும் ஒருவரை/ஒன்றை துயிலெழுப்புவதைக் குறிக்கும். இந்தத் துயில் எழுப்புகை என்ற வினை பல்வேறு தேவைக்கு ஏற்ப நிகழ்த்தப்பட்டு வந்துள்ளது. சங்க இலக்கியங்களின் பொருள் மரபுக்கு ஏற்றவகையில் துயிலெழுப்புகை நடைபெற்றுள்ளது. அகத்துறை இலக்கியங்களில் காதல் சார்ந்த உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கான ஒர் உத்தியாகவும் பயன்பட்டு வந்துள்ளது.[1] சங்க இலக்கியப் பாடல்களில் பயிலப்பட்டு வந்த 'துயிலெழுப்புகை' யை ஒர் இலக்கிய வடிவக் கூறாகத் தொல்காப்பியர் வகைப்படுத்தினார். துயில் நிலையில் இருக்கும் அரசனைத் துயில் எழுப்புவதாக அமையும் பாடல் 'துயிலெடைநிலை'ப் பாட்டு எனத் தொல்காப்பியம் இலக்கணம் வகுத்தது. அச்சூத்திரம் வருமாறு

'தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்
சூதர் ஏத்திய துயிலெடை நிலையும்'[2]

தொல்காப்பியரின் இச்சூத்திரத்தின் அடிப்படையில் பார்க்கும்போது, புகழ் விரும்பும் மனத்துடன் துயில்கொண்ட மன்னனின் பெருமைகளையும், சிறப்புகளையும் பாடி எழுப்புதல் துயிலெடை நிலையாகும். இவ்வகைப் பாடலை சூதரே பாடமுடியும். சூதர்கள் மன்னரின் அரசகுல மரபிலும், புராண அறிவிலும், வேள்விகள் செய்வதிலும் சிறந்து விளங்கினர். எனினும், இவ்வகைப் பாடல்களைப் பாடுவோருள்ளும் பல பிரிவுகள் இருந்துள்ளமையைக் காணலாம். 'அரசர் புகழை ஏத்திப் பாடுவோரைச் சூதர், மாகதர், வேதாளிகர் என்று மூவகைப்படுத்தித் தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. அவர்களுள் சூதர் அரசர் முன் நின்று ஏத்தவும், மாகதர் மன்னர்முன் இருந்தேத்தவும், வேதாளிகர் ஆடிப்பாடி ஏத்தவும் செய்வர். இவர்களுக்கெல்லாம் தனித்தனியே குடியிருப்புகள் இருந்தமையினைச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது.'[3] இவ்வாறு சூதர் மரபாகப் பாடப்பட்டு வந்த துயிலெடைநிலைப் பாடல் அமைப்புமுறை, புலவர்மரபு பாடலாக உருப்பெறுவதையும் காணமுடிகின்றது. புறநானூற்றில் காணப்படும் 397 ஆது செய்யுள் இப்பண்பைச் சிறப்பாக அடையாளப்படுத்துகின்றது. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைத் துயில் எழுப்பும் வகையில், புலவர் எருக்காட்டூர்த் தாயங் கண்ணனாரால் பாடப்பட்ட பாடல், ''துயிலெடைநிலை''ப் பாட்டின் அமைப்பை வெளிப்படுத்துவதாக உள்ளது.

'' வெள்ளியும் இருவிசும்பும் ஏர்தரும், புள்ளும்
உயர் சினைக் குடம்பைக் குரல் தோற்றினவே
பொய்கையும் போதுகண் விழித்தன, பைபயச்
சுடரும் சுருங்கின்று, ஒளியே பாடெழுந்து
இரங்கு குரல் முரசமொடு வலம்புரி ஆர்ப்ப,

இரவுப் புறங் கண்ட காலைத் தோன்றி,
எஃகு இருள் அகற்றும் ஏமப் பாசறை,
வைகறை அரவம் கேளியர்! பல கோள்
செய்தார் மார்ப! எழுமதி துயில்!........”[4]

மேற்குறித்த செய்யுள் பகுதியின் பொருளைப் பின்வருமாறு தொகுத்துக்கொள்ளலாம். வெள்ளியும் வானத்தில் தோன்றியது. பறவைகளும் உயர்ந்த மரக்கிளையில் கட்டிய கூடுகளிலிருந்து குரல் எழுப்பின. பொய்கைகளில் தாமரை மலர்களின் அரும்புகள் மலரத் தொடங்கின. நிலவின் ஒளியும் மெல்லக் குறையத் தொடங்கியது. ஒலித்தற்குரிய முரசும் வலம்புரிச் சங்கும் முழங்குதலைச் செய்ய இரவு வேளை வெளியேறிக் காலைப்பொழுது தோன்றியது. எஞ்சியிருந்த இருளை அகற்றும் நிலையில் காவலையுடைய பாசறைக்கண் விடியலை உணர்த்தும் ஒலிகளைக் கேட்பாயாக! பலவகையான சித்திரங்கள் அமைந்த மாலையணிந்த மார்பையுடைய வேந்தே! துயிலிலிருந்து எழுக! என்று புலவர் பாட அரசனும் தன்னை நாடி வந்த பரிசிலன் எனத் தேர்ந்து, நெய்யால் தாளிக்கப்பட்ட நெடிய இறைச்சியும், மாணிக்கத்தால் இழைக்கப்பட்ட கிண்ணத்தில் நிறைந்த கள்ளும், பாம்பு உரித்த தோல் போன்ற பூவேலை செய்யப்பட்ட ஆடையும் வழங்கினான். அவ்வாறான கொடைச் சிறப்பும், வெற்றி தரும் வேலைக் கையில் ஏந்தியுள்ள அரசன் இருக்கும் வரை யாம் அஞ்ச மாட்டோம் எனப் புலவர் பாடியுள்ளமை நோக்கத்தக்கது. எனவே, சங்க இலக்கியங்கள் சுட்டும் துயிலெடைநிலைப் பாடலானது, புலவர்கள் பரிசில் பெருவதற்கான ஓர் உத்தியாகவே/வழிமுறையாக அதனைக் கையாண்டுள்ளனர் என்பதையே காட்டுகின்றது எனலாம். அக்காலப் புலவர்களின் தேவை அதுவாகவே இருந்தமை மனங்கொள்ளத்தக்கது.

### பக்தி இயக்கக் காலமும் திருப்பள்ளி எழுச்சியும்

பழந்தமிழ் இலக்கியத்தின் பாடுபொருளுக்கு ஏற்ப வளர்ந்து வந்த துயிலெடைநிலை, இடைக்காலத்தில் புதுப்பொலிவு பெற்றது. சமயங்களுக்கிடையிலான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட பல்லவர் காலத்தில் இலக்கியத்தின் பொருளும், வடிவமும் மாறத்தொடங்கின. அரசனைத் துயில் எழுப்பும் வழக்கொழிந்து தெய்வத்தை /இறைவனை துயில் எழுப்புதல் என்னும் வழக்கு மேற்கிளம்பியது. பொருளிலும் வடிவத்திலும் ஏற்பட்ட மாற்றம் அவ்விலக்கிய வடிவத்தைச் சுட்டும் பெயர் நிலையிலும் ஏற்பட்டது. துயிலெடைநிலை, திரு என்னும் மங்கல பொருள் சுட்டும் முன்னொட்டோடு இணைந்து 'திருப்பள்ளி எழுச்சி' யாக உருமாறியது. இது பற்றி மு. வரதராசன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> ஆழ்வார்களும் நாயன்மார்களும் சமய இயக்கத் தொண்டுபுரிந்த காலத்தில் அரசர் பெற்றுவந்த சிறப்புகள் எல்லாம் தெய்வத்துக்கு உரியன ஆயின. நாட்டில் உயர்ந்த கட்டடம் அரண்மனையாக இருந்த நிலை மாறி, தெய்வ வழிபாட்டுக்கு உரிய கட்டடம் அதனைவிட உயர்ந்து விளங்குவதாயிற்று. அரண்மனைக்கு வழங்கிய கோயில் என்னும் சொல், தெய்வம் விளங்கும் இடத்துக்குப் பெயராயிற்று. அரசர்களும் மக்களோடு சேர்ந்து சென்று தெய்வத்தையே எல்லோருக்கும் பொதுவான இறைவனாக வழிபடும் நிலை வளர்ந்தது. அத்தகைய மாறுதல்கள் நேர்ந்த காரணத்தால், அரண்மனையில் அரசனுக்கு உரிய துயிலெடைப்பாட்டு, கோவிலில் தெய்வத்திற்கு உரிய பாட்டு ஆயிற்று.[5]

சங்க இலக்கியங்களில் பயில்நிலையில் இருந்த துயிலெடைநிலைப் பாடல் அமைப்பு, பக்தி இலக்கியங்களில் பலநிலைகளில் செல்வாக்குப் பெற்றது. பக்தி இலக்கியக் கர்த்தாக்களான நாயன்மார்களும், ஆழ்வார்களும் தமது பக்தி அனுபவத்தை வெளிப்படுத்துவதற்கான ஓர் உத்தியாக துயில் எழுப்புவதைப் பயன்படுத்திக்கொண்டனர். பழைய துயிலெடைநிலையின் சாயலோடு, பக்திப் பொருளைப் பலரும் பாடியுள்ளனர். இம்மரபை முதன் முதல் பக்தி இலக்கியத்தில் பதிவுசெய்தவர், ஆண்டாளே எனலாம். ஆண்டாளின் திருப்பாவையில் இப்பண்பு வெளிப்படுகின்றது (எம்பெருமான் நந்தகோ பாலா எழுந்திராய்). எனினும், ஆண்டாளின் துயில் எழுப்புவதாக அமையும் பாடல்கள், தனியொரு இலக்கிய வடிவமாக அமையவில்லை. அவ்வகையில், பழமைக்கும், புதுமைக்கும் ஏற்றவகையில் துயிலெடைநிலை அமைப்பைத் தனி இலக்கிய வடிவமாகக் கட்டமைத்த பெருமை மாணிக்கவாசகருக்கும், தொண்டரடிப்பொடியாழ்வாருக்கும் உரியது. இவ்விருவரால் பாடப்பட்ட திருப்பள்ளியெழுச்சிகளே பின்னரெழுந்த திருப்பள்ளி எழுச்சிகளுக்கெல்லாம் முன்னுதாரணங்களாக அமைந்தன.

மாணிக்கவாசகரினதும், தொண்டரடிப் பொடியாழ்வாரினதும் திருப்பள்ளியெழுச்சிகள் இருவேறு மதங்களின் பிரசார இலக்கிய வடிவங்களாகவே திகழ்கின்றன. மாணிக்கவாசகரின் திருப்பள்ளியெழுச்சியில் பத்துப் பாடல்கள் உள்ளன. திருப்பெருந்துறையில் உறையும் சிவனைத் துயில் எழுப்புவதாக அமைவதோடு, காலை நேர இயற்கை அழகு, சிவனது இருப்பு, பெருமைகள், தொன்மங்கள் முதலானவற்றையும் பதிவுசெய்கின்றது. ஏனைய சமயங்களைவிட சைவமே ஆதியும், அந்தமும் இல்லாத மதம் என்னும் கருத்துநிலையை நிலைநிறுத்துவதாகவே அமைந்துள்ளது. சைவப் பக்தி இலக்கியத் தொகுதியின் சாராம்சம் இதுவாகவே இருந்தது. பழைய துயிலெடைநிலைப் பாடல்களுக்கும், மாணிக்கவாசகரின் திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களுக்கும் அமைப்படிப்படையில் வேறுபாடுகள் இல்லை. சொற்பொருள் மாற்ற நிலையிலேயே வேறுபாடுகள் உள்ளன. திருப்பெருந்துறையில் சிவனைத் துயிலெழுப்பும் அடியவர்களின் பக்திச் செயற்பாடுகளை மாணிக்கவாசகர் கண்முன் காட்சிப்படுத்தும் விதம் அவரது கவியாளுமையைப் பதிவுசெய்வதாக அமைகின்றது எனலாம்.

"இன்னிசை வீணையர் யாழின ரொருபால்
இருக்கொடு தோத்திர மியம்பின ரொருபால்
துன்னிய பிணைமலர்க் கையின ரொருபால்
தொழுகைய ரழுகையர் துவள்கைய ரொருபால்
சென்னியி லஞ்சலி கூப்பின ரொருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையு மாண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே."[6]

பல்லவர் காலத்தில் எழுந்த மற்றுமொரு திருப்பள்ளியெழுச்சியாகத் தொண்டரடிப் பொடியாழ்வாரின் பதிகம் அமைந்துள்ளது. திருவரங்கத்திற் பள்ளி கொண்டுள்ள திருமாலைத் துயில் எழுப்புவதாக அமையும் பத்து பாடல்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு பாடலிலும் ஒரு பொருளைப் பிரதானமாக ஏற்றிப் பாடியுள்ளார். சூரியன் உதித்துவிட்டான், கஜேந்திரனுக்கு அருளியவனே, காலைக்காற்று வீசுகிறது, அயோத்தி அரசே, தேவர்களும் பணிய வந்துள்ளனர், யாவரும் காத்துள்ளனர், தேவருடன் முனிவர்களும் நின்னைத் தொழ நிற்கின்றனர், சூரியனும் ஒளி பரப்பித் தோன்றினான், யாவருக்கும் காட்சி தரவேண்டும், அடியார்க்கு அடியேன் ஆவேன் எனக் கூறித் திருமாலைத் திருப்பள்ளியெழுப்புகின்றார், தொண்டரடிப்பொடியாழ்வார். காலைக்காற்று வீசும் அழகைக் கூறி திருமாலைத் திருப்பள்ளியெழுப்பும் பாடல் அவரது கவித்துவத்தைக் காட்டுகின்றது.

"சுடரொளி பரந்தன சூழ்திசை யெல்லாம்
துன்னிய தாரகை மின்னொளி சுருங்கி
படரொளி பசுத்தனன் பனிமதி யிவனோ
பாயிரு ளகன்றது பைம்பொழில் கமுகின்,
மடலிடைக் கீறிவண் பாளைகள் நாற
வைகறை கூர்ந்தது மாருத மிதுவோ,
அடலொளி திகழ்தரு திகிரியத் தடக்கை
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே!"[7]

பக்தி இலக்கியக் காலத்துக்குப் பின்னர் திருப்பள்ளியெழுச்சி என்ற இலக்கிய வடிவத்தைப் பலரும் பயன்படுத்தியுள்ளனர். தனிநபர் வழிபாடுகளாக்வும் சில தோன்றியுள்ளன. 15 ஆம் நூற்றாண்டில் தத்துவராய சுவாமிகள், அருள் திருப்பள்ளியெழுச்சி, சிவப்பிரகாச சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி, சொரூபானந்த சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி, தத்துவப்பிரகாச நாயனார் திருப்பள்ளியெழுச்சி, பரிபூரணப்பிரகாச நாயனார் திருப்பள்ளியெழுச்சி ஆகிய ஐந்தையும் பாடியுள்ளார். 18 ஆம் நூற்றாண்டில் முருகனைத் துயில் எழுப்புவதாக அமையும் திருப்பள்ளியெழுச்சியைச் சிதம்பரசுவாமிகளும், 19ஆம் நூற்றாண்டில் அருட்பெருஞ்சோதி திருப்பள்ளியெழுச்சியை இராமலிங்க சுவாமிகளும் பாடியுள்ளனர்.[8]

### பாரதியும் பாரத மாதா திருப்பள்ளி எழுச்சியும்

தமிழில் எழுந்த திருப்பள்ளி எழுச்சிப் பாடல்களிலிருந்து முற்றிலும் வேறுபட்ட ஒரு கருத்துநிலையை வெளிப்படுத்துவதாகப் பாரதியின் பாரத மாதா திருப்பள்ளியெழுச்சி விளங்குகின்றது. இது 1910 ஆம் ஆண்டு 'கர்மயோகி' இதழில் வெளிவந்தது. பாரதி, பழைமைக்கும், புதுமைக்குமான ஒரு கருத்துநிலைத் தளத்தில் நின்றுகொண்டு, தான் வாழ்ந்த காலத்து சமூகத் தேவைக்கு ஏற்றவகையில்,

இலக்கியத்தின் பொருளிலும் வடித்திலும் மாறுதல்களை ஏற்படுத்தியவன். தமிழ் இலக்கிய மரபில்செல்வாக்குப் பெற்றிருந்த இலக்கிய நிகழ்ச்சிகளுக்கும், இலக்கிய வடிவங்களுக்கும் புதிய உயிர் கொடுத்து, புதிய திசையில் பயணிக்கச் செய்தவன். அவ்வகையில், பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு என்பன சிறப்பிடம் பெறுகின்றன. இவ்வகை மரபில் வந்துசேர்ந்த ஒர் இலக்கிய வடிவமாகவே பாரத மாதா திருப்பள்ளி எழுச்சியும் விளங்குகின்றது.

பாரதியின் படைப்புகளை அவன் வாழ்ந்த சமூகப் பின்புலத்தை விடுத்துப் புரிந்துகொள்ளமுடியாது. சமூக அசைவியக்கத்துக்கேற்பத் தன்னையும், தனது எழுத்தையும் வடிவமைத்துக் கொண்ட பெருங்கவிஞனே பாரதி எனலாம். “விதந்தரு கோடியின்னல் விளைந்தெனை யணைத்திட்டாலும் சுதந்திரதேவி! நின்னைத் தொழுதிடல் மறக்கிலேனே..” என்பதுதான் பாரதியின் தாரக மந்திரமாகவும் அமைந்தது. அவ்வகையில், பழந்தமிழ் இலக்கியங்களில் வளர்ந்துவந்த திருப்பள்ளி எழுச்சி என்ற இலக்கிய வடிவத்தை பாரதி கையாண்ட விதம், அது எழுந்த சூழல், வெளிப்படுத்தும் கருத்துகள் என்பன பற்றி நோக்குவது இங்கு பயனுடையது.

குறிப்பிட்ட ஒரு காலம் கவிஞனை உருவாக்குகின்றது, கவிஞன் இன்னொரு காலத்தை உருவாக்குகின்றான் என்பர். இது பாரதிக்கே மிகவும் பொருத்தமுடையது. பாரதி வாழ்ந்த காலத்தில் இந்தியா ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டுக்குள் கிடந்தது. ஆங்கிலேயேர்களின் திட்டமிட்ட பொருளாதாரச் சுரண்டல் முனைப்பாக முன்னெடுக்கப்பட்டது. சுதேசிய மக்கள் ஆங்கிலேயரின் ஆட்சிமுறையினால் தமது உரிமைகளை இழந்தும், பழங்காலப் பெருமைகளை இழந்தும் அடிமை வாழ்வு வாழ்ந்து கொண்டிருந்தனர். இதனைப் பாரதி பின்வருமாறு பதிவுசெய்துள்ளார்.

“ஆரியர்கள் வாழ்ந்துவரும் அற்புதநா டென்பதுபோய்
பூரியர்கள் வாழும் புலைத்தேச மாயினதே!
.........................................................
மாமுனிவர் தோன்றி மணமுயர்ந்த நாட்டினிலே
காமுகரும் பொய்யடிமைக் கள்வர்களும் சூழ்ந்தனரே!”[9]

எனப் பாடுகின்றார். அத்தோடு, சுதேசியர்களின் பண்பாட்டு பழக்க வழக்கங்களிலும் பல அறியாமைகள் காணப்பட்டன. ஆங்கிலேயர்களின் அடக்குமுறையை விடச் சுதேசியப் பண்பாட்டில் காணப்பட்ட அடக்குமுறைகளே அதிகம். சாதி, மொழி, மதம், பெண் அடக்கு முறை, தொழில்நிலை, பிராந்தியம் முதலான பாகுபாடுகள் மிக மோசமாக இருந்தன. இவ்வாறானதொரு சூழலிலேயே, பாரதி தனது எழுத்து முயற்சிகளை மேற்கொண்டான். ஆங்கிலக் காலனித்துவத்தை எதிர்க்கும் வகையிலும், சுதேசியரின் அறியாமைகளை அகத்திலிருந்து அகற்றும் வகையிலும் பாரதி இயங்கத் தொடங்கினான். இவ்வகைக் கருத்துநிலைகளை வெளிப்படுத்துவதற்கான ஒர் ஆயுதமாகவே இலக்கியத்தைப் பயன்படுத்திக் கொண்டான்.

மேற்குறித்த கருத்துநிலையை வெளிப்படுத்துவதாகவே பாரதியின் பெரும்பாலான படைப்புகள் விளங்குகின்றன. நீண்ட நெடுங்காலமாகத் தமிழில் செல்வாக்குப் பெற்றுவந்த 'திருப்பள்ளியெழுச்சி' இந்திய மக்களின் அறியாமை என்னும் இருள் அகற்றும் வடிவமாகவும், சுதந்திர வேட்கை பரப்பும் வடிவமாகவும் உருமாறியது. மன்னனின் அவையிலும், கோயில் வளவிலும் கட்டுண்டு கிடந்த திருப்பள்ளியெழுச்சி என்ற இலக்கிய வடிவம், இந்திய மக்கள் எதிர்கொண்ட அனைத்துத் தளைகளையும் களையும் மக்கள் இலக்கிய வடிவமாகியது. அடிமைப்பட்டும், உணர்ச்சியற்றும் கிடந்த இந்திய மக்களை விழித்துக்கொள்ளச் செய்வதற்காகப் பாரதி பாடிய இலக்கிய வடிவமே, பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி எனலாம்.

பாரதியார் பாரத தேசத்தைப் பாரத மாதாவாக உருவகித்தே திருப்பள்ளியெழுத்தியைப் பாடியுள்ளார். பாரதியின் “பாரத நாடு” பற்றிய பெரும்பாலான கவிதைகள் உருவகத்தன்மை கொண்டவை. பாரதியின் படைப்புகளை ஆங்கில அரசு தடைசெய்திருந்தமை மனங்கொள்ளத்தக்கது. அவ்வகையில், ஜய பாரத, பாரத மாதா, எங்கள் தாய், பாரதமாதா நவரத்தின மாலை, பாரத தேவியின் திருத்தசாங்கம், தாயின் மணிக்கொடி பாரீர், சுதந்திர தேவியின் துதி, மாதாவின் துவஜம் முதலான கவிதைகள் பாரததேசத்தை “மாதாவாக” உருவகித்துப் பாடப்பட்டவை.

பாரதியின் பாரத மாதா திருப்பள்ளி எழுச்சியில் ஐந்து பாடல்கள் உள்ளன. ஐந்து பாடல்களும் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தில் பாடப்பட்டுள்ளன. ஒவ்வொரு அடியிலும் எட்டுச் சீர்கள் அமைந்துள்ளன. பள்ளியெழுந்தருளாயே என ஒவ்வொரு பாட்டின் முடிவிலும் விரவி வந்துள்ளது. பக்தி

இலக்கியக் காலத்தில் திருப்பள்ளியெழுச்சிப் பாடிய மாணிக்கவாசகரின் பாடலிலும், தொண்டரடிப்பொடியாழ்வாரின் பாடலிலும் ஒரேவகையான யாப்பு, சீர் அமைப்பு முறை பயிலப்பட்டு வந்துள்ளமை திருப்பள்ளி எழுச்சி இலக்கிய வடிவத்தின் மரபார்ந்த அமைப்பை வெளிப்படுத்தி நிற்கின்றது.

பாரத மாதா திருப்பள்ளி எழுச்சியில் அமைந்துள்ள முதலாவது பாடல் இந்திய நாட்டு மக்கள் நல்லறிவு பெற்றுவிட்டனர் என்பதையும், பாரத தேசத்தில் இழிவான செயல்கள் அகன்றுவிட்டன என்பதையும், சுதந்திர வீரர்கள் பல்லாயிரம் பேர் சூழ்ந்து நிற்கின்றனர் என்பதையும் கூறித் துயில் எழுப்புவதாக உள்ளது. இரண்டாவது பாடல் காலை நேர இயற்கை நிகழ்ச்சிகளைக் காட்சிப்படுத்துகின்றது. பறவைகள் ஒலி செய்கின்றன, எங்கும் சுதந்திர நாதமும், சுதந்திரச் சங்கின் முழக்கமும் கேட்கின்றன. பெண்கள் பாரத மாதாவின் அழகிய தெய்வீகப் பெயர்களை ஓதி நிற்கின்றனர் எனக் கூறித் துயில் எழுப்புவதாக அமைந்துள்ளது.

தொழுதுனை வாழ்த்தி வணங்குதற் கிங்குன்
தொண்டரபல் லாயிரர் சூழ்ந்துநிற் கின்றோம்...
.........................................................................
வெள்ளிய சங்கம் முழங்கின கேளாய்!
வீதியெ லாம்மணு குற்றனர் மாதர்...[10]

பாரதநாடு வேதங்களாலும், சாத்திரங்களாலும் பெருமை பெற்றது. அந்நாடு மிக நீண்ட காலமாகவே அடிமைப்பட்டும் கிடக்கிறது என்பதையும், அடிமை தளையிலிருந்து பாரத மக்கள் விடுதலைப் பெற வேண்டும் என்ற ஏக்க உணர்வையும் வெளிப்படுத்துவதாக மூன்றாம், நான்காம் பாடல்கள் அமைந்துள்ளன. அத்தோடு, பகைவரை அழிக்கச் சூலாயுதம் ஏந்திய சக்தியாகப் பாரதத் தாயை கவிஞர் காணுகின்றார்.

களிவுறுநெஞ்சக மலர்கொடு வந்தோம்
சுருதிகள் பயத்தனை, சாத்திரம்கோடி
சொல்லரு மாண்பின ஈன்றனை யம்மே!
நிருதர்கள் நடுக்குறச் சூழ்கரத் தேற்றாய்!.....[11]

இறுதிப்பாடல் பாரத மாதாவை பலவாறு விளிக்கின்றது. கவிஞர் உள்ளத்தில் பீறிட்ட விடுதலை உணர்வின் வெளிப்பாடாகவே அமைகின்றது. மாநிலம் பெற்றவளே, கோமகளே, பெரும் பாரதர்க் கரசே, ஈன்றவளே எனக் கூறித் துயில் எழுப்புவதாக அமைந்துள்ளது. "விதமுறு நின்மொழி பதினெட்டுங் கூறி வேண்டிய வாறுனைப் பாடுதுங் காணாய்!" எனப் பாரதி கூறுவதனூடாக, ஆங்கிலேயருக்கு எதிரான சுதந்திரப் போராட்ட இயக்கம் இந்தியா முழுவதும் முன்னெடுக்கப்பட்டு விட்டது என்பதை, பறைசாற்றுகின்றான்.

பாரதியின் பாரத மாதா திருப்பள்ளி எழுச்சியின் எடுத்துரைப்பு முறை சிறப்பாக நோக்கத்தக்கது. பழைய இலக்கிய வடிவத்தில் புதிய பொருளை ஏற்றி, நவீன கவிதையின் பண்புகளோடு அமைத்துள்ளமையைக் காணலாம். திருப்பள்ளி எழுச்சியில் விரவி வரும் காலைப் பொழுதின் இயற்கை வர்ணனை, இறைவனின் அருட்சிறப்பு, அடியவர் கூட்டம் என்பன பாரதியிடம் பொருளிலும், வடிவிலும் கலைத்துவம் பெறுகின்றன. இவற்றோடு, புன்னையிருட்கணம், அறிவெனும் இரவி, தெள்ளமுதன்னை, நெஞ்சகமலர் முதலான உருவகத் தொடர்களும், ஓசையமைதியும் பாரதியின் கவித்துவத்தைக் காட்டவல்லன.

"பொழுது புலர்ந்தது யாம்செய்த தவத்தால் / புன்மை யிருட்கணம் போயின யாவும்
எழுபசும் பொற்சுடர் எங்கணும் பரவி / யெழுந்து விளங்கிய தறிவெனும் இரவி..."[12]

எனவே, பக்தி இலக்கியக் காலத்தில் பயிலப்பட்டுவந்த 'திருப்பள்ளியெழுச்சி' வடிவத்தை சமகால சமூகத்தேவைக்கு ஏற்பவும், அரசியற் தேவைக்கு ஏற்பவும் அதனைச் சிறப்பாக கையாண்ட பெருமை பாரதிக்குரியது. நவீன சமூக அமைப்புக்கேற்ப திருப்பள்ளியெழுச்சி என்ற இலக்கிய வடிவத்தை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதற்கு, பாரதியின் பாரத மாதா திருப்பள்ளியெழுச்சியே முன்னுதாரணமாகத் திகழ்கின்றது எனலாம்.

அடிக்குறிப்புகள்

1. பார்க்க : சங்க இலக்கியப் பொருட் களஞ்சியம், தொகுதி – 3, தஞ்சாவூர் : தமிழ்ப் பல்கலைக்கழகம், 1988. பக். 358 – 361.
2. தொல்காப்பியம், பொருளதிகாரம் ப. 88.
3. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி – 4, தஞ்சாவூர் : தமிழ்ப் பல்கலைக்கழகம், 1988. ப. 305
4. புறநானூறு, (வ. த. இராமசுப்பிரமணியம் உரை), சென்னை: திருமகள் நிலையம், 2000. ப. 623.
5. வரதராசன், மு. "திருப்பள்ளியெழுச்சி" இரண்டாவது உலகத் தமிழ்க் கருத்தரங்கு நிகழ்ச்சி, சென்னை, 1968. ப. 76.
6. திருவாசகம், ப. 636.
7. நாலாயிர திவ்வியப் பிரபந்தம் - பாகம் 1, சென்னை : தி லிட்டில்ப்ளவர் கம்பனி, 1984. ப. 342.
8. இது பற்றிய மேலதிக விளக்கங்களுக்குப் பார்க்க : அருணாசலம், மு. (1965) திருவாசகம் - சில ஆராய்ச்சிக் குறிப்புகள், சிதம்பரம் : சைவ சித்தாந்த மாசமாஜம்.
9. பாரதியார் கவிதைகள், ப. 5.
10. மேலது. ப. 50.
11. மேலது. ப. 49.
12. மேலது. ப. 50.

## அதிர் அசை மகிழ்ந்தாடு

நீங்கள் ஊன்றிய விசுவாசத்தை
நான்
புதிய போர்களங்களுக்கு
எடுத்துச் செல்கிறேன்
ஆறுதலூட்டும் கதைகளால்
என்னை
ஏன் குதூகலப்படுத்துகிறாய்
இரகசியமானதும்
சாகசமானதும் வாழ்வு
வேறெங்குமிருப்பதைப் போலவே
இங்கும்...
அதற்கொரு கனவு இருக்கிறது
அது அறியும்
புறப்படுதல்களை...
தேயிலை இலைகளின் பச்சையம்
(வி) சித்திரங்களை உருவாக்கும்
புள்ளிகளிடையே
புலனாகாத இழையொன்று ஓடுகிறது
அது என்னை நீயாகப் பார்க்கிறது
உன் உழைப்பின் காலம்
உனக்கு தரப்பட்டுவிட்டது
இனி
ஒவ்வொரு கணத்திலும்
ஒரு புதிய நடனம்
பாடல்
பிரபஞ்சம் மலரும்
தோழனே!
நாம் ஊன்றிய விசுவாசத்தில்
நுகர்ந்து மகிழ்ந்தாடும்
அந்தப் பாடலின்
நிதானமான செந்தழல்
உதவாக்கரையான சகலவற்றையும்
ஒழிக்கட்டும் !

சண்முகம் சிவகுமார்

# அரசியல் அதிகாரம்


## வே. சிவயோகலிங்கம்

**சிரேஸ்ட விரிவுரையாளர், அரசியல் விஞ்ஞானத்துறை,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**


அதிகாரம் என்ற சொல்லுக்குப் பல பொருள் உண்டு. அச் சொல்லானது ஒரு காரியத்தினைச் சாதிப்பதற்குப் போதுமான சக்தி (ஆற்றல்) கட்டுப்படுத்துதல், ஆணை, சட்டம் எனப் பல பொருள்களைக் தருகின்றது. அரசியல் ரீதியான நோக்கில் ஆள்வதற்குரிய ஆற்றலையே .அச்சொல் குறித்து நிற்கின்றது.

மோகன்தோ (Morgantho., Politics Among Nations ) குறிப்பிடும்போது அதிகாரமானது மனிதனுடைய சக்தியாக இருக்கின்றது (Power is Man's Force) என்றும் அது இணங்க வைத்தல், மனித சிந்தனையின் மீதான கட்டுப்பாடு, மற்றைய மனிதர்கள்மீது நடவடிக்கை எடுத்தல், என்பவற்றைக் குறிக்கின்றது என வரையறை செய்தார்.

ஈஸ்ரன் (Eston) அதிகாரம் தொடர்பாகச் சொல்லும் போது " அதிகாரம் என்பது ஒரு நபரோ அல்லது ஒரு குழுவோ மற்றவர்கள் தொடர்பாக தீர்மானம் மேற்கொள்ளும் திறமையினைக் குறிக்கின்றது. அதாவது மற்றவர்களுடைய நடவடிக்கையை முடிவு செய்ய உத்தரவு பிறப்பிக்கும் திறமையாக இருக்கின்றது" என்று குறிப்பிட்டுள்ளர்.

அதிகாரம் பற்றி ரிபிறியஸ் (Tiberius) பின்வருமாறு சொல்லியிருக்கின்றார். "அதிகாரத்திற்கு எல்லை கிடையாது. இது பணத்தினுடைய பலமாகக் கருதப்படுவதில்லை. எப்போதும் அது அரசியல் அதிகாரமாகவே கருதப்படுகின்றது.

அதிகாரம் தொடர்பாக டால் (Dhal) வரைவிலக்கணம் செய்த போது அச்சொல்லானது "ஒரு செயலைச் செய்பவர்களுக்கு இடையிலான தொடர்பினைக் குறித்து நிற்கின்றது என்றும் அதன்போது ஒருவர் சிலவழிகளில் மற்றவரைச் செயலாற்றுவிப்பார். இல்லாவிட்டால் அது அதிகாரம் உடையவரின் செயலாக அமையாது." என்று குறிப்பிட்டுள்ளார். இந்த விடயமானது தீர்மானம் மேற்கொள்ளும் வழிமுறையில் மக்களுகோ அல்லது சமூக அமைப்புகளோ செல்வாக்குச் செலுத்துவதனையே குறித்து நிற்கின்றது. இவ்வாறான அதிகாரத்தினைத் தனியார் வர்த்தகர்கள் கொண்டிருப்பதனைக் எடுத்துக்காட்டாக கூறலாம். சட்ட உருவாக்கத்தின் போது நுகர்வோருக்கான பாதுகாப்பு பிரச்சாரத்தை மேற்கொண்டு அவர்கள் வெற்றி பெறுதலும் அதன்மூலம் அரசாங்கத்தை அது தொடர்பான தீர்மானத்தினை முன்மொழிய வைக்கின்றனர்..

அரசியலில் நிகழ்ச்சி நிரலைத் தயாரிக்கும் பொழுது அதில் தலையிட்டுக் கட்டுப்படுத்துவதனையே இதற்கு எடுத்துக்காட்டகக் குறிப்பிடலாம். இவ்வாறான நிகழ்வின் போது அரசியல்வாதிகளின் அல்லது அரசியற்கட்சிகளின் அறை முகப்புக்களில் நின்று அவர்களைத் தடுத்து நிறுத்தப்படுதலையே இது குறிக்கின்றது.

அரசியல் அதிகாரத்திற்கு, சிந்தனையின் மீது செல்வாக்குச் செலுத்தல் என்று இன்னொரு முகமும் உண்டு. இந்த வடிவிலான அதிகாரமானது பிரசாரங்களின்போது முன்வைக்கப்படுகின்றது. அவன் அல்லது அவள் தனது வேவை தொடர்பாகச் சிந்தித்து தமது கருத்தை அதிகாரத்திற்கு வருபவர்கள் மனதில் பதிய வைக்கின்றனர். இது கருத்தியலில் தாக்கத்தினை உண்டுபண்ணுகின்றது. இது உண்மையில் உளவியல் ரீதியில் கட்டுப்படுத்துவதனையே குறிக்கின்றது.

மேற் கூறியவற்றிலிருந்து புரிவது என்னவெனில் அதிகாரம் ஒருவரிடமோ பலரிடமோ இருக்கலாம் ஆயின் அதனை வரம்பின்றிப் பயன்படுத்துவதால் அது சமூகத்திற்கு ஊறுவிளைவிக்கலாம். அதற்குத் தடைகள் இல்லையேல் அது கட்டுக்கடங்காத இயற்கைச் சக்தியை ஒத்திருக்கும் அது வேண்டுமென்றே அழிவை, அச்சத்தை விளைவிக்கலாம். மனிதரை அடிபணிவதற்கு நிர்ப்பந்திக்கலாம். ஆகவே அதிகாரத்திற்குத் தடைகள் விதிக்கப்பட வேண்டும் (Robert Dhal, Who Governs? Democracy and Power an American City-1989) என்பதேயாகும்.

அதிகாரத்தின் மீது தடைகள் விதிப்பதற்குப் பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு வழிமுறைகளைப் சமூகம் தனித்தோ ஒன்று சேர்ந்தோ கையாண்டுள்ளது. வழமைகள், மரபுகள். சங்கங்கள், அரசியற்சித்தாந்தங்கள், தெய்வீகசட்டங்கள், இயற்கைச்சட்டங்கள், நீதி பற்றிய எண்ணக்கருக்கள் ஆகியன அர்வழிமுறைகளாகும். (அரச அறிவியல், கே.எச் ஜெயசிங்க, வை.ஆர் அமரசிங்கா, கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,1976) இதிலிருந்து வரையறுக்கப்பட்ட அதிகாரமே அரசியல் அதிகாரம் என்று பொதுவாகக் குறிப்பிடப்படுகின்றது. ஆட்சியாளர்கள் இவ்வரையறை களைப் சிறிது காலத்திற்கு புறக்கணிக்கும் சந்தர்ப்பம் இருந்தாலும் அதனை அவன் வழமையாகக் கொள்வானாயின் சமூகம் அவனுடைய அதிகாரத்தைப் பறித்துவிடும்.

அரசியல் அதிகாரம் சமூகத்தினால் விதிக்கப்பட்ட பல்வேறு வரையறைகளுக்கு உட்பட்டது என்ற கருத்து தேசிய அரசுகளை வலுப்படுத்தும் முயற்சிக்கு ஒருதடையாகக் காணப்பட்டது. மாக்கியவல்லி, ஹொப்ஸ் மற்றும் தெய்வீக உரிமை வாதிகளும் இத்தடையை நீக்குவதற்குப் தத்தமக்கு பட்ட வழிமுறைகளைக் கூறினர். ஆனால் அவையனைத்திற்குள்ளும் அதிமுக்கிய வழிமுறையாகவுள்ளது ஒஸ்ரின் போன்ற இறைமைக் கொள்கைளாளர்களால் முன்வைப்பக்கப்பட்ட வழிமுறையாகும். இறைமை என்பதற்கு கொடுக்கப்பட்ட வரைவிலக்கணத்தின் படி அது கட்டுப்பாடற்ற அதிகாரமாகும். ஒவ்வொருவனும் இறைமைக்கு அடிபணிய வேண்டும். மனிதர்களும் நிறுவனங்களும் அவ்வாறே அடிபணிய வேண்டும்.



சட்டம் என்பது இறையின் ஆணை என்பதால் மனிதன் அதற்கு கீழ்படியக் கடமைப் பட்டிருக்கின்றான். என்ற கருத்தொன்றும் உள்ளது. ஆயின் இக்கருத்து ஒரு பக்கச்சார்பான கருத்தாகக் கொள்ளப்படுகின்றது.. ஏனெனில் சமூகத்தில் உள்ள ஒருவன் சட்டம் இறையிடும் ஆணை என்பதால் மட்டும் அடிபணிவதில்லை. எந்த ஒரு சமூகத்தையும் மேலோட்டமாகப் பார்த்தால் கூட இந்த உண்மை தெளிவாகப் புலப்படும். ஆரம்பகால எளிய சமூகத்தில் மன்னன் சட்டப்படியன்றி மரபுகளையும் வழக்காறுகளையும் பின்பற்றியே ஆட்சி புரிந்தான். நாகரீக சமூகங்களை எடுத்தால்கூட மனிதர் தமது நலஉரிமைகளை நாடிப்பெறும் வகையிலும் மதியான ஒரு சூழ்நிலையைச் சட்டம் பேணிக்காக்கும் என நம்பும் போதும் சமூகத்திற்குப் பயன் விளைவிக்கக் கூடிய அம்சங்கள் சட்டத்திற்குள் பொதிந்துள்ளன என நம்பும் போதும் சட்ட அமைப்புக்களுக்கும் தனிமனிதர்களுக்கும் இடையே எழும் பிணக்குக்களை தீர்க்கும் ஒரு சாதனமாகச் சட்டங்கள் உள்ளன என அறியும் போதும் எல்லாவற்றிற்கும் மேலாக தான் வாழ்கின்ற சமூகத்தின் குறிக்கோளையும், தனது சொந்தக் குறிக்கோளையும் அடைவதற்கு அவச்யமான சூழ்நிலைகளைச் சட்டம் உருவாக்கியுள்ளது என உணரும் போதும் அவர்கள் சட்டத்திற்கு பணிகின்றனர்.

மேற்சொன்ன கருத்துக்கள் சட்டத்திற்கு ஒரு புதிய பரிமாணத்தைக் கொடுக்கின்றது. சட்டங்கள் பற்றி மனிதருக்குள்ள மனப்பாங்கையும் சட்டத்தின் தோற்றுவாய் மட்டுமன்றி அதன் உள்ளடக்கமும் அதனால் கிடைக்கப் பெறுகின்ற நலன்களும்தான் ஒருங்கே ஒருவனுடைய சட்ட அடிபணிவினை நிர்ணயிக்கின்றன என்பதே அதுவாகும். சட்டத்தை மீறினால் தண்டனை உண்டு என்று ஒரு அம்சம் உண்டு என்றாலும்கூட சட்டத்தை தழுவி நடப்பதனால் சமூகத்திற்குப் பயன் விளையும் என்பதற்காகவே மக்களில் பெரும்பாலானோர் சட்டத்திற்குக் கீழிபடிகின்றனர்.

அரசியல் அதிகாரத்தினைப் பரவலாக்குவதன் மூலமும் மேற்சொல்லப்பட்ட கருத்து மேலும் வலுவடைகின்றது. ஒரு காலகட்டத்திலே அரசியல் அதிகாரத்தினை ஒருவரோ ஒரு குழுவோ கையாண்டு வந்தனர். அப்பொழுது அரசியல் அதிகாரமானது ஒருசிறு குழுவினரின் நலன்களை மேம்படுத்தவும் பாதுகாக்கவே பயன்படுத்தப்பட்டது. ஆயின் இன்று பெரும்பாலான சமூகங்களிலே அரசியல் அதிகாரம் பரவலாக்கப் பட்டுள்ளது. அரசியல் அதிகாரம் மக்களுக்குச் சொந்தமானது என்ற கொள்கை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அரசியல் நடவடிக்கைகளில் மக்கள் மென்மேலும் பெரியளவில் பங்கு பற்றுகின்ற போது அரச கருவிகள் மென்மேலும் சமூகநலத் துறைகளுக்குப் பயன் படுத்தமப்பட்டு வருவதோடு சட்டங்கள்கூட புதிய சமூக சூழலுக்குப் பொருந்தக் கூடிய வகையிலே சீர்செய்யப்பட்டு வருகின்றது. இந்தவகையில் இறைமைக் கொள்கையானது அரசியற்கடப்பாட்டுக் கொள்கையாக அமைவதற்கு கொஞ்சம்கூட போதுமானதாக இல்லை என்பதனை மேற்சொன்ன விருத்திகள் எடுத்துக்காட்டுகின்றன

மாக்சீயக் கொள்ளையாளரின்படி அரசியல் அதிகாரம் பொருளாதார அதிகாரத்திலிருந்து எழுகின்றது என வாதிடுகின்றனர். மனிததேவைகளும் விருப்பங்களும் முடிவில்லாதவை. ஆனால் வளங்கள் வரையறுக்கப் பட்டவையாக இருக்கினிறன. வளங்களைப் பங்கிட்டுக் கொள்ள போராட்டங்கள் ஏற்படுகின்றன. இப்போராட்டத்தினை முடிவுக்கு கொண்டுவர அரசியல் அதிகாரம் தேவையாக இருக்கின்றது. கார்ள் மாக்ஸ் தனது கம்யூனிச அறிக்கையில் (1848) அரசியல் அதிகாரமானது உண்மையில் ஒருவர்க்கம் (பொருளாதார முறைமையைக் கட்டுபடுத்துவோர்) மற்றய வர்க்கத்தின்மீது ஆதிக்கம் செலுத்த ஒழுங்கமைக்கப்பட்ட ஒன்றாக இருக்கின்றது எனக்குறிப்பிட்டுள்ளார். அனைத்து வாக்குரிமையின் அடிப்படையில் அமைந்துள்ள பிரதிநிதித்துவ ஜனநாயக அமைப்பில்கூட பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்துவோரே பொதுசன அபிப்பிராயத்தையும் சமூகசங்கங்களையும் அரச சாதனங்களையும் கட்டுப்படுத்துகின்றனர்

அரசியலின் ஏனைய அம்சங்களைப் போன்று அரசியல் அதிகாரம் என்னும் விடயம் தொடர்பாகவும் இரண்டு பிரதான தற்காலக் கருத்து உண்டு.

## மலையகமே

பட்டினியாய் பல நாள்
பாரினிலே வாழ்ந்தும்
குற்றமற்ற மனதில் குறைகள்தான் நூறு
கற்பனையில் மட்டுமன்றி
கனவிலும் வாழ
இருட்டுக்குள் ஒளியை நித்தமும் தேட
கூழ் குடித்து மனம் சலித்து
நொந்து நொந்து
வாழ்ந்தக் கூட்டம் - அது
மூன்று வேலை வயிறாற
உண்ணுவது எக்காலம்!

ஈசனவன் கூறட்டும்
நாசமான வாழ்வுப் பற்றி...
பசியினைப் போக்க
பகலெல்லம் முயன்றும்
பட்டினி மட்டும் தீராமலே பல நாளும்.....
ஓட்டமும் நடையுமாய்
காசுக்காய் ஒரு பெருங் கூட்டம்
காசுப் போல மனதை
காற்றினிலே விட்டு விட்டு
காலமதைக் கடந்து
ஞானமுடன் வாழ்வைத் தேடி
விடிவெள்ளிதான் வானில்
தோன்றுமோ! – எம்
அடிமை நிலைதான் விலகி
அழகிய வாழ்வுக் கிட்டுமோ?

சரண்ராஜ்

# மோதலும் மோதல் தீர்வும் : கோட்பாட்டு ரீதியான விளக்கம்

# (*Conflict and Conflict Resolution: Theoretical Elucidation*)

இரா. ரமேஸ், உதவி விரிவுரையாளர், அரசறிவியல் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்.

## I. அறிமுகம்:

மோதல் அல்லது முரண்பாடு என்பது தற்கால அரச முறையில் தவிர்க்க முடியாத ஒன்றாகக் காணப்படுகின்றது. குறிப்பாக பல்லின மக்கள் வாழும் நாடுகளில் மோதல் ஒரு வெளிப்படையான தோற்றமாக மாறியுள்ளது. மோதலை தீர்ப்பது பெரிதும் சவாலான காரியமாகக் காணப்படுவதுடன், அதனால் ஏற்படும் சமூக, பொருளாதார, அரசியல் ரீதியான இழப்புகளும் அதிகமாகும். மோதல் ஏற்படுவதில் இன, மத, மொழி, கலாசார காரணிகள் பெரிதும் செல்வாக்கு செழுத்துவதுடன், மறுபுறமாக மனிதனின் ஆசைகள், தேவைகள், ஏக்கங்கள், மனக்குறைகள், விரக்தி நிலை ஆகியனவும் மோதலுக்கான மூலக் காரணிகளாக அமைகின்றன. மோதல் பெரும்பாலான சந்தரப்பங்களில் அழிவுத்தருவதாகவும் சில சமயங்களில் ஆக்கப்பூர்வமானதாகவும் காணப்படுகின்றது. மோதல் பெரும்பாலும் எதிர்மறையான ஒன்றாக அல்லது அழிவுத்தரும் விடயமாக நோக்குவதற்குக் காரணம் அது வன்முறையுடன் தொடர்புப்பட்டிருப்பதாகும். எவ்வாறாயினும் மோதல் என்பதற்கு பல்வேறு வரைவிலக்கணங்களை சமூகவியல் மற்றும் அரசியல் சிந்தனையாளர்கள் வழங்கியுள்ளார்கள்.

கோசர் (Koser) தமது எதிரிகளை மட்டுப்படுத்துவதை, காயப்படுத்துவதனை, அழிப்பதனை இலக்காகக் கொண்ட விழுமியங்கள் மற்றும் பற்றாக்குறையான அந்தஸ்த்து, அதிகாரம், மற்றும் வளங்களுக்கான போராட்டம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

ரோஸ் ஸ்டெக்னர் (Ross Stagner) இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட மனிதர்கள் தம்மில் ஒருவரால் மட்டுமே அன்றி இருவராலும் அடையப்பட முடியாது எனக்கருதுகின்ற இலக்குகளை அடைய விரும்புகின்ற சூழமைவே மோதல் என குறிப்பிடுகின்றார்.
பிசர் (Fisher) என்பார் தம்மிடையே ஒவ்வாத இலக்குகளை அல்லது அவ்விதம் கருதுகின்ற இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தரப்பினருக்கிடையேயான உறவே மோதல் என குறிப்பிடுகின்றார்.

கிறிஸ்டோபர் மிச்செல் (Christopher Mitchell) என்பார் மோதல் என்பது இரண்டு அல்லது பல மனிதர்கள், குழுக்கள், அல்லது அரசுகள் என்பவற்றுக்கிடையிலான விசேட உறவாகும். குறிப்பாக ஒத்துவராத இலக்குகளைக் கொண்டிருக்கின்ற அல்லது கொண்டிருப்பதாக நினைக்கின்ற இரண்டு அல்லது பல தரப்புகளிடையே காணப்படும் உறவே மோதலாகும் என்கிறார்.

குயின்சி ரைட் (Quincy Wright) மோதல் என்பது ஒன்றுக்கொன்று எதிராக வழிநடாத்தப்படுகின்ற சமூக உள்ளடக்கங்களின் எதிர்ப்புத்தன்மையாகும் என்றார்.

ஜேம்ஸ் ஏ ஸ்கெலன்பேர்க் (James A. Schelenburg) போட்டப்போட்டியான அபிலாசைகள், பல்வேறுப்பட்ட தனித்துவங்கள், மற்றும் மனப்பாங்கு மாற்றங்களின் காரணமாக ஆட்களுக்கு அல்லது குழுக்களுக்கு இடையே உருவாகும் எதிர்ப்பை மோதல் என்கிறார்.

லூயிஸ் கிரிசோர்ஸ் (Loius kriesourz) ஒன்றுடனொன்று பொருந்தாத குறிகோள்களைக் கொண்ட ஆட்கள் இருவர் அல்லது அதற்கு மேற்பட்டோர் அது தொடர்பாக கருத்து வெளியிடும் போது சமூக மோதல்கள் தோன்றும்.


ஜோர்ச் சிம்மெல் (George Simmel) முரண்பாடு என்பது பல நேர்மறையான செயற்பாடுகளை கொண்டுள்ளது. அது சமூக தேக்க நிலையை தடுத்து பிரச்சினைகள் உருவாகவும் அவற்றுக்கான தீர்வுகள் எட்டப்படவும் ஒரு மார்க்கமாகக் காணப்படுவதுடன், தனிப்பட்ட மற்றும் சமூக மாற்றத்திற்கான முரண்பாடு எனவும் குறிப்பிடுகின்றார்.

மோர்டன் டெவுட்ஸ்ச்: (Morton Deutsch) மோதல் ஆக்கப்பூர்வமானதும் அழிவுத்தரக்கூடியதுமான இரு வடிவங்களைக் கொண்டுள்ளது. மோதல் தரப்பினர் மோதலின் வெளியீட்டாள் அதிருப்தி அடைந்து தோல்வியடைந்ததாக, ஏதோ ஒன்றை இழந்ததாக உணர்வார்களாயின் அது அழிவுத்தரும் முரன்பாடு (destructive conflict) எனவும் மறுபுறமாக மோதல் தரப்பினர் மோதலின் வெளியீட்டால் திருப்தியடைந்து அவர்கள் வெற்றிப்பெற்றதாக உணர்வார்களேயாயின் அது ஆக்கப்பூர்வமான மோதல் (creative conflict) என்கிறார்.

தோமஸ் ஹொப்ஸ் (Thomas Hobbs) என்பார் அருமையாக கிடைக்கின்ற வளங்களின் முறைக்கெடான பங்கீடே மோதல் ஏற்பட காரணம் என்கிறார்.

எவ்வாறாயினும் மோதல் மற்றும் சமாதானக் கல்வியின் தந்தையெனக் குறிப்பிடப்படுகின்ற பேராசிரியர் ஜொஹான் கல்துங் (Johan Galtung) என்பார் மனிதத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமையே மோதல் ஏற்படுவதற்கான மூலக்காரணி என்கிறார். அந்தவகையில் அடிப்படைத் தேவைகளாக உயிர் வாழ்தல் (survival), சிறப்பான வாழ்க்கை (Wel being) சுதந்திரம் (Freedom), அடையாளம் (Identity) ஆகியவற்றை குறிப்பிடுகின்றார். மிக முக்கியமாக மோதலை விளங்கிக்கொள்வதற்கான மாதிரி ஒன்றினையும் அறிமுகப்படுத்தியுள்ளார். இம்மாதிரியில் மோதல் தோற்றம் பெறுவதில் சூழமைவு, மனப்பாங்கு, நடத்தை அகியன எவ்வாறு செல்வாக்கு செழுத்துகின்றன என்பதனை விளக்குகின்றார். இம்மாதிரி மோதல் முக்கோணி என அமைக்கப்படுகின்றது (Conflict Triangle).

சூழமைவு (Context) மோதலுக்கு ஏதுவான நிலை



மனப்பாங்கு (Attitude)
நட்த்தை (Behavior)
(சமூக அமைப்பின் ஒவ்வாமை,
உளவியல் காரணிகள்)

(வன்முறை, அழிவு, ஆக்கம்)

மேலுள்ள முக்கோணியானது ஒவ்வாத இலக்குகள், மறுதலிக்கும் மனப்பாங்கு, அழிவுப்பூர்வமான நடத்தைகள் என்பவற்றால் மோதல் உருவாகும் என்பதனை விளக்குகிறது. கல்துங்கைப் போன்று மெஸ்லோ (Maslo) என்பாரும் மோதலுக்கான மூலங்களாக மனிதத் தேவைகளைக் குறிப்பிடுகின்றார். அந்த வகையில்

- வெற்றிப்பெறுவதற்கான தேவைகள்
- சுயமரியாதை தேவைகள்
- அழகியல் தேவைகள்
- அறிவியல்
- கூடியிருத்தல், அன்புத் தேவைகள்
- பாதுகாப்புத் தேவைகள்
- உடலியற் தேவைகள் என்பவற்றை மனிதத் தேவைகளாகக் குறிப்பிடுகின்றார்.

மோதல் என்பதற்கு பொதுவான விளக்கம் ஒன்றினை வழங்குவதாயின் தம்மிடையே ஒவ்வாத இலக்குகளைக் கொண்ட அல்லது அவ்விதம் கருதுகின்ற இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் அல்லது குழுக்கள் தமது இலக்குகளை அடைந்துக்கொள்ளும் நோக்கில் செயற்படுவது மோதல் என குறிப்பிடலாம். உண்மையில் மோதல் தரப்பினர் ஒவ்வாத இலக்குகளை அடைந்துக் கொள்ளும் நோக்கில் செயற்படுகின்ற போது மோதல் சூழமைவு ஏற்படுகின்றது. அதேவேளை ஒவ்வாத இலக்குகள் தொடர்ந்திருக்குமாயின் மோதல் மனப்பாங்கும் தொடர்ந்திருக்கும். மிட்செல் மற்றும் கல்துங் ஆகிய

இருவரும் மோதலுக்கான மூலக்கூறுகளாக சூழமைவு, நடத்தை, உளப்பாங்கு ஆகியவற்றை ஏற்றுகொள்கின்றனர்.

## மோதல் காரணிகள்

மோதல் உருவாகுவதற்கு சர்வதேச ரீதியாகவும் தேசிய ரீதியாகவும் சில முக்கியமான காரணிகள் செல்வாக்கு செழுத்துவதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அந்த வகையில் ஒரு சமூகத்தின் அதிகார கட்டமைப்பு (பொதுவாக எந்த ஒரு சமூகத்திலும் அதிகாரம் செழுத்தும் ஒரு குழுவும் அந்த அதிகாரத்திற்கு உட்படும் குழுவும் காணப்படும், இங்கு அதிகாரம் செழுத்தும் குழுவிற்கும் அதிகாரத்திற்கு உட்படும் குழுவிற்கும் இடையில் மோதல் ஏற்படும் -கார்ல் மார்க்ஸ்) எவ்வாறாயினம் மோதலுக்கான பொதுவான காரணிகளாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம் (பிசர்)

- சமூக உறவுகள்
- ஒவ்வாத நிலைப்பாடுகள்
- மனிதத் தேவைகள்
- அடையாள உணர்வுகள்
- கலாசாரங்களுக்கிடையிலான தவறான தொடர்பாடல்
- சமூக அநீதி
- புரிந்துணர்விண்மை, அவநம்பிக்கை, விட்டுக்கொடுப்பின்மை
- நலிவுற்ற அரசு –சமமின்மை, வினைத்திறனின்மை, பாகுபாடு.

மோதல்களின் மட்டங்கள்

- சர்வதேச மோதல்கள்
- இன மோதல்கள்
- குழு மோதல்கள்
- நிறுவன மோதல்கள்
- குடும்ப மோதல்கள்
- தனிநபர் மோதல்கள்

இன்று அதிகமான மோதல்கள் உள்ளக (உள் நாட்டு) மோதல்களாகவேக் காணப்படுகின்றன. அதற்கு இன, மத, மொழி, வரலாறு, உரிமை மறுப்பு, சமூக அநீதி (சமூக பொருளாதார அரசியல் அபிவிருத்தியில்) கலாசாரம் ஆகிய காரணிகளே பிரமான்டமான தாக்கத்தினை செழுத்துகின்றன.

**I. மோதல்களின் வகைகள்**

- உள்ளார்ந்த மோதல்கள்
- வெளிப்படையான மோதல்கள்
- அக்கப்பூர்வமான மோதல் மற்றும் ஆக்கக்கேடான மோதல் -மோர்டொன் டொச்
- யதார்த்தமான மோதல் மற்றும் யுதார்த்தமற்ற மோதல் -கோசர்
- வளங்களுக்கான மோதல் மற்றும் பிழைப்பிற்கான மோதல் -மிட்செல்
- சமச்சீரான மோதல் மற்றும் சமச்சீரற்ற மோதல்

**II. மோதல் செயன்முறை**

மோதல் என்பது பல அபிவிருத்தி கட்டங்களைக் கொண்ட ஒரு செயன்முறையாகும். அது ஒரு நிகழ்வல்ல. உண்மையில், சில மோதல்கள் நீண்ட காலம் நீடிப்பதனையும் மாறாக சில மோதல்கள் குறுகிய காலத்தில் அதன் ஆரம்பத்தில் தீர்க்கப்படுவதனையும் உலகளாவிய அனுபவங்களின் மூலம் அறியமுடிகின்றது. இது மோதல் தரப்பினரின் நோக்கம், இலக்கு, தேவைகள், பிரச்சினையின் தன்மை ஆகிய பல காரணிகளில் தங்கியுள்ளது. எவ்வாறாயினும் மோதல் செயன்முறையை பின்வருமாறு சுருக்கமாக குறிப்பிடலாம்.

- தோற்றம் - (இலக்கு, அடையாளம், உள்ளார்ந்த மோதல்)
- வெளிப்பாடு – (நடத்தை வெளிப்பாடு)
- தீவிரமடைதல் -(ஆரம்பத்தில் அகிம்சை பின்னர் வன்முறை)
- தீவிரம் குன்றல் - (தீர்வுக்கான ஆயுத்தம்)
- தீரவு – (மூன்றாம் தரப்பு, சர்வதேச உதவிகள், உடன்படிக்கைகள்)
- தீர்வின் பின்னரான நிலை – (மனப்பாங்கு, நடத்தை மாற்றம்)

**III. மோதலின் தன்மைகள்**

- ஆசைகள், தேவைகள் தொடர்பான மோதல்கள் -நிலம், வளம்
- பெறுமானங்கள் (விழுமியம்) தொடர்பான மோதல்கள் -சமயம், இனம், மொழி, கலாசாரம்
- சமூக உறவு தொடர்பான மோதல்கள்

**IV. மோதல் தீர்வு எண்ணக்கருக்கள்**

மோதல் தீர்வு முறைகள் அல்லது மோதல்களைக் கையாள்வதற்கான நுட்பங்கள் அல்லது உபாயங்கள் ஒரே மாதிரியானதாக இருத்தல் வேண்டும் என்ற அவசியம் இல்லை. காரணம் மோதல்கள் வேறுப்பட்டவையாகவும் வேறுப்பட்ட பண்புகளையும் கொண்டிருப்பதாகும். ஆகையால் மோதலின் தன்மை, அது செயற்படும் சூழமைவு மற்றும் பண்புகள் என்பவற்றின் அடிப்படையில் வேறுப்பட்ட தந்திரோபாயங்களைக் கையாள வேண்டும் என்பது பொதுவாகவே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இது மோதல் தீர்வுக்கான நெகிழ்ச்சித்தன்மையினை வழங்குகின்றது. உண்மையில் மோதல் தீர்வு எண்ணக்கருக்களானது மோதல்களால் ஏற்படும் அழிவுகளைத் தவிர்க்க மற்றும் குறைக்க துணைபுரியும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அந்த வகையில் பின்வரும் ஐந்து அணுகுமுறைகளையும் மோதல் தீர்வு எண்ணக்கருக்களாக குறிப்பிடலாம்.

1. மோதல் தடுப்பு –Conflict Prevention
2. மோதல் முகாமைத்துவம் - Conflict Management
3. மோதல் இடைத்தீர்வு –Conflict interim Solution
4. மோதல் தீர்வு –Conflict Resolution
5. மோதல் நிலைமாற்றம் -Conflict Transformation

**V. மோதல் தடுப்பு (Conflict Prevention)**

மோதல் தடுப்பு என்பது மோதல் வாழ்க்கை சக்கரத்தின் ஆரம்ப நிலையிலேயே அல்லது அவை வெளிப்படையாகத் தோற்றம் பெறுவதற்கு முன்னரேயே அவற்றை தடுப்பதற்கான முயற்சிகளை எடுப்பதன் மூலம் மோதல்கள் அழிவுமிக்கவையாக மாறாதிருப்பதனை உறுதிசெய்வதற்கான மார்க்கமாகும். மோதல்கள் ஆழமாக வேரூன்ட ஆரம்பித்து வெளிப்படையாக தீவிரமடையுமாயின் அம்மோதலை தீர்ப்பது கடினமாகும். அது சாத்தியமற்றதுமான விடயமாகும். இந்நிலையில் மோதலை ஆரம்பத்திலேயே அடையாளம் கண்டு சரியான மாற்று வழிகளை கையாண்டு தடுத்துவிடுவது பொருத்தமாகும். மருத்துவத்துறையில் குணப்படுத்துவதிலும் பார்க்க நோய் தடுப்பு சிறந்தது என்ற எண்ணக்கரு மிகவும் பிரபல்யமானதாகும். மோதல் தடுப்பும் அதனையொத்த ஒரு விடயமாகும். மோதல் தடுப்பு இரண்டு நிலைகளில் மேற்கொள்ளப்படலாம். 1. மோதல்கள் தோற்றம் பெறுவதற்கு முன்னரே அதன் அறிகுறிகளை அறிந்து அவற்றை தடுத்து விடுவதாகும். 2. மோதல்கள் தோற்றம் பெற்றுவிட்ட நிலையில் அவை ஏற்றுக்கொள்ளப்பட்ட நடத்தை விதிகளை தாண்டாதிருப்பதனை உத்தரவாதப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகும். இவ்வணுகுமுறையினை ஐக்கிய நாடுகள் சபை பெரிதும் வலியுறுத்தி வருவதுடன், இது செலவு குறைந்த ஒன்றாகவும் காணப்படுகின்றது.

மோதல் தடுப்பு செயன்முறையில் முன்னெச்சரிக்கை செய்தல் (Early Warning System) மிகவும் பிரபல்யம் பெற்றுள்ளது. குறிப்பாக மோதல் ஏற்படுவதற்கான/தீர்ப்பதற்கான சாத்தியக்கூறுகளை அடையாளம் காணல், ஆய்வு செய்தல், தகவல்களைப் பரப்புதல் ஆகியவற்றை இது கொண்டுள்ளது. இதற்காக உண்மைகளை கண்டறியும் குழுக்களைத் தாபித்தல், சமாதான மாநாடு, தூதுவர்களை நியமித்தல், சமாதான ஆணைக்குழு, மோதல் தீர்வு பயிற்சிப் பட்டரை, வட்ட மேசை கலந்துரையாடல், உள்ளூர் சமாதான மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்களின் செயலூக்கமான செயற்பாடு ஆகிய உத்திகளையும் பின்பற்றலாம். முன்னெச்சரிக்கை முறையின் மூலம் ஒரு குறிப்பிட்ட சூழலில் மோதல் தோற்றம் பெறுவதற்குறிய வாய்ப்பு உள்ளது என்பது அறியப்படுகின்றபோது மோதலில் ஈடுபட சாத்தியப்பாடுள்ள தரப்பினர்களுக்கிடையில் பேச்சுவார்த்தைகள், நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல் மற்றும் மத்தியஸ்தம் போன்ற நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலம் மோதலை தவிர்த்துக்கொள்ளலாம். எவ்வாறாயினும் இங்கு பிரிதொரு வாதமும் முன்வைக்கப்படுகின்றது, அதாவது மோதல்கள் சில சமயங்களில் சமூக மாற்றத்தினையும் சமூக நீதியினையும் நிலைநாட்டுவதாக அமையும். அத்தகைய சூழலில் மோதலை ஆரம்பத்திலேயே தடுப்பது ஆரோக்கியமான சமூக மாற்றம், சமூக நீதி என்பவற்றுக்கு பாதகமாக அமையும் எனப்படுகின்றது.

## VI. மோதல் முகாமைத்துவம் (Conflict Management)

இது மோதல் வன்முறை வடிவத்தை அல்லது அழிவுத்தன்மையை ஏற்படுத்தும் நிலைக்கு மாறியப்பின் முன்னெடுக்கப்படுகின்ற ஓர் அணுகுமுறையாகும். இங்கு பிரதான கரிசனை வன்முறை அல்லது அழிவை ஏற்படுத்தக்கூடிய நடத்தை மீதாகும். மோதல் தீர்வு செயன்முறையில் இது ஒரு முன் நிபந்தனையாகக் காணப்படுவதுடன், மோதல் நிர்வாகத்திலும் முக்கியமானதொரு தந்திரோபாயமாகக் காணப்படுகின்றது. இங்கு மோதலுக்குரிய காரணங்களுக்கு பெரியளவில் முக்கியத்துவம் கொடுக்கப்பட மாட்டாது. மறுபுறமாக இவ்வணுகுமுறை ஏனைய மோதல் தீர்வு அணுகுமுறைகளுடன் இணைந்த வகையில் கையாளப்பட வேண்டும். சைபிரஸ், லெபனான், சோமாலியா ஆகிய நாடுகளில் ஐக்கிய நாடுகள் சபையால் மேற்கொள்ளப்பட்ட சமாதானத்தை காக்கும் பணிகள் (Peace Keeping) மோதல் முகாமைத்துவத்துடன் தொடர்புடையதாகும். 2002ஆம் ஆண்டு போர் நிறுத்த உடன்படிக்கைக்குப் பின்னர் இலங்கையில் அமைக்கப்பட்ட போர் நிறுத்த கண்காணிப்பு குழுவின் பணிகள்கூட ஒரு வகையில் மோதல் முகாமைத்துவத்துடன் தொடர்புடையதாகும். இங்கு மோதல்களால் ஏற்படும் வன்முறைகள், அழிவுகள், ஆகியவற்றை இல்லாது செய்தல், மோதலின் உக்கிரத்தன்மை, அழிவுத்தரும் ஆயுதங்கள் பரவுவதைத் தவிர்த்தல், மோதல் வேறு திசைகளில் பரவுவதை தடுத்தல் ஆகியன முன்னிலைப்படுத்தப்படும். சுருங்கக்கூறின், மோதல் வன்முறைகளை, அழிவுகளை, இழப்புகளை ஓர் வரையறைக்குள் கட்டுப்படுத்தி வைத்திருத்தலாகும். மோதல் தரப்பினரை உடன்பாடான நிலைக்கு கொண்டு வருவதற்கான ஒரு சூழமைவினை உருவாக்க இவ்வணுகுமுறை துணைப்புரியும்.

## VII. மோதல் இடைத்தீர்வு (Conflict interim Solution)

ஆழமாக வேரூன்டிய நீடித்த மோதல்களில் மோதல் காரணிகள் மிக உறுதியானவையாக இருப்பதன் காரணமாக அவை இலகுவில் கையாளப்படவோ, தீர்க்கப்படக்கூடியவையோ அல்ல. ஆகையால் மோதலின் அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கு மிக நீண்ட காலம் எடுக்கும். மறுபுறமாக அத்தகைய நீடித்த மோதல்கள் அதிகம் அழிவுத் தருவதாகவும் அமையும். மோதலின் அடிப்படைப் பிரச்சினைகள் தீரக்கப்படும் வரை வன்முறைகளைத் தொடரவிடுவது பகுத்தறிவு ரீதியான செயற்பாடல்ல. எனவே மோதலின் உடனடியான பிரச்சினைகளை தீர்ப்பதே மோதல் இடைத்தீர்வாகும். இங்கு மோதலின் உடனடிப் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதனால் மோதலின் ஆழமான காரணிகள் அல்லது அடிப்படை பிரச்சினைகள் மீதான அக்கறை குறைவாகவே காணப்படும்.

இங்கு மோதலில் சம்பந்தப்பட்டுள்ள தரப்புகளின் உயர் மட்ட அரசியல் தலைவர்கள் , இராணுவ தளபதிகள், அரசியல் தீர்மானங்களில் பாதிப்புச் செழுத்தும் தனிநபர்கள் மீது அதிக கவனம் செழுத்தப்படும். காரணம் இவர்கள் மோதலின் உடனடி பிரச்சினைகளை தீர்ப்பதில் செல்வாக்கு செழுத்துபவர்களாகக் காணப்படுவதாகும். இச்செயன்முறையிலும் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம், பேச்சுவார்த்தைகள் ஆகிய உத்திகள் கையாளப்படும். 2002ம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கை மோதல் இடைத்தீர்வின் ஓர் மார்க்கமாகும். இது மீள்கட்டமைப்பு, மனிதாபிமான பிரச்சினைகள், அத்தியாவசிய தேவைகள், புனருத்தாபனம், மனித பாதுகாப்பு, மனித உரிமைகள் பொன்ற உடனடி பிரச்சினைகளை இரு தரப்பும் தீர்ப்பதற்கான ஓர் சட்டகத்தை உருவாக்கியது. வன்முறை மோதலின் உக்கிரத்தன்மையைக் குறைப்பதாகும். 1998ம் ஆண்டு வட அயர்லாந்தில் கைச்சாத்திடப்பட்ட பெரிய வெள்ளி உடன்படிக்கையும் (Good Friday Agreement) இதற்கான பிரிதொரு உதாரணமாகும். இவ்வணுகுமுறையினை தனித்து முன்னெடுப்பது புத்திசாலித்தனமான காரியமல்ல. காரணம் இச்செயன்முறையில் மோதலுக்கான அடிப்படை பிரச்சினைகள் (சமூக அநீதி, உரிமை மறுப்பு, பாரபட்சம், அவநம்பிக்கை, அச்சம்) தீரக்கப்படுவதில்லை. அவை தொடர்ந்திருக்கும். அவை மீண்டும் வன்முறைகளை தோற்றுவிக்காது என்பதற்கு எத்தகைய உத்தரவாதமும் இல்லை. ஆகவே, இவ்வணுகுமுறையும் ஏனைய மோதல் தீர்வு எண்ணக்கருக்களுடன் இணைந்த வகையில் முன்னெடுக்கப்படவேண்டும். உண்மையில் மோதல் இடைத்தீர்வு நீண்டகால மோதல் தீர்வினை நோக்கிய பயணத்திற்கு சாதகமான சமிஞ்சையாக அமையும்.

## VIII. மோதல் தீர்வு (Conflict Resolution)

இது நீண்ட கால நோக்கில் முன்னெடுக்கப்படுகின்ற ஓர் செயன்முறையாகும். இங்கு மோதலின் அடிப்படை காரணிகள் மீது அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படும். உண்மையில் மோதலுக்கான அடிப்படை காரணிகள் சரியான முறையில் இனங்காணப்பட்டு அவை தீர்க்கப்படாவிட்டால் மோதலை நிரந்தரமாக நிறுத்த முடியாது. இது ஆழமாக வேரூன்டிய மோதல்களுக்குப் பெரிதும் அவசியமாகும். தற்காலிகமாக தீர்க்கப்படுகின்ற மோதல்கள் மீண்டும் தோற்றம் பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகும். ஆகவே ஒரு மோதலின் அடிப்படை காரணிகளுக்குத் தீர்வளிப்பதே சிறந்த உபாயம்

என்பதனை இவ்வணுகுமுறை வலியுறுத்துகின்றது. மோதல் தீர்வு பலாத்கார தன்மையுடையதல்ல மறுபுறமாக அது பேச்சுவார்த்தை, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம், அனுசரனை, ஆலோசனை ஆகிய உத்திகளின் மூலம் மேற்கொள்ளப்படுவதாகும். வன்முறை வழிமுறையூடாக மோதல் தீர்க்கப்படுமாயின் அதில் ஒரு தரப்பு வெற்றியடைந்து மறுதரப்பு தோல்வியடையும். இது உண்மையான மோதல் தீரவல்ல. இரு தரப்பும் வெற்றிக்கொள்வதே உண்மையான மோதல் தீர்வு. இதுவே பரஸ்பர நம்பிக்கை, கூடிவாழும் எண்ணம், புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு ஆகியவற்றை வளர்க்கும். அடிப்படை பிரச்சினைகள் களையப்படவதனால் அது உடன்பாடான மனப்பாங்கினை உருவாக்கும். மோதல் தீர்வு என்பது மோதலிள் ஈடுபட்டுள்ள தரப்பினர்களின் வெளிப்படையான நலன்களை உள்வாங்கிக் கொள்வதற்கான வழிகளை நோக்கத்துடன் தேடுதல் என சுவிடன் நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் பீடர் வெலன்ஸ்டீன் குறிப்பிடுகின்றார்.

மறுபுறமாக வெளியிலிருந்து தினிக்கப்படும் ஒரு தீர்வானது நிலைத்திருக்காது (1987 இலங்கை-இந்திய உடன்படிக்கை) உண்மையான மோதல் தீர்வு சமூக நீதி மோதல் தரப்பினரின் அடிப்படை மற்றும் நீண்டகால தேவைகளை, கோரிக்கைகளைப் பூர்த்தி செய்வதாக அமையும். மோதல் இடைத்தீர்வுடன் ஒப்பிடும் போது இது ஒரு பரந்த விடயமாகும். காரணம் இச்செயன்முறையில் பல் மட்ட பங்குதாரர்களும் தொடர்புப்படுவதாகும் (அரசின் தலைவர்கள், மோதல் தரப்பு, சிவில் சமூக அமைப்பு, மத குருமார்கள், புத்திஜீவிகள், பொது மக்கள்). உலகில் பல நீடித்த மோதல்கள் இவ்வணுகுமுறையின் மூலம் தீர்க்கப்பட்டுள்ளது. உதாரணம்: வட அயர்லாந்து, நேபாலம். மோதல் தவிர்ப்பு, மோதல் முகாமை, மோதல் இடைத்தீர்வு ஆகிய அணுகுமுறைகள் மோதல் தீர்விற்குப் பெரிதும் பங்களிக்கும்.

## IX. மோதல் நிலைமாற்றம் (**Conflict Transformation**)

மோதல்கள் சமூக மாற்றத்திற்கான ஊடகங்கள் என்பதனை ஏற்றுக்கொள்ளும் இவ்வணுகுமுறை மோதலுக்கான அடிப்படை பிரச்சினைகளைத் தீர்ப்பது மாத்திரம் போதுமானதல்ல என்பதனையும் வலியுறுத்துகின்றது. மோதல் தீர்வு முயற்சிகள் மோதல் முறைமையில் பூரண மாற்றத்தினை ஏற்படுத்துவதாக அமைய என்ற தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. ஒப்பீட்டளவில் இது ஒரு பரந்தச் செயற்பாடாகும். மோதல்கள் வெறுமனே பிரச்சினைகளை மாத்திரரம் அடிப்படையாகக் கொண்டதல்ல. அது மோதலில் ஈடுபட்டுளளோரின் உளப்பாங்கு எண்ணங்கள், தொடர்பாடல் முறை, சமூக உறவு என்பவற்றிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இவை பெரும்பாலும் எதிர்மறையான மாற்றங்களாக அமையும். ஆகவே அடிப்படை பிரச்சினைகளை மாத்திரம் தீர்ப்பது போதுமானதல்ல. அத்துடன் மோதலால் எதிர்மறையான மாற்றங்களை ஏற்படுத்திய விடயங்களில் நேர்மறையான மாற்றத்தினை ஏற்படுத்த வேண்டும் என்பதனை இது வலியுறுத்துகின்றது. இதன் பொருள் மோதலுக்கு முன்னிருந்த நிலைக்கு திரும்புவதல்ல. மறுபுறமாக சமூக நீதி, ஒருமைப்பாடு, சகவாழ்வு, நல்லிணக்கம், மனித பாதுகாப்பு ஆகியவற்றை உத்தரவாதப்படுத்தக்கூடிய நிலைக்கு மாறிசெல்வதாகும். அந்தவகையில் மோதல் நிலைமாற்றம் பற்றி அதிகம் ஆய்வுகளை மேற்கொண்டுள்ள ஜோன் போல் லெடராக் (John Paul Lederach) என்பார் நான்கு காரணிகளில் நிலைமாற்றம் ஏற்பட வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார்.

- தனிப்பட்ட ரீதியாக: மோதலில் தனிப்பட்ட மனிதர்கள் முக்கிய அம்சமாகும். மனித உணர்வு, கருத்து, சுய கௌரவம் போன்றவற்றில் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கும். ஆகவே இவற்றில் ஆரோக்கியமான மாற்றங்கள் அவசியம்.
- உறவு ரீதியான நிலைமாற்றம்: பகைமை, அச்சம், அவநம்பிக்கை, குரோதம், வன்முறை தொடர்பாடல், மற்றவர் மீதான தவறான அபிப்பிராயம் என்பன மோதல் ஏற்படும். அந்நிலையினை மாற்றி நட்புறவினை வளர்த்தல்
- கட்டமைப்பு நிலைமாற்றம்: சமூக நீதியுடன் தொடர்புடையது. சுமூக அநீதிகளால் மோதல்கள் ஏற்படுகின்ற அதேவேளை மோதல் வன்முறை மேலும் மேலும் சமூச அநீதியை ஏற்படுத்தும். இந்நிலை நீக்கப்பட்டு யாவருக்கும் சமூக நீதியை நியாயத்தை உத்தரவாதம் செய்தல்.
- கலாசார ரீதியான நிலைமாற்றம்: மோதலால் கலாசாரத்திற்கு ஏற்பட்ட சிதைவு, தாக்கம், மாற்றம் என்பவற்றைப் பழைய நிலைக்குக் கொண்டு வருதல்.

உண்மையில், மோதல் நிலைமாற்றம் ஓர் நீண்ட செயன்முறையாகும். அது சகல தரப்பினரையும் உள்வாங்கியதாக அமைகிறது. இச்செயன்முறையில் மீள் நல்லிணக்கம், பொது மன்னிப்பு,

ஆணைக்குழுக்களை தாபித்தல், பொது கேட்டல்கள் என்பன பெரிதும் துணைப்புரியும். தொகுத்து பார்க்கும் போது மோதல் தீர்வு எண்ணக்கரக்களானது ஒன்றுடனொன்று தொடரபுப்பட்டிருப்பதனை அறிய முடிகின்றது. தனித்து ஒரு அணுகமுறையினை பயன்படுத்துவதன் மூலம் பூரண பயனைப பெற முடியாது. ஆவற்றுக்கிடையில் ஓர் ஒழுங்கு உண்டு. மோதல் தடுப்பு –மோதல் முகாமை-மோதல் இடைதீர்வு-மோதல் தீர்வு- மோதல் நிலைமாற்றம் என்ற ஒழுங்காகும். ஓர் அணுகுமுறையினை கையாள்கழன்றப்போது மற்றொரு அணுகுமுறையின் பண்புகளும் கலந்திருக்கும். ஆயினும் சில வகையான ஆய்வுகளில் இவை மாறுப்பட்ட நிலையில் பயன்படுத்தப்படுவதனை காணலாம். இதற்கு தெளிவற்ற கோட்பாட்டு வளர்ச்சியே காரணமாகும்.

## X. மோதலும் சமாதானக் கற்கையும்

மோதல் என்ற எண்ணக்கரு சமாதானக் கற்கையின் தோற்றத்திற்கு பங்காற்றியுள்ளது. முதலாம் உலகப்போர், இரண்டாம் உலகப்போர் ஆகியவற்றினால் ஏற்பட்ட மாபெரும் மனித அழிவுகள் 1950களின் பின்னர் மோதல்களுக்கான தீர்வுக்கு சமாதானத்தை அவசியத்தை வலியுறுத்தியதுடன், சமாதானத்தை நோக்கிய தேடலுக்கான அடித்தளத்தையும் இட்டது. 1990களின் பின்னர் குறிப்பாக பனிப்போர் முடிவடைந்ததன் பின்னர் உள்நாட்டு மோதல்களும், நாடுகளுக்கிடையிலான மோதல்களும் அதிகரித்தன. இவை பெரியளவிலான மனித இழப்பு, சமூக, பொருளாதார அழிவுகளுக்கும் இட்டுச் சென்றது. இதனால் சமாதானம் தொடர்பான கரிசனை, ஆய்வுகள், மாநாடுகள், எழுத்துகள் அதிகரித்ததுடன், மோதல் தீர்வுக்கான பொருத்தமான தந்திரோபாயமாகவும் சமாதானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. உண்மையில் சமாதானக் கற்கைகளுக்கான அடித்தளங்கள் 1950களில் இடப்பட்டப்போதும், 1990களின் பின்னரேயே அது தீவிரமடைந்தது.

இன்று மோதலும் சமாதானக் கல்வியும் பெரியளவில் வளர்ச்சியடைந்திருப்பதுடன், மோதல்களுக்கான நாகரீகமான தீர்வாகவும் சமாதானமே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மோதல்களினால் ஏற்படும் அழிவுகளை சமாதான வழிமுறையின் ஊடாகத் தீர்க்க முடியும் என்பதனை ஐக்கிய நாடுகள் சபை உட்பட் பல சமாதானம் மற்றும் மனித உரிமைகளுக்காக போராடும் பல அமைப்புக்கள் வலியுருத்தி வருகின்றன. தற்காலத்தில் பல்கலைக்கழக மட்டத்தில் இது ஒரு முக்கிய கற்கைநெறியாகப் போதிக்கப்படுவதுடன், இது குறித்த ஆய்வுகளும் பரந்தளவில் மேற்கொள்ளப் படுகின்றது. மோதல் மற்றும் சமாதானக் கல்வியின் வளர்ச்சி, பெறுக்கம் மோதல்களை ஆரம்பத்திலேயே தவிர்க்க உதவும் என்பதுடன், அது சக வாழ்வு, ஒருமைப்பாடு, ஐக்கியம், புரிந்துணர்வு, பரஸ்பர நம்பிக்கை ஆகியவற்றை வளர்க்கவும் துணைபுரியும். ஆகையால், ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் இதனை முக்கியமான ஒரு கல்வியாக வளர்ப்பதில் பங்காற்றி வருகின்றன. அதேபோல், அரசியல் மற்றும் சமூகவியல் சிந்தனையாளர்களும் இக்கற்கைநெறியின் வளர்ச்சிக்குப் பிரமாண்டமான பங்களிப்பினை வழங்கி வருகின்றார்கள். அந்தவகையில், ஜொகான் கல்துங், லெடராக், பீடர் வெலன்ஸ்டீன், கர் (T.R. Gurr), ஹண்டிங்டன் (S.P. Huntington), மிட்செல், பிசர் ஆகியோரைக் குறிப்பிட முடியும்.

### *References*


1. *Lederach, John Paul, Preparing for Peace: Conflict Transformation across Cultures, Syracuse University Press, 1995.*
2. *Galtung, Johan, Human Rights in another Key, Cambridge: Polity Press, 1994.*
3. *Galtung, Johan, Peace by Peaceful Means: Peace and Conflict, Development and Civilization. International Peace Research Institute, New Delhi: SAGE Publications, 1996.*
4. *Uyangoda, Jayadeva, Mediation and Conflict Resolution, in Conflict Resolution and Peace Studies: an Introductory Hand Book, Eds, Uyangoda, Jayadeva, Center for Policy Research and analysis, University of Colombo, 2000.*
5. *Keethaponcalan, S.I, Concepts of Conflict Resolution, United Nations Development Program, Sri Lanka, 2005*
6. *Uyangoda, Jayadeva, Conflict, Negotiation, Mediation and Peace, Social Scientist Association, colombo. 2003.*

# உலகமயமாதலின் பரிமாணங்களும் விளைவுகளும்

## (*Dimension and Consequences of Globalization*)

செல்வி அருளானந்தம் அருளரசி *B.A (Hons), M.Phil* (நோர்வே)



**1. அறிமுகம்**

கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக "உலகமயமாதல்" எண்ணக்கருவானது புவியியலின் மையக் கருப்பொருட்களில் ஒன்றாக வளர்ச்சியடைந்து வருகின்றது. எமது நாளாந்த வாழ்வில் செல்வாக்குச் செலுத்தக்கூடிய ஓர் உந்து சக்தியாக உலகமயமாதல் காணப்படுகின்றது. இக்கட்டுரையானது "உலகமயமாதல்" என்னும் எண்ணக்கருவினை விளக்குவதற்கு முற்படுவதுடன் உலகமயமாதல் செயன்முறையின் பரிமாணங்களையும் அவை பல்வேறு துறைகளிலும் ஏற்படுத்திவருகின்ற தாக்கங்களையும் கலந்தாலோசிப்பதற்கு முயற்சிக்கின்றது.

ஒரு சாதாரண கிராமத்தினைப் பற்றி கிராமத்தில் வாழும் ஒருவன் எவ்வாறு அறிந்து கொள்கின்றானோ, அதேபோன்று இன்று உலகின் எந்த மூலையிலும் இடம்பெறும் சிறிய விடயங்களைக் கூட ஒவ்வொரு மனிதனும் அறிந்து கொள்ளக் கூடியவாறு உலகம் மாற்றமடைந்து வருகின்றது. இச்செயன்முறையானது நாடுகளின் பரப்பியல் எல்லைகளையும் (Spatial boundaries), நேர வேறுபாடுகளையும் (Time differences) கடந்து மிகமிக வேகமாக இடம்பெற்று வருகின்றது. புவியியலின் அடிப்படை எண்ணக்கருக்களில் பரப்பும் (Space), நேரமும் (Time) முக்கியமானவையாகும். இவற்றை மையமாகக் கொண்டு நோக்கும் போது உலகமயமாதல் செயன்முறையானது புவியியலுடன் மிக நெருங்கிய தொடர்புடையதாக காணப்படுகின்றது எனலாம்.

அறிஞர்கள் பலர் உலகத்தை ஒரு கிராமத்திற்கு ஒப்பிடுகின்றனர். இதனால் புவியானது ஓர் எல்லையற்ற உலகம் (A borderless world), பூகோளக் கிராமம் (Global village), பூகோள குக்கிராமம் (Global hamlet) என அழைக்கப்படுகின்றது. எனவே "முழு உலகத்தையும் ஒரே இடமாக நகர்த்தக்கூடிய எந்தவொரு செயற்பாட்டினதும் ஒழுங்கமைப்பை உலகமயமாதல்" எனலாம். உலகமயமாதல் என்னும் பதமானது வெவ்வேறு துறைசார் அறிஞர்களினால் நெருங்கிய வெவ்வேறு சொற்பதங்களின் மூலம் விளங்கிக் கொள்ளப்படுகின்றது. "கோளமயமாதல்", "புவிமயமாதல்", "பூகோளமயமாதல்", "அகிலமயமாதல்", "உலகமயமாதல்" என்பன அவற்றுட் சிலவாகும். இக்கட்டுரையில் "உலகமயமாதல்" என்னும் பதமானது பொதுவாக அனைத்து இடங்களிலும் பயன்படுத்தப்படுகின்றது.

**2. உலகமயமாதல் செயன்முறையின் தோற்றத்திற்கு பங்களிப்புச் செய்துள்ள காரணிகள்**

- புராதன காலங்களைத் தொடர்ந்து ஏற்பட்ட வானசாஸ்திர மற்றும் கணிதவியல் அபிவிருத்தியானது பல்வேறு புத்தாக்கங்கள், தேடல்களுக்கும் அதனூடாக் உலகமயமாதல் செயன்முறையின் தோற்றத்திற்கும் வழிவகுத்தது.
- மதரீதியான பயணங்கள் (இஸ்லாமிய மதக்கடமைகளுக்கான) மற்றும் வணிக நோக்கிலான பயணங்கள் (இபன்பதூதா, மார்க்கோபோலோ போன்ற அறிஞர்களின் பயணங்கள்) என்பனவும் உலகமயமாதலின் தோற்றத்திற்கு வித்திட்டன.
- அளவையியல் புரட்சியானது புதிய அறிவுத்தேடல்களுக்கும், புத்தாக்கங்களிற்கும் வழிவகுத்தது.
- மறுமலர்ச்சி யுகத்தின் தோற்றமும் ஐரோப்பிய நாடுகாண் பயணங்களின் வளர்ச்சியும் உலகமயமாதலின் தோற்றத்திற்கு மிகவும் வலுவூட்டியது. புதிய விடயங்களையும், புத்தாக்கங்களையும் கண்டறியும் ஆர்வம் மற்றும் நாடுகளின் எல்லைகளைத் தாண்டிய இடங்களுக்கான தேடல் என்பன இக்காலப்பகுதியில் மிகவும் முக்கியம் பெற்றன.
- அறிவுயுகமும் துறைகளுக்கிடையிலான அறிவுப் பகிர்ந்தளிப்பும் பல்வேறு துறைசார் அறிவுகளும், ஆய்வு முயற்சிகளும் வளர்ச்சியடைய வழிவகுத்தது. இதனால் வளர்ச்சியடைந்த இலத்திரனியல் தொழில்நுட்பத்தின் து... வளர்ச்சியும், புதிய புதிய இலத்திரனியல்

உபகரணங்களின் உருவாக்கமும் ஏற்பட்டது. இக்காலப்பகுதி உலகமயமாதல் செயன்முறைக்கு மேலும் வலுச்சேர்த்தது எனலாம்.

- மேற்படி விடயங்கள் அனைத்தும் உலகமயமாதற் செயன்முறைக்கு பங்களிப்பு செய்த போதிலும் அதன் புரட்சிகரமான வளர்ச்சியானது தகவல் தொழில்நுட்பத்தின் அறிமுகத்தினால் என்றுமில்லாதவாறு துரிதப்படுத்தப்பட்டது. தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதுசார் உபகரணங்களின் வளர்ச்சி துரித உலகமயமாதலுக்கு வழிவகுத்தது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். தகவல் தொழிநுட்பத்தின் பல்வேறு பரிமாணங்களை நாளுக்கு நாள் நாம் இனங்காண முடியும். நாளுக்கு நாள் தகவல் தொழில்நுட்ப மாற்றங்கள் அதிகரித்து வருகின்றன.

3. உலகமயமாதலின் பரிமாணங்கள்

அ. பரப்பு – உலக வலைப்பின்னலின் விரிவாக்கம் (**Space** - *extensiveness* of global networks)

ஆ. பின்னற் தன்மை – உலக இடைத்தொடர்புகளின் நெருக்கம் (**Regularity** - *intensity* of global interactions)

இ. வேகம் - உலக நகர்வு வேகம் (**Speed** - *velocity* of global flows)

ஈ. ஆழம் - மக்களின் வாழ்க்கைத் தரத்தில் உலக இடைத்தொடர்புகள் ஏற்படுத்தும் தாக்கம் (**Depth** – *impact* of global interconnections on quality of life)

4. தற்காலத்தில் பிரபல்யமான தகவல் தொழில்நுட்பங்களும் தகவல் தொடர்பாடல் ஊடகங்களும்

- கணனி மற்றும் கணனி வலையமைப்பு - கணனி மற்றும் கணணி வலையமைப்புக்களின் விரிவாக்கமானது தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் பரிமாற்றத் துறைகளின் பாரிய வளர்ச்சிக்கு அடித்தளம் இட்டுள்ளது.

- நவீன தொலைபேசிகள்: இலங்கையில் பல்வேறு கையடக்க தொலைபேசி முகவர் அமைப்புக்கள் தற்போது இயங்குகின்றன. “மொபிடெல்”, “டயலொக்”, “எயாடெல்”, “எடிசலாட்” போன்ற அமைப்புக்கள் தொடர்பாடலுக்கான புதிய புதிய உத்திகளை நாளுக்கு நாள் அறிமுகப்படுத்துகின்றன (உம் :- தொலைபேசிகளிலுள்ள சர்வதேச செய்மதி தொடர்பால் வசதி - Roaming).
- இன்ரநெட் வலையமைப்புக்கள் (**Internet**): தமது சொந்த அனுபவங்களை வலையமைப்பூடாக வெளியிடல் உம் blogs)
- தொலை நகல் / பக்ஸ் (**fax**) – மிக நீண்ட தூரங்களுக்கிடையில் செய்திகளை தொலை நகல்களின் மூலம் பகிர்ந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு.
- செய்மதித் தொழில் நுட்பம் (**Remote Sensing Technology**)
  செய்மதி தொழில்நுட்பத்தின் துணையுடன் இன்று பல்வேறு செயற்பாடுகள் இலகுவாகியுள்ளன. (உ+ம்) 24 மணிநேர வானிலை அவதானிப்புக்கள் செய்மதி தொழில்நுட்பத்தின் துணையுடன் பதிவு செய்யப்படுகின்றது.
- புவியியல் தகவல் முறைமையும் (**GIS**), வலைப்பின்னல் புவியியல் தகவல் முறைமையும் (**Web GIS):** வலைப்பின்னலின் துணையுடன் வரைபடங்களை ஒருவருக் கொருவர் பகிர்ந்து கொள்ளுதல், தீர்மானங்களை எடுத்தல் என்பனவற்றுக்கான புதிய (Latest) மென்பொருள் **Arc GIS** 10.1 ஆனது Environmental System Research Institute (ESRI) நிறுவனத்தினால் மிக அண்மையில் இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
- பூகோள இடவமைவு முறைமை (**GPS**)
  எந்தவொரு செயற்பாடும் இடம்பெறும் இடவமைவினை செய்மதிகளின் துணையுடன் மிகவும் திருத்தமாக கண்டறிவதற்கு பூகோள இடவமைவு முறைமை (GPS) உதவுகின்றது. உதாரணமாக இந்திய இராணுவம் பாகிஸ்தான் இராணுவத்தின் இலக்குகளை (இடவமைவினை) மிகத் துல்லியமாக கணிப்பீடு செய்து தாக்குவதற்கு இவ்வாறான **GPS** தொழில்நுட்பம் பயன்படுத்தப்படலாம்.
- இலத்திரனியல் வணிகம் (**E-Commerce**) : இன்ரநெட் வலையமைப்பின் துணையுடன் கொள்வனவு செய்ய வேண்டிய பொருட்களை உலகின் எந்தவொரு இடத்திலிருந்தும் பெற்றுக் கொள்ளக்கூடிய வசதி. இலங்கையில் இருந்தவாறே மாணவன் ஒருவன் வலைப்பின்னலில் தேடலை மேற்கொண்டு தனக்கு விருப்பமான கணனி ஒன்றினை ஜப்பானில் இருந்து

கொள்வனவு செய்ய முடியும் . இதற்கான பணத்தினை அவன் பண அட்டையில் செலுத்துவதன் மூலம் குறித்த கணணி அவனுடைய வீட்டிற்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. பெரும்பாலான இலத்திரனியல் பொருட்கள், பிரபல்யமான நூல்கள், தளபாடங்கள், உணவு பொருட்கள் என்பன இவ்வாறு இலத்திரனியல் வலைப்பின்னல் சந்தைகளின் ஊடாக கொள்வனவு செய்யப்படுகின்றன.

- இலத்திரனியல் கடிதம் (**E-Mail**): ஒரு இடத்தில் இருந்து பல மைல்களுக்கு அப்பால் இருப்பவருக்கு உடனடியாக இலத்திரனியல் கடிதம் மூலம் தகவல்களை அனுப்புவதற்கு இது உதவுகின்றது.
- வலைப்பின்னல் சார் கற்றல் - கற்பித்தல் (Web Based Teaching & Learning), வலைப்பின்னற் பல்கலைக்கழகம் (Virtual Campus), மற்றும் வீடியோ மாநாடு (Video Conference): ருகுணு பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த இளம் விரிவுரையாளர் ஒருவர் சீனா, நேபாளம், ஐக்கிய அமெரிக்கா, ஐப்பான், மற்றும் கனடா ஆகிய நாடுகளைச் சேர்ந்த மாணவர்களுடன் இணைந்து இலங்கையில் இருந்தவாறே வீடியோ மாநாட்டு கலந்துரையாடல்கள் ஊடாக ஒப்படையினைப் பூர்த்தி செய்து பட்டப்பின்படிப்பிற்கான பட்டத்தினை மிக அண்மையில் பெற்றுக்கொண்டார். இது எமக்கு ஆச்சரியமாகவல்லவா இருக்கிறது!
- பேஸ்புக் (**Face book**) : மிகச் சிறுவயதில் இலங்கையில் என்னுடன் படித்து, 15 ஆண்டுகளாக கனடா நாட்டில் வாழும் நண்பி ஒருவரைப் பற்றிய தற்போதைய நிலமைகளை சில செக்கன்களில் இலங்கையில் இருந்தவாறே பேஸ்புக் ஊடாக அண்மையில் என்னால் தெரிந்து கொள்ள முடிந்தது.
- ருவிட்டர் (**Twitter**): ருவிட்டர் மூலம் பல்வேறு விதமான கருத்துப் பரிமாற்றங்களை மேற்கொள்ள முடியும். இந்திய நடிகை, நடிகர்களுடன் கலந்துரையாடுவதற்கு அல்லது அவர்களின் செயற்பாடுகளை ருவிட்டர் மூலம் இலங்கையில் இருந்தவாறே ஒரு சில செக்கன்களில் அறிந்து கொள்ள முடியும்.
- ஸ்கைப் (**Skype**), கூகிள் ரோக் (**Google talk**), யாகூ மெசஞ்சர் (**Yahoo messenger**): உலகின் எந்த மூலை முடுக்குகளிலும் உள்ளவர்களுடன் கலந்துரையாடுவதற்கு இவ் ஊடகங்கள் பிரபல்யமானவை. ஸ்கைப் மூலம் ஒருவரை ஒருவர் பார்த்தவாறு உரையாடலில் ஈடுபடமுடியும்.
- வலைப்பூக்கள் (**blogs**) தமது சொந்த அனுபவங்களை வலையமைப்பூடாக வெளியிடல். எந்த ஒரு நபரும் தமக்கான சொந்த வலைப்பூக்களை உருவாக்க முடியும்.
- இலத்திரனியல் வங்கி (**E-Banking**): வீட்டில் இருந்தவாறே வங்கி அட்டையின் துணையுடன் கொடுக்கல் வாங்கல்களை பூர்த்தி செய்ய முடியும். உதாரணமாக நீர் வழங்கல்களுக்கான (Water supply) மாதாந்த கொடுப்பனவுகள், மின்சாரத்திற்கான மாதாந்த கொடுப்பனவுகள், என்பன வீட்டில் இருந்தவாறே இலத்திரனியல் வங்கி மூலம் செலுத்தப்பட முடியும்.
- இலத்திரனியல் வைத்தியம் ( **E-Medicine**): குறித்த இடத்தில் இருந்தவாறே உலகின் வெவ்வேறு நாடுகளில் சேவை புரியும் நிபுணர்களை வலைப்பின்னல் மூலம் தொடர்பு கொண்டு நோய்களுக்கான வைத்திய சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும்.
- இலத்திரனியல் சந்தைப்படுத்தல் ( **E-Marketing**): உற்பத்தி நிறுவனங்கள் தமது உற்பத்திப் பொருட்களை இணையத்தளங்களின் துணையுடன் விளம்பரம் செய்ய முடியும். வாடிக்கையாளர்கள் தமக்கு வேண்டிய உற்பத்திப் பொருட்களின் பண்புகள் சார்பான விருப்பங்களை உற்பத்தியாளருக்கு தெரிவிக்க முடியும். உம்:- காரை (Car) கொள்வனவு செய்ய விரும்பும் ஒரு வாடிக்கையாளர் குறித்த கார் உற்பத்தி செய்யும் நிறுவனத்தின் வலையமைப்பில் Kit tool இன் துணையுடன் தனக்கு விரும்பிய வடிவம், நிறம் என்பனவற்றில் கார் மாதிரியை வடிவமைத்து குறித்த கார் உற்பத்தி கம்பனிக்கு அனுப்ப முடியும். அவர்கள் அதே போன்ற காரினை உற்பத்தி செய்து குறித்த வாடிக்கையாளருக்கு அனுப்பி வைக்க முடியும்.
- இலத்திரனியல் நூலகம் (**E-Library**): மிக பிரபல்யமான, கிடைப்பதற்கு அரிதான நூல்களை வலையமைப்பின் ஊடாக வாசிக்க முடியும். கொள்வனவு செய்யவும் முடியும்.



இவ்வாறு தகவல் தொழில்நுட்பத்தின் பல்வேறு பரிமாணங்கள் இன்று விருத்தியடைந்து விட்டன. இத்தகவல் தொழில்நுட்பத்தின் புரட்சிகள் நாடுகளின் எல்லைகளையும் தாண்டிய அனைத்து செயற்பாடுகளுக்கும் வழிவகுத்து உள்ளது. இதனையே நாம் உலகமயமாதல் என்கின்றோம்; உலகம் தனது உண்மையான அளவிலிருந்து சுருங்கவில்லை மாறாக செயற்பாட்டு ரீதியாகச் சுருக்கமடைந்து வருகின்றது. நாடுகளின் எல்லைகளையும் தாண்டி இச்செயற்பாடுகள் மிக விரைவாக இடம்பெற்று வருகின்றது. சுருங்கக் கூறின் எமது கைகளுக்குள் உலக செயற்பாடுகள் யாவும் வந்து

கொண்டிருக்கின்றன எனலாம்.

### 5 உலகமயமாதல் செல்வாக்குச் செலுத்தும் பிரதான துறைகள்.

உலகில் தற்போது பல்வேறு பகுதிகளிலும் வாழும் மனிதர்கள் பொருளாதார, அரசியல், சமூக, மற்றும் கலாசார ரீதியாக துரிதமான இடைத்தொடர்புகளை மேற்கொண்டு ஒழுங்கிணைந்து செயற்பட்டு வருகின்றனர். எனவே இச்செயன்முறை பல்வேறு துறைகளிலும் செல்வாக்கு செலுத்தி வருகின்றது. கற்றல் தேவைகளின் இலகு கருதி உலகமயமாதலானது செல்வாக்கு செலுத்தும் துறைகளைப் பின்வரும் பிரதான வகைகளாக விளங்கிக் கொள்ள முடியும்.

1. பொருளாதார உலகமயமாதல்.
2. சூழலியல் உலகமயமாதல்
3. அரசியல் உலகமயமாதல்
4. சமூக மற்றும் கலாசார உலகமயமாதல்

### பொருளாதார உலகமயமாதல்

உற்பத்திப் பொருட்கள், சேவைகள், சர்வதேச மூலதனம் மற்றும் பணம் என்பனவும் இவற்றுக்கான தொழில்நுட்ப பரிமாற்றமும் தேசிய சந்தைகள் அனைத்திலிருந்தும் ஒன்று குவிக்கப்பட்டு பொதுச்சந்தை ஒன்றின் ஊடாக பரிமாற்றம் செய்யப்படும் நிகழ்வினை பொருளாதார உலகமயமாதல் குறிக்கின்றது. இதற்கான பொதுவான நாணய அலகாக ஐக்கிய அமெரிக்க டொலர்கள் (கூ) பயன்படுத்தப்படுகின்றன.

உலகமயமாதல் செயன்முறையால் பல்வேறு நாடுகளின் உற்பத்தி வாய்ப்புக்கள் ஒருங்கிணைக்கப்படுவதனால் பல்நாட்டுக் கம்பனிகள் (Multi-National Companies) உலகளாவிய தொழிற்சாலைகள் (Global Factories), உலகளாவிய வணிக நகரங்கள் (Commercial Global Cities) என்பன தோற்றம் பெறுகின்றன. பொருளாதார உலகமயமாதலினால் பல்வேறு நாடுகளின் பொதுச்சந்தைகளும், நிதிச்சந்தைகளும், பங்குச்சந்தைகளும் ஒன்றுடன் ஒன்று இணைவு பெற்று வருகின்றன. இதனால் உலகின் அனைத்து நாடுகளுக்கும் இடையே பொருட்கள், சேவைகள், மூலதனம் என்பன கட்டுப்பாடுகளிலின்றிப் பாய்கின்றன. இதனால் நிதி நிறுவனங்கள் அவற்றின் செயற்பாடுகள், மூலதன அசைவுகள், முதலாளித்துவச் சந்தை மற்றும் தொழிலாளர் சந்தை என்பன நாடுகளின் தேசிய எல்லைகளையும் தாண்டி உலகளாவிய ரீதியில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

பொருளாதார உலகமயமாதலின் இன்னோர் பரிமாணம் வலைப்பின்னல் சந்தைகளின் பெருக்கமாகும். பொருளாதார உலகமயமாதற் செயன்முறையில் "பணத்தாள்கள்" அவற்றிக்கான முக்கியத்துவத்தினை இழந்து வருவதுடன் அவை பல்வேறு புதிய வடிவங்களில் பரிமாற்றம் செய்யப்படுகின்றன. தொலைநகல் பணக் கட்டளைகள் (Tax money order), பணவரவு அட்டை (Credit card), வங்கி உண்டியல்கள், விசா அட்டைகள் (Visa card) என்பன அவற்றுட் சிலவாகும்.

பொருளாதார உலகமயமாதலினால் வெளிநாட்டுக் கடன்கள், நன்கொடைகள், பண உதவிகள் என்பன குறித்த நாடுகளின் எல்லைகளையும் தாண்டி பரிமாற்றப்படுகின்றன. ஆரம்ப காலங்களில் நிதி ரீதியான செயற்பாடுகளுக்கான மையத்தளங்களாக இலண்டன், டோக்கியோ, நியூயோர்க் என்பன செயற்பட்டன. இன்று உலகெங்கிலும் உள்ள முக்கிய நகரங்களைச் சார்ந்து (உ-ம்: டுபாய், பரிஸ்) வலைப்பின்னல்களின் துணையுடனான வணிக மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் வியாபித்துள்ளன. பொருளாதார ரீதியான உலகமயமாதலில் பல்தேசியக் கம்பனிகளின் செல்வாக்கு அளப்பரியதாகும். பல்தேசியக் கம்பனிகள் பல உலக வர்த்தகத்தின் பெரும்பகுதியை சுவீகரித்துள்ளன. சில பல்தேசியக் கம்பனிகளின் மொத்த வருமானமானது நாடுகள் சிலவற்றின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை விடவும் மிக அதிகமாகும். (உ-ம்: கொக்ககோலா கம்பனி) உலகமயமாதலின் விளைவாக உலக வர்த்தக அமைப்பு (WTO), ஹட் (GATT) போன்ற உலகளாவிய வர்த்த அமைப்புக்கள் வேகமாக செயற்பட ஆரம்பித்தன. பொருளாதார உலகமயமாதலானது பொருளாதார ரீதியான மாற்றங்களையும் புரட்சிகளையும் ஏற்படுத்திய அதேவேளை மீள முடியாத இழப்புக்களையும் உலக நாடுகளில் ஏற்படுத்தியுள்ளது.

### சூழலியல் உலகமயமாதல்

சூழலியல் ரீதியான சிந்தனைகளிலும் செயற்பாடுகளிலும் தேசிய நாடுகள் அனைத்தும் ஒருங்கிணைந்து அவற்றின் எல்லைகளைத் தாண்டிச் செயற்படுவது சூழலியல் உலகமயமாதலாகும். சூழலியல் பிரச்சினைகளைக் கலந்துரையாடுவது, சூழலியல் வளங்களைப் பாதுகாத்தல் கண்காணித்தல் என்பனவற்றுக்கான முயற்சிகளை நாடுகளின் எல்லைகளையும் தாண்டி உலகளாவிய ரீதியில் இணைந்து முன்னெடுப்பது இதில் அடங்கும். சூழலியில் சார் தேசிய பிரச்சினைகளைக் கலந்துரையாடுதல், வெவ்வேறு நாடுகளிலுள்ள சூழல்சார் நிபுணர்களின் அறிவுரைகளை குறித்த நாடுகளில் இருந்தவாறே வீடியோ கலந்துரையாடல் மூலம் மேற்கொண்டு சூழலியல் பாதுகாப்புக்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல் என்பன சூழல்சார் உலகமயமாதலின் புதிய பரிமாணங்களாகும். “உலக ரீதியாகச் சிந்தித்து உள்ளூர் ரீதியாக செயற்படுத்து (Think Globally and Act Locally)” என்னும் வாசகம் சூழல்சார் உலகமயமாதலை பிரதிபலிக்கக்கூடிய சிறந்த வாசகமாகும்.

சூழலியல் உலகமயமாதலானது உலகளாவிய ரீதியில் சூழல்சார் விழிப்புணர்வுகளை அதிகரிப்பதற்கும், இயற்கை வளங்களை பாதுகாப்பதற்கான உபாயங்களை முன்னெடுப்பதற்குமஇ தொழில்நுட்பத்தின் துணையுடன் இயற்கை வளங்களை மீள்பயன்பாட்டிற்கு உட்படுத்தும் முயற்சிகளுக்கும் வழிவகுத்துள்ளது. உலகளாவிய ரீதியில் சூழல்சார் உணர்வு பூர்வமான வலயங்களின் (Environmental sensitive zones) தோற்றத்திற்கு உலகமயமாதலானது வழிவகுத்துள்ளது. (உ-ம்) உலகளாவிய உயிர்ப்பல்வகைமைச் செறிவு வலயங்கள் (World Biological Hot Spot) உருவாக்கப்பட்டுள்ளன. இலங்கையும் உயிர்ப்பல்வகைமைச் செறிவு வலயங்களினுள் உள்ளடக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

இயற்கை அனர்த்தங்கள் குறித்த நாடு ஒன்றில் ஏற்படும்போது அதனை கட்டுப்படுத்துவதற்கான தொழில்நுட்பம், ஊழியர்களுக்கான தேவை, மூலதனம் என்பன நாடுகளின் எல்லைகளையும் தாண்டி பாய்ச்சலுக்கு உட்படுகின்றன. உதாரணமாக ஜப்பான் நாட்டில் 2011ம் ஆண்டு பாரிய வெள்ள அனர்த்தமும் புவிநடுக்கமும் ஏற்பட்டு அழிவுகள் அதிகரித்தபோது உலகின் பல்வேறு நாடுகளும் தமது இயலுமைகளுக்கு ஏற்ப பல்வேறு பங்களிப்புக்களை வழங்கியமை மறக்க முடியாத நிகழ்வாகும். இலங்கையில் 2004ம் ஆண்டு ஆழிப் பேரலையினால் கரையோரத்தாவரங்கள் மற்றும் ஏனைய உயிரியல் வளங்கள் மோசமான பாதிப்புக்களுக்கு உட்பட்டன. ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான், இந்தியா, சீனா, இத்தாலி, ஜேர்மனி, நெதர்லாந்து, சுவீடன் போன்ற பல நாடுகள் இக்கரையோர வளங்களை மீள ஒழுங்கமைப்பதற்கான தொழில்நுட்ப உதவிகள், திறன்சார் ஊழியப்படைகள், கொடுகடன்கள், நன்கொடைகள், அறிவுசார் ஆலோசனைகளை இலங்கைக்கு வழங்கின. உதாரணமாக கரையோர கண்டல் தாவரங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கு இந்தியா பல்வேறு மட்டத்திலான உத்திகளையும் இலங்கைக்கு வழங்கியுள்ளமையை நாம் மறந்துவிட முடியாது. சூழலியல் உலகமயமாதலானது இவ்வாறான பல ஒருங்கிணைந்த செயற்பாடுகளுக்கு வழிவகுத்துள்ளது. மாறாக, உலகமயமாதலானது இயற்கை வளங்களின் சுரண்டல்கள், சூழலியல் சீரழிவுகள், சூழலியல் அகதிகளின் தோற்றம் இயற்கை அனர்த்தங்களின் வேகம் தூண்டப்படுதல் என்பனவற்றுக்கும் வழிவகுத்துள்ளது.

### அரசியல் உலகமயமாதல்

தேசிய நாடுகளின் அரசியல் சிந்தனைகளும் செயற்பாடுகளும் அவற்றின் எல்லைகளையும் தாண்டி நாடுகளுக்கு இடையில் எவ்வித தடைகளும் இன்றி பரவலடைவதை அரசியல் உலகமயமாதல் குறிக்கின்றது. 2000ம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையில் 200 தேசிய அரசுகள் அங்கத்துவம் பெற்றிருந்தன. இந்நாடுகளுக்கிடையில் அரசியல் உடன்படிக்கைகள், மாநாடுகள் மூலம் அரசியல் சிந்தனைகள் கலந்தாலோசிக்கப்படுகின்றது. ஜனநாயக ரீதியில் அரசியல் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கான தேர்தலானது ஐக்கிய அமெரிக்கா, நோர்வே போன்ற நாடுகளில் இலத்திரனியல் வாக்களிப்பு (E-Voting) மூலம் கணிப்பீடு செய்யப்படுகின்றது.

தேசிய அரசுகளின் இராஜதந்திர நகர்வுகள், அரசியல் செய்திகள், குறித்த நாடுகளில் இடம்பெறுகின்ற வன்முறைகள், ஏனைய அரசியல் செயற்பாடுகள், மிகச் சில வினாடிகளுக்குள் தகவல் தொடர்பாடல் ஊடகங்கள் பலவற்றின் ஊடாக உலகின் அனைத்து பகுதிகளையும் சென்றடைகின்றது. நாடுகளின் எல்லைகளைத் தாண்டி அரசியல் அகதிகள் உலகளாவிய நகர்வுகளை மேற்கொள்கின்றனர். அதேபோன்று அரசியல் மற்றும் சமூக குற்றவாளிகளை இனங்காண்பதற்கு விமான

நிலையங்களில் இலத்திரனியல் விரல் பதிவுகள் (Digital Finger prints) பயன்படுத்தப்படுகின்றன. இது குறித்த நாடுகளில் மட்டுமன்றி சர்வதேச ரீதியான அரசியல் மற்றும் சமூக குற்றவாளிகளை இனங்காணப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றது.

பல்வேறு செய்தி வலையமைப்புக்கள் (Yahoo news, CNN, Google news, USA Today, BBC, Lanka Sri, Lanka Web, Tamil Win, Christian Today ), இலத்திரனியல் பத்திரிகைகள் (E-Newspapers : Virakesari online, Lakbima Sinhala e- news paper, Daily news online, Thinakkural online), கூகிள் ஏத் (Google Earth) என்பன முக்கிய பங்குவகிக்கின்றன. லண்டனில் அரச திருமணம் (The Royal Wedding) இளவரசர் வில்லியமிற்கும் (Prince william) கேற் மிடில்ரனிற்கும் (Kate Middleton) இடையில் 29.04.2011 ஆம் ஆண்டு இடம் பெற்றபோது அதே கணங்களில் 400 மில்லியன் உலகப் பார்வையாளர்கள் யூரியூப் (You Tube ) ஊடாக அதனைக் கண்டுகழித்தமை அரசியல் உலகமயமாதலின் விளைவேயாகும்.

ஐக்கிய அமெரிக்காவில் தற்போதைய ஜனாதிபதியான பராக் ஒபாமா (Barack Obama) வெள்ளை மாளிகையில் 2009ம் ஆண்டு ஜனவரி மாதம் 20ம் திகதி பதவி ஏற்ற போது அதே கணங்களில் உலக மக்கள் அனைவரும் தத்தமது நாடுகளில் இருந்தவாறே அவ்விழாவினைக் கண்டுகளித்தமையை நாம் மறந்து விட முடியாது. இதற்காக Geo Eye - 1 என்னும் செய்மதி ஐக்கிய அமெரிக்கா தொழில்நுட்பவியலாளர்களினால் உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டது. அரசியல் உலகமயமாதலினால் மேற்படி பல நன்மைகள் ஏற்படுகின்ற போதிலும் தேசிய அரசுகளின் சுதந்திரங்கள் பாதிப்படைதல்இ ( உ-ம் இலங்கையின் சனல் 4 விவகாரமும் அதன் விளைவுகளும்) தேசிய அரசுகள் மீதான சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்தல் என்பனவும் தவிர்க்க முடியாததாகின்றது.



**சமூக மற்றும் கலாசார உலகமயமாதல்**

உலகமயமாதலானது நாடுகளின் எல்லைகளையும் தாண்டி சமூக, கலாசார ரீதியாக இடங்களையும் அதில் வாழும் மக்களின் சமூக, பண்பாடு மற்றும் கலாசார அம்சங்களையும் ஒழுங்கிணைத்துள்ளது. இன்று வெவ்வேறு நாடுகளில் வாழும் மக்களின் கலாசார விழுமியங்கள், உணவுப்பழக்கங்கள், உடையமைப்புக்கள், நவநாகரிக மற்றும் அழகுசாதன பொருட்களின் பின்பற்றல்கள் என்பன நாடுகளுக்கு இடையில் பரவலடைந்துள்ளன.

பாரம்பரியமான சாதியமைப்பு முறைகள், சமூக ஏற்றத்தாழ்வுகள், இனமத மற்றும் மொழிரீதியான வேறுபாடுகளையும் தாண்டி இடம்பெறுகின்ற கலப்புத்திருமண முறைகள் சமூக உலகமயமாதலுக்கான மிகச் சிறந்த ஆதாரமாகும். உடையமைப்புக்கள் என்றும் இல்லாதவாறு நாடுகளின் எல்லைகளை உடைந்தெறிந்தவாறு வேகமாகப் பரவலடைகின்றன. குறிப்பாக கணிசமான கீழைத்தேய நாட்டவர்கள் மேலைத்தேசத்தவரின் உடைகளான ஜீன்ஸ், குட்டைப்பாவாடை, நீளக்காற்சட்டை, பாண்ட், ரீசேட் போன்ற ஆடைகளைப் பயன்படுத்தத் தொடங்கியமையும் மாறாக சில மேலைத் தேயத்தவர்கள் கீழைத்தேச உடைகளான சல்வார், சேலை, சாரம், குர்தா என்பனவற்றை அணிவதற்கு ஆரம்பித்துள்ளமையும் கலாசார உலகமயமாதலுக்கான மிகச்சிறந்த உதாரணமாகும்.

ஆங்கில மொழியும் ஆங்கிலமொழிசார் கல்வி முறைகளும் சர்வதேச ஆங்கிலப் பாடசாலைகளின் வளர்ச்சி என்பன சமூக மற்றும் கலாசார உலகமயமாதலின் முக்கிய அம்சமாகும். இன்று ஆங்கில மொழியானது அரசியல் எல்லைகளையும் தாண்டி உலகப் பொதுமொழியாக வளரச்சியடைந்து வருகின்றது. கலாசார உலகமயமாதலானது பாரம்பரியங்களையும் தனித்துவங்களையும் தகர்த்து எறிந்தவாறு உலகப் பொதுக் கலாசாரப் பாங்குகளை ஏற்படுத்தி வருகின்றது. இந்நிலமைகள் நாகரீகமான சமூகங்களை உருவாக்குவதாக பலர் குறிப்பிடுகின்ற போதிலும் தனித்துவமான கலாசார விழுமியங்களைக் கட்டிக்காக்க முனையும் ஆர்வலர்களிடையே கலாசார ரீதியான பீதி நிலமைகளையும் (Cultural frustrations) ஏற்படுத்தி வருகின்றது.

**6. உலகமயமாதலின் விளைவுகள்**

உலகமயமாதல் எல்லாத்துறைகளிலும் தாக்கம் செலுத்தி வருகின்றது. உலகின் அனைத்துப் பகுதிகளிலும் அளப்பரிய நன்மைகளையும் அவற்றுக்கு இணையாக பாரிய தீமைகளையும் உலகமயமாதல் ஏற்படுத்தி வருகின்றது. உலகமயமாதல் செயன்முறையானது ஏற்படுத்தி வருகின்ற சில நன்மைகளையும் தீமைகளையும் தொடர்ந்து நோக்குவோம்.

**உலகமயமாதலின் சில நன்மைகள்**

- நாடுகளுக்கு இடையில் சுதந்திர சர்வதேச வர்த்தகத்தை ஏற்படுத்தியுள்ளது.
- நாடுகளின் எல்லைகளுக்கூடாக ஒருங்கிணைந்து செயற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகளவில் இலகுபடுத்தப்பட்டுள்ளன.
- உலகம் இணைந்து செயற்பட உலக தகவல் தொடர்பாடல் வழிவகுத்துள்ளது.
- உலகம் பூராகவும் உள்ள தனிமனிதர்களும் கூட்டுறவு அமைப்புக்களும் அதிகரித்த தகவல் தொடர்பாடலின் மூலம் பெருமளவான தகவல்களை பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.
- போக்குவரத்து வசதிகள் மிக இலகுவாகவும் வேகமாகவும் மலிவாகவும் இடம்பெறும் நிலையினை ஏற்படுத்தியுள்ளது.
- பூகோளப் கிராமத்தின் தாக்க அதிகரிப்பினால் கலாசாரக் கட்டுப்பாடுகள்/வரையறைகள் உடைத்தெறியப்பட்டுள்ளன.
- நாடுகளின் விருத்திக்கான ஜனநாயகக் கருத்துக்கள் பரவலாக்கப்படுகின்றன.
- தேசிய அரசுகள் பெருமளவில் ஒன்றிலொன்று தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக தங்கியிருக்கும்/ உதவிபுரியும் நிலைமையை ஏற்படுத்தியுள்ளது.
- அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கிடையில் யுத்தம் ஏற்படுகின்ற சாத்தியங்களை (Likelihood) குறைத்துள்ளது.
- அபிவிருத்தியடைந்த நாடுகளில் சூழல் பாதுகாப்புச் செயன்முறைகளை அதிகரித்துள்ளது.
- பொருட்களின் தரங்கள் அதிகரித்ததுடன் மலிவாக அவற்றை கொள்வனவு செய்வதற்கான ஆற்றல் அதிகரித்துள்ளது. மலிவான பொருட்களின் விலைகள் கொள்வனவு ஆற்றல்களை மக்கள் மத்தியில் அதிகரித்துள்ளது (உதாரணம்: Laptop).
- புதிய தொழில்நுட்பங்களின் வளர்ச்சியையும் புத்தாக்கங்களையும் துரிதப்படுத்தியுள்ளது.
- உலகமயமாதலானது அரசியல் மற்றும் பொருளாதார யூனியன்களை தோற்றிவித்ததுடன் அது நாடுகளுக்கு இடையிலான ஒப்பந்தங்களையும் வசதி வாய்ப்புக்களையும் இலகுபடுத்தியுள்ளது (ஐரோப்பிய யூனியன்).
- ஒவ்வொரு மக்களையும் உலகின் பங்குதாரர்களாக உணரவைத்து அவர்களின் தலைமைத்துவ ஆற்றல்களை விரிவுபடுத்தியுள்ளது.
- உலக வலைப்பின்னலூடான தொழில்வாய்ப்புக்களை நாடுகளுக்கு இடையில் ஏற்படுத்தியுள்ளது.
- கல்விக்கான வாய்ப்புக்களை விரிவுபடுத்தியதன் மூலம் தனிப்பட்ட மனிதர்களின் ஆளுமை விருத்திக்கு வழிவகுத்துள்ளது.
- வேறுபட்ட நாடுகளின் உள்ளூர் மட்டத்திலான பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வுகளை அதிகரித்துள்ளது.
- உலகளாவிய கல்விச் சான்றிதழ்களையும், ஆய்வுத்தரங்களையும் இலகுவில் ஏற்றுக்கொள்வதற்கு உலகமயமாதல் வழிவகுத்துள்ளது.

**உலகமயமாதலின் சில தீமைகள்**

- திறன்சார் மற்றும் திறன்சாரா ஊழியர்களின் நகர்ச்சி அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளிலிருந்து அபிவிருத்தியடைந்த நாடுகளை நோக்கி மலிவான தொழிற்படையைப் பெற்றுக் கொள்வதற்காக ஏற்பட்டு வருகின்றது.
- ஒரு நாட்டில் ஏற்படக்கூடிய பொருளாதார சீர்கேடுகள் (Economic destructions) உலகின் ஏனைய அனைத்து நாடுகளையும் பாதிப்பதற்கான சாத்தியப்பாடு காணப்படுகின்றது. அமெரிக்காவில் 2008ம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார ஸ்திரமற்ற தன்மை இன்று வரை உலகப் பொருளாதாரத்தினை தள்ளாட வைத்துள்ளமை யாவரும் அறிந்ததே.
- பல்வகையான சமூகங்களுக்கிடையில் குறித்த கலாசாரத்திற்கான தனித்துவங்களைப் பேணும் முயற்சிகள் வன்முறைகளைத் தூண்டிவருகின்றன.
- நாடுகளுக்கிடையில் கட்டுப்படுத்த முடியாத வகையில் நோய்கள் பரிமாற்றப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்து வருகின்றது.
- சர்வதேச அமைப்புக்கள் தனிப்பட்ட மற்றும் தேசிய ரீதியான ஆட்சி அதிகாரத்தில் தலையீடு செய்கின்றன (உம்: உலக வர்த்தக நிறுவனம்).
- மக்கள் சமூக அமைப்புக்களையும் (Civil society organizations) சாதாரண தனிப்பட்ட மனிதர்களையும் கூட்டுறவு அமைப்புக்கள் தேசிய அரசுகள் மீது கொண்டுள்ள செல்வாக்கானது அப்பால் நகர்த்துகின்றது.

- கட்டுப்படுத்த முடியாத கூட்டுறவு அமைப்புக்களின் (Corporations) கட்டுப்பாட்டில் உலக தகவல் ஊடகங்கள் இயங்குவதனால் கலாசார வெளிப்பாடுகள் வரையறுக்கப் படுவதற்கான ஆபத்து ஏற்படுகின்றன.
- லௌகீய வாழ்க்கை முறைமை (Materialistic lifestyle) பரவல் அடைவதனால் செல்வச் செழிப்புக்கான வழியாக பொருட்களை கொள்வனவு செய்யும் மனப்பாங்கு மக்கள் மத்தியில் அதிகரித்தல் (உ-ம் : உடனடி உணவுப் பொதிக் கொள்வனவு)
- வளங்களைப் பெற்றுக் கொள்வதற்கான போட்டியில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு இடையில் வெளிப்படையான யுத்தங்களும், அவற்றுக்கு உள்ளேயே குளிர் யுத்தங்களும் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகரித்துள்ளன.
- அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலுள்ள பலவீனமான சட்ட ஒழுங்குகளை தமக்கு சாதமகமாக பயன்படுத்திக் கொண்டு மாசுபடுத்தும் அமைப்புக்கள் சூழல் மீதான தமது கரிசனையினைக் குறைத்துக் வருகின்றன.
- பணமானது திறந்த சந்தைகளின் மூலம் கட்டுப்பாடுகளின்றி சுழற்சிக்கு உட்படுவதனால் எந்தவிதமான பணரீதியான ஒழுக்கக் கட்டுப்பாடுகளும் (No ethics) பின்பற்றப்படுவதில்லை.
- உலகமயமாதல் பாரிய வணிகவியலாளர்களையும் பாரிய கம்பனிகளையும் மட்டுமே வெற்றியாளர்களாக்கி இருக்கின்றது. உலக சந்தையில் போட்டி போட முடியாத நிலைமைகளினால்இ சாதாரண வணிகர்களையும் சிறிய வணிகக் கம்பனிகளையும் வணிக நடவடிக்கைகளிலிருந்து வெளியேற வைத்துள்ளது.
- அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளில் ஊழியர்கள் அதிகளவில் சுரண்டப்படுகின்றனர் (சிறுவர்கள் உட்பட).
- கலாசாரங்களின் ஒன்றிணைவான தன்மை வேறுபட்ட நிறத்தவர்களை ஒதுக்கல் (Racism) கலாசார விடயங்களில் பொறுமை காக்க முடியாத தன்மை (Xenophobia) மற்றும் தேசிய அடையாளங்கள் இழக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் என்பவற்றை உருவாக்கி வருகின்றது.

- ஏழைகளுக்கும் செல்வந்தர்களுக்கும் இடையிலான இடைவெளி மிகவும் அதிகரித்துள்ளது.



அண்மைக்காலங்களில் புவியியலாளர்களின் கவனத்தையீர்த்த ஓர் பதமாக "உலகமயமாதல்" காணப்படுகின்றது. உலகமயமாதலானது நான்கு அடிப்படையான பரிமாணங்களைக் கொண்டுள்ளதுடன் பல்வேறுபட்ட துறைகளிலும் செல்வாக்குச் செலுத்தி வருகின்றது. இது காலத்திற்கு காலம் ஏற்பட்ட பல்வேறுபட்ட காரணிகளின் செல்வாக்கினால் உருவான செயன்முறையாயினும் நவீன தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் ஊடகங்கள் அதன் வேகத்தைத் துரிதப்படுத்தியுள்ளன. பொதுவான உலகமயமாதலின் விளைவுகள் அனைத்து நாடுகளிலும் தாக்கம் செலுத்துகின்ற போதிலும் தாக்கங்களின் தன்மைகள் நாடுகளுக்கிடையே பரப்பியல் ரீதியாக வேறுபடுகின்றது. உலகமயமாதலின் நன்மைகளையும், தீமைகளையும் அனுபவிப்பதில் அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளுக்கிடையில் வேறுபாடுகள் காணப்படுவதனை அவதானிக்கலாம். பூகோள குக்கிராமத்தில் ஓர் நாடாக இலங்கையும் இருப்பதனால் உலகமயமாதல் இலங்கையிலும் செல்வாக்குச் செலுத்தி வருகின்றமையினை நாம் அவதானிக்கலாம்.

**உசாத்துணை நூல்கள்**


நவபொருளியலாளன் அமைப்பு, 2000, உலகமயமாதலும் அதன் விளைவுகளும், பொருளியல் வணிகச்சஞ்சிகை

சமூக விஞ்ஞான துறை, 2009, புவியியல் பாடத்திட்டம் : கல்விப் பொது தராதரப்பத்திரம் (உயர்தரம்), தேசிய கல்வி நிறுவகம்

Breedon, G. L, 2011, *Advantages and Disadvantages of Globalization*, Kosmosaic Production: Where Media Meets Mind and Spirit, Available in: http://www.darkseptemberrain.com/ideas/advantages.htm

Department of Political Science, 1999, *What is Globalization*, University of California, Available on: psclasses.ucdavis.edu/ire001/**Globalization.ppt**

Haus Berlin, W.B, 1998, *Shaping Globalization*, International Conference 17th and 18th of June 1998.

Indraratna, A. D. V. D. S, 1997, *Globalization and South Asia: Retrospect and Prospect*, Sri Lankan Association for the Advanvement of Science

Moseley W.G; Lanegran D.A and Pandit K, 2007, *The introductory reader in Human Geography: Contemporary debates and classic writings*, Black well publishing, USA

# அரசியல் சமூகமயமாதல்

**"விழுமியங்கள், நம்பிக்கைகள், மனபாங்குகள், தேர்ச்சி என்பவற்றைக் கொண்ட அரசியல் பரப்பில் தனிமனிதனுக்கும் ஏனையவர்களுக்குமிடையிலான கலந்துரையாடலே அரசியல் சமூகமயமாதலாகும்"**
(*Lucian Pye,1965*).

**சி. புஷ்பராஜ்**

**அரசியல் சமூகமயமாதல் என்றால் என்ன**



அரசியல் பரப்பில் அரசியல் சமூகமயமாதலை (Political Socialization) எவ்வாறு விளங்கிக் கொள்வது என்கின்றபோது அது மிக பெரிய பிரச்சினைக்கு உரியதாகக் காணப்படுகின்றது. ஏனெனில் இது கலாசாரம், அரசியல் சட்டம், மரபுகள், உணர்ச்சிகள் மற்றும் நடத்தைகள் போன்ற பல்வேறு அம்சங்களைக் கொண்டுக் காணப்படுகின்றது. சமூகமயமாதல் என்பது கற்றலில் இருந்துப் பெறப்பட்டது. இதில் கற்றுக் கொள்ளப்பட்ட அரசியல் நடத்தை மற்றம் புரிந்துணர்வு என்பன முக்கியமானவையாகும். இங்கு இடம்பெறும் கற்றல் என்பது நடைமுறை அரசியலை விளங்கிக் கொள்வதற்கு உதவிப் புரிவதுடன் அரசியல் முறைமையின் தொடர்ச்சிக்கும் துணை நிற்கின்றது. அரசியலை கற்றல் என்கின்ற போது வரையறுக்கப்பட்ட எல்லைகளைக் கொண்டு பொருட்களை பாவித்து கற்றுக் கொள்ளல் என Dean Jaron கூறுகின்றார். இங்கு அரசியல் சமூகமயமாக்கத்தின் ஊடாக ஆட்சி முறையை கற்கின்றதன் மூலம் தனிப்பட்ட மனிதனின் அரசியல் நம்பிக்கை மற்றும் மனோபாவங்கள் அபிவிருத்திச் செய்யப்படுகின்றன.

அரசியல் சமூகமயமாக்கத்தின் ஊடாகப் பெற்றுக் கொள்ளப்படும் அரசியல் கல்வியானது அரசியல் சமுதாய மாற்றத்திற்கு முக்கியமானது. ஆனால் எல்லா அரசியல் கல்வியும் அரசியல் சமூகமயமாதலாக இருக்க முடியாது. எல்லா அரசியல் சமூகமயமாதலும் அரசியல் கல்வியாக இருக்க முடியாது (Conover,1991). சமூக மெய்யியலாளர்களின் சிந்தனையின்படி அரசியல் கல்வியுடன் ஒன்றிணைக்கப்பட்ட சமூகமயமாதல் என்பது கிறிஸ்துவுக்கு முன்பே ஆரம்பிக்கப்பட்ட ஒன்று. பிளேட்டோவின் - குடியரசு, அரிஸ்டோடிலின் - அரசியல் மற்றும் ஒழுக்கம் போன்ற நூல்கள் இக் கல்வியை உள்வாங்கியதுடன் சமூக நிர்வனங்களின் முக்கியத்துவத்தையும் கூறுகின்றன. மேலும் இளம் சிறுவர்கள் முதல் முதியோர்கள் வரை கல்வி கற்க கூடிய சூழ்நிலையும் வலியுறுத்தப்பட்டது. எனவேதான் அரசியல் சமூகமயமாதல் என்பது ஒப்பீட்டு அரசியல் அறிஞர்களினால் உருவாக்கப்பட்ட ஒன்றல்ல. ஆனால் அரசியல் விழுமியங்கள் மற்றும் கருத்துக்களை கற்றுக் கொள்வதனை முதன்மையாக கொண்ட அரசியல் சமூகமயமாதலை இலட்ச கணக்கான அமெரிக்க, ஸ்ரேலிய, இத்தாலிய, ரஷ்யா, சீன, வியட்நாம் மற்றும் ஏனைய நாட்டு மக்களும் அனுமதித்துள்ளார்கள் (Shively,1995)

**வரைவிலக்கணம்**

சமூகமயமாக்கம் என்பது பரந்துப்பட்ட ஒரு பகுதியாகும். இச் சமூகமயமாக்கத்தின் ஊடாக பெற்றுக் கொள்ளப்படுகின்ற தனிப்பட்டவர்களின் அபிவிருத்தி என்பது சமூகத்தில் உள்ளவர்கள் பெற்றுக் கொள்கின்ற நடத்தை மற்றும் அனுபவத்தில் தங்கியுள்ளது (Baker,1971). அரசியல் சமூகமயமாக்கத்தினைப் பற்றி டேவிட் ஈஸ்டன் மற்றும் டென்ஸ் கூறும்போது "ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசியல் பயிற்சிகளையும் நடத்தை முறைகளையும் தனிமனிதன் அபிவிருத்தி செய்கின்ற செயன்முறையாகும்" என்கின்றார்கள். வேல்டன் என்பவர் "அரசியல் சமூகமயமாக்கம் என்பது பரந்துப்பட்ட ஒன்றாகும். இது சமூகத்தில் அரசியல் கலாசாரத்தை பரம்பரையில் இருந்து இன்னொரு பரம்பரைக்கு நிலைமாற்றுவதாகும்" என்கின்றார். "அரசியல் சமூகமயமாக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்ட மரபுகள், விழுமியங்கள், நடத்தைகள், என்பவற்றை மக்கள் கற்றுக் கொள்ள உதவும் பயிற்சியாகக் காணப்படுகின்றது" என சிங்கில் கூறுகின்றார். மேலும் விழுமியங்கள், நம்பிக்கைகள், மனப்பாங்குகள், தேர்ச்சி என்பனவற்றைக் கொண்ட அரசியல் பரப்பில் தனிமனிதனுக்கும் ஏனையவர்களுக்குமிடையிலான கலந்துரையாடலே அரசியல் சமூகமயமாதலாகும் (Pye,1965). "தீர்க்கமான மக்களின் அரசியலில், அரசியல் சமூகமயமாக்கம் என்பது ஒரு செயன்முறையாகும். பிரஜைகளினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சிக்கலான நம்பிக்கைகள், உணர்வுகள், தகவல்கள் என்பவற்றினைக் கொண்டு சுற்றியுள்ள அரசியல் உலகினை மதிப்பிட உதவுகின்றது" என Dawson and Prewitt என்போர் கூறுகின்றார்கள்.

கறீன்ஸ்ர் என்பாரின் கூற்றுப்படி "அரசியல் சமூகமயமாக்கம் என்பது சிறுவர்களாக வளரும் போது கற்றுக் கொள்ளும் அரசியல் மற்றும் சமூக கோட்பாடுகளும் பெரியவரான பிறகு வகிக்கும் பதவிகளுக்கு தம்மை தயார்ப்படுத்திக் கொள்வதுமாகும்" என்கின்றார். இதனை ஆல்மன்ட் அவர்கள் கூறும்போது "அரசியல் சமூக கருத்துகள், சிந்தனைகள், நடவடிக்கைகள் என்பவற்றினை சிறுவயதிலே அறிய செய்வதாகும். இவை சிறுவர்கள் இளையவரான பிறகு சமூகம் மற்றும் அரசியல் பணிகளை செய்ய உதவுகின்றது" என்கின்றார். **Robert Presthus** கூறுகின்றார் "சமூகமயமாதல் என்பது சமூக ஒழுங்கு முறை தொடர்ச்சியாக இயங்குவதற்கு நபர் ஒருவர் மரபுகளை கற்றுக்கொள்வதாகும்" (Elcock,1976). பொதுவாக கூறுவோமாயின் ஒரு சீரான செயன்முறையின் மூலம் தனிமனிதன் ஒருவன் பொருத்தமான அரசியல் பயிற்சிகளை சூழலில் இருந்து பெற்றுக் கொள்ளுதல் அரசியல் சமூகமயமாதல் எனலாம். இச் செயன்முறையின் ஊடாக பழைய நபர்களிடமிருந்து இளம் பராயத்தினருக்கு அரசியல் பயிற்சிகள் சீராக நிலை மாற்றப்படுமாயின், அவர்கள் அரசியல் அறிவினையும், மனபாங்கினையும் மதிப்பீடு செய்வதற்கான தரத்தினைப் பெற்றிருப்பர்.

### அரசியல் சமூகமயமாக்கத்தின் பொது நிலைகள்

அரசியல் சமூகமயமாக்கத்தினை மூன்று பொது நிலைகளின் ஊடாக அடைந்துக் கொள்ளலாம்.

1. நேரடியாக
2. மறைமுகமாக
3. தனிப்பட்ட ரீதியில்

நேரடியாக அரசியல் சமூகமயமாக்கத்தினை அடைந்துக் கொள்ளும் போது தகவல் தொடர்புகள் அதிகம் தாக்கம் செலுத்துகின்றன. இதில் விழுமியங்களின் தொடர்பு அதிகமாகும். இதனை ஏற்படுத்துவதில் பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி என்பன முக்கியத்துவம் பெற்றுக் காணப்படுகின்றன. கல்வி நிறுவனங்களில் காணப்படும் அரசியல் மற்றும் மக்கள் சம்பந்தமான அல்லது நிர்வாக சம்பந்தமான பாட புத்தகங்கள் நேரடியாக அரசியல் சமூகமயமாக்கத்தினை நோக்கி இட்டு செல்கின்றன. பாகிஸ்தான், ஈரான் போன்ற இஸ்லாமிய அடிப்படைவாத இயக்கங்கள் உள்ள நாடுகளில் இதன் தாக்கம் அதிகமாகும். மேலும் நேரடியான, வெளிப்படையான அரசியல் அறிவு என்பது பிள்ளைகள் சில பொருட்களைப் பார்ப்பதன் மூலம் பெற்றுக் கொள்கின்றார்கள். குறிப்பாக அரசியல் தலைவர்களின் படம், வன்முறைகளினால் இறந்த உடல்களைத் தொலைகாட்சிகளில் பார்த்தல் போன்ற நிகழ்வுகளைக் குறிப்பிடலாம். அதுபோன்ற நிகழ்வுகள் தனிமனிதனின் மனோ நிலையில் மாற்றங்களை ஏற்படுத்தும் (Spiro,1970).

மறைமுகமான அரசியல் சமூகமயமாக்கம் என்பது அனுபவத்தினால் கட்டியெழுப்பப்படுகின்றது. இது சிறுவர்களின் காலத்தினை கவனத்தில் கொள்கின்றது. ஆரம்பத்தில் சிறுவர்களுடன் ஆசிரியர்கள், நண்பர்கள், பெற்றோர்கள் கொண்டுள்ள உறவு நிலை தாக்கத்தினால், பிந்திய கால வாழ்க்கையில் அரசியல் தலைமைத்துவம் மற்றும் நல்ல பிரஜையாக இருப்பதற்கு வழிவகுக்கின்றது.

அரசியல் சமூகமயமாக்கத்தினை கட்டியெழுப்புவதில் தனிப்பட்ட வாழ்கை முறை தாக்கம் செலுத்துகின்றது. ஆரம்பத்தில் குடும்பங்களினால் உருவாக்கப்படும் புதிய தனிப்பட்ட விழுமியங்கள் என்பது இவர்களின் பலமான எதிர்கால புதிய சமூகத்தின் ஒரு சமூக குழு உள்வாங்களையும் நடிபங்கினையும் கொண்டிருக்க காரணமாகின்றது. மேலும் நாட்டின் ஒரு பகுதியில் இருந்து இன்னொரு பகுதியை நோக்கி செல்லும் போது தலைமைத்துவம், தொழில் என்பன இழக்க வேண்டி ஏற்படுகின்றன. இதன்போது அரசியல் அபிலாசைகளையும் இழக்க வேண்டி ஏற்படுகின்றன. குறிப்பாக வறுமை, போர் காரணமாக இடம் பெயர்ந்து புதிய நாடுகளுக்கு செல்லும் போது திடீரென ஏற்படும் அனுபவத்தின் போது முன்னைய அடிப்படை மனப்பாங்கினை பகிர்ந்துக் கொள்ள முற்படுவர். இவ்வாறான சந்தர்ப்பங்களில் இம் மக்களின் அரசியல் உள்வாங்களில் ஒரு மோதல் நிலை உருவாக்கப்படும். குறிப்பாக முதல் முறை வாக்களித்தல் (Almond And Verba,1963).

### அரசியல் சமூகமயமாக்கத்தின் வெளியீடுகள்

1. அரசியல் அபிலாசைகளை ஏற்படுத்துகின்றது
2. அரசியல் விழிப்புணர்வுகளை ஏற்படுத்துகின்றது
3. அரசியல் நடத்தைகளை வழி நடத்துகின்றது
4. அரசியல் கட்டமைப்பினை தெளிவுப்படுத்துகின்றது
5. அரசியல் முறைமையினைப் பாதுகாக்கின்றது
6. முரண்பட்ட அபிலாசைகளை ஏற்படுத்துகின்றது

7. அதிகாரம் பற்றிய மன எழுச்சியை ஏற்படுத்துகின்றது
8. பொதுசன அபிப்பிராயத்தை ஏற்படுத்துகின்றது
9. அரசியல் - சமூக தொடர்புகளை விருத்தி செய்கின்றது
10. அரசியல் பங்குப்பற்றலினை அபிவிருத்தி செய்கின்றது
11. நாட்டிற்கு சிறந்த பிரஜைகளை உருவாக்குகின்றது
12. தனிமனித அபிவிருத்தியினை ஏற்படுத்துகின்றது

### அரசியல் சமூகமயமாக்கல் முகவர்கள்

#### 1. குடும்பம்

சமூகமயமாக்கல் செயன்முறையில் குடும்பத்தின் முக்கியத்துவம் மரபுரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. சமூகமயமாக்கத்தில் குடும்பத்தின் முக்கியத்துவத்தை அரிஸ்டோட்டில் கட்டாயப்படுத்துகின்றார் (Conover,1991). இரண்டாம் தரமான அரசியல் கட்டமைப்பில் குடும்ப அனுபவம் மிக முக்கியமானது. ஏனெனில் அரசியல் மனப்பாங்கின் மூலாதாரமாக அனுபவங்கள் காணப்படுவதனால், இவ் அனுபவங்களை சிறுவர்களுக்கு வழங்குவதாக குடும்பம் காணப்படுகின்றது. மேலும், அரசியல் அல்லாத மனித தொடர்புகளின் மூலம் அரசியல் தொடர்புகளை தெரிந்துக் கொள்வதற்கு குடும்பம் என்பது மூலமாக காணப்படுகின்றது (Almond and Verba,1963). நேரடியாகவும் மறைமுகமாகவும் முதலாவது சமூகமயமாக்கல் நிறுவனமான அல்லது மூலமாக குடும்பம் செல்வாக்குச் செலுத்துகின்றது. மேலும், சிறுவர்கள் அவர்களது குடும்பத்தில் அடிப்படையான சமூக மனப்பாங்கினைக் கற்றுக் கொள்கின்றார்கள். இது மக்கள் மீது நம்பிக்கை வைப்பதற்கும், அதிகாரம் பற்றிய மனப்பாங்கிற்கும் துணையாக நிற்கின்றது. இது எதிர்கால அரசியலுக்கு மிக முக்கியமான பகுதியாகக் காணப்படும் (Shively,1995)

குடும்பம் என்பது மரபு ரீதியான விழுமியங்களை பிள்ளைகளுக்கு கடத்தும் மிக முக்கியமான வாகனமாகும். இவ்வாறு கடத்தப்படுகின்ற மரபுகள் மற்றும் விழுமியங்களின் மூலம் ஏனைய மக்களுக்கு பிள்ளைகள் கீழ் பணிந்திட எதிர்பார்க்கப்படுகின்றது (Calvert,1993). சிறுவர்கள் ஆரம்ப காலங்களில் அதிகளவான நேரங்களை குடும்பத்திலேயே செலவழிக்கின்றார்கள். குடும்பத்தின் செல்வாக்கு மற்றும் மனப்பாங்கு என்பன சிறுவர்களை அதிகாரத்தினை நோக்கி நகர்த்துகின்றன. குடும்பத்தில் பங்குப்பற்றும் போது குடும்பத்தின் கொள்கைகள், தீர்மானங்கள், அரசியல் கலந்துரையாடல் என்பன சிறுவர்களின் அரசியல் திறனை அதிகரிக்கின்றன.

வீட்டின் தலைமைத்துவத்தினர் தாம் பின்பற்றுகின்ற அரசியல் கட்சி மற்றும் கொள்கைகள் என்பவற்றுக்கு ஏற்பவே பிள்ளைகள் பிறரிடம் பேசும்போது அக்கொள்கைகளுக்கு ஆதரவாக பேசுகின்றார்கள். இப்பேச்சுகளில் நாட்டின் நடைமுறை அரசியல் விடயங்கள் அதிக செல்வாக்கு செலுத்துகின்றன. இலங்கையில் வாழும் இந்திய வம்சாவழி தமிழர் குடும்பங்களில் அரசியல் சம்பந்தமான 66% வீதமான நபர்கள் குடும்பத்தில் கலந்துரையாடினும் அவர்களின் அரசியல் விடயம் உள்நாட்டு யுத்தம், வறுமை மற்றும் பொருளாதாரத்துடன் மிக நெருங்கிய தொடர்பினை கொண்டதாக் காணப்பட்டது (2008).

குடும்பத்தின் செல்வாக்கு என்பது அனைத்து துறைகளிலும் காணப்படுகின்றது. இதனால் பால்நிலை, சமத்துவமான கல்வி, தொழில் தகைமை, தொழில் என்பன குடும்பத்திலேயே நிலைமாற்றப்படுகின்றன. இனத்துவம், மொழி, கலாசாரம், வகுப்பு, பொருளாதார அபிலாசைகள், விழுமியங்கள் குடும்பத்தில் பகிரப்படுகின்றன. இதனால் உலகமயமாக்கத்திற்கு (Globalization) உற்பட்ட வாழ்வில் குடும்பம் தனிமனிதனின் இருப்பிடத்தை நிலை நிறுத்துவது மட்டுமல்லாது சிறந்த பயிற்சி தளமாகவும் அமைகின்றது.

இங்கு பின்வரும் விடயங்களில் பிள்ளைகளின் அரசியல் சமூகமயமாக்கத்தில் குடும்பம் செல்வாக்குச் செலுத்த முடியும்

1. பாடசாலைக்குப் பிள்ளைகளை அனுப்புதல்
2. ஊடகங்களைப் பார்க்கும்போது ஏற்படும் கலந்துரையாடல்கள்
3. பெற்றோர் பெற்றிருக்கும் அறிவு மற்றும் அனுபவம்
4. குடும்ப ரீதியான உறவு வைத்திருத்தவர்களுடன் அரசியல் கதைத்தல்
5. பெண்கள் பொறுப்புடன் நடத்தல்

2. பாடசாலை

அரசியல் சமூகமயமாக்கல் முகவர்களில் குடும்பத்திற்கு அடுத்தப்படியாகக் காணப்படுவது பாடசாலையாகும். கோட்பாட்டு ரீதியாகவும் நடைமுறை ரீதியாகவும் அரசியல் அறிவினை வழங்குவதில் முக்கிய இடத்தினை பெற்றுக் காணப்படுகின்றது. அபிவிருத்தி சம்பந்தமான படிமுறைகளில் இதன் பங்கு அதிகமாகும். பாடசாலை பொதுவாக சிறுவர்களின் அபிவிருத்தியில் கவனம் செலுத்துகின்றன. இங்கு வகுப்பறையில் பெற்றுக் கொள்ளப்படும் அனுபவம் என்பது மிக முக்கியமானதாகும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் தமது பெற்றோரின் அறிவுறுத்தலுக்கு இணங்க பிள்ளைகைள் செயற்திட்டத்தை முன்னெடுக்கின்றார்கள். பாடசாலை நேரத்துக்கு அப்பால் பெற்றோர்கள் சிறுவர்களின் மனப்பாங்கில் மாற்றத்தை ஏற்படுத்தும் அதிகாரத்தை பெற்றவர்களாகக் காணப்படுகின்றார்கள்.

சிறுவர்களின் சமூகமயமாக்கல் விடயங்களில் ஆரம்ப பாடசாலைகளின் நிலை முக்கியமானதாகக் காணப்படுவதுடன், வகுப்பறைகளில் பெற்றுக்கொடுக்கப்படும் அனுபவங்கள் மிக முக்கியமானது (chard., Niemi and Sobieszak,1977). இருப்பினும் உயர் வகுப்பு மாணவர்கள் அரசியல் சம்பந்தமான விடயங்களைப் பற்றி விவாதிக்கும் போது குடும்ப ஆதிக்கத்தில் இருந்து சற்று விடுபட்டு விவாதிக்க முற்படுகின்றார்கள். அரசியல் தொடர்பான மனப்பாங்கானது நண்பர்கள் மற்றும் சிரேஸ்ட மாணவர்களிடமிருந்து பெற்றுக் கொள்கின்றார்கள். இதில் அரசியல் தொடர்பான மனபாங்குகள் சிரேஸ்ட மாணவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளுதல் உயர்வாகக் காணப்படும் (Jennings and Niemi,1974).

ஆரம்ப வயதுகளில் அரசியல் சம்பந்தமான அறிவுகளை குறைவாக பெற்றுக் கொண்ட சிறுவர்கள் படிப்படியாக அறிவினை அதிகரித்துக் கொள்கின்றார்கள் (Liebschulz and Miemi,1974). அரசியல் தொடர்பான அறிவு மற்றும் அனுபவம் என்பவற்றினை பாடசாலையில் இருந்து பெற்று வெளியேறும் போது இளைஞர்களின் விழிப்புணர்வுகளுக்கு உதவுகின்றது. மேலும் உயர் கல்வி கற்கின்றபோது இளைஞர்கள் மக்களிடம் பெற்ற அனுபவங்களையும் பாடசாலையில் பெற்ற அறிவினையும் ஒருங்கிணைத்து கலந்துரையாடல்களை மேற்கொள்கின்றபோது எதிர் மறையான தாக்கங்களும் ஏற்படுகின்றன. (Litt,1965). 18 வயதினை அடைகின்றபோது (பாடசாலை உயர் கல்வி முடிந்தவுடன்) வாக்குரிமையைப் பெற்று, தான் பெற்ற அனுபவத்தினை நடைமுறைப்படுத்த எத்தனிக்கிக்கின்றார்கள்.

உயர் பாடசாலைகளில் சம வயது குழுக்களின் (Peer Groups) அரசியல் சமூகமயமாக்கமானது பாடவிதானங்களில் தங்கியிருக்கின்றன. பாடவிதானங்களின் ஊடாக பெற்றுக் கொண்ட அரசியல் சமூகமயமாதல் ஊடாக 9-12 வகுப்பு வரையான மாணவர்கள் அரசியல் நடத்தை சம்பந்தமான வினாக்களுக்கு விடையளிக்கின்றார்கள் (Hess and Torney,1967). பாடசாலையில் காணப்படும் சமவயது குழுக்களுடன் நடைமுறை அரசியல் சம்பந்தமான விவாதத்தின் போது அரசியல் அறிவு வளர்ச்சியடைகின்றது.

மேலும் பாடசாலையில் இடம் பெறுகின்ற விசேட நிகழ்ச்சிகளான வருடார்ந்த பரிசளிப்பு விழா, வருடார்ந்த இல்ல விளையாட்டுப் போட்டி என்பவற்றுக்கு பிரதம அதீதிகளாக அரசியல்வாதிகள் கலந்துக் கொள்கின்றார்கள். இவ்வாறான சந்தர்ப்பங்களில் அவர்களின் அரசியல் உரையின்போது மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் அரசியல் அறிவு நேரடியாகக் கடத்தப்படுகின்றது.

இலங்கைப் போன்ற நாடுகளில் ஆசிரியர் நியமனங்களைப் பெறுகின்றபோது அரசியல்வாதிகளே அதனை வழங்குகின்றார்கள். அதேப்போன்று பதவி உயர்வு, இடமாற்றம், பாடசாலை அபிவிருத்தி போன்ற விடயங்களுக்கு அரசியல்வாதிகளை நாடுவதனால், ஆசிரியர்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் இடையிலான தொடர்பு சில குறிப்பிட்ட ஆசிரியர்களை மையப்படுத்தி குறிப்பிட்ட காலத்தில் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதன்போது சில ஆசிரியர்கள் தனக்கு சார்பான அரசியல் கட்சியைப் பற்றி வகுப்பறைகளில் உயர்வாகக் கதைப்பதுடன் ஏனைய கட்சியை முழுமையாக குறைக்கூறுகின்றப் போக்கும் காணப்படுகின்றது. இதனால் மாணவர்கள் மத்தியில் பக்கச்சார்பான நிலைப்பாடு ஆசிரியர்களினால் அறிவுறுத்தல் (Instruction) மூலம் வளர்க்கப்படுகின்றது. இது மாணவர்களின் விழுமியங்களிலும், அறிவிலும் மாற்றத்தை ஏற்படுத்தி, அரசியல் சார்ந்த நடத்தையை தீர்மானிக்கின்றது. சில சந்தர்ப்பங்களில் ஆசிரியர்களுக்கு எதிரான கருத்துகளை மாணவர்கள் கொண்டுக் காணப்பட்டாலும் விவாதிப்பதற்கான சந்தர்ப்பம் இல்லாமலிருக்கின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் மாணவர்களின் மனதில் எழும் முரண்பாடு என்பது தாம் விருப்பம் கொண்டிராத

கட்சியின்மீது மேலும் வெறுப்பினை ஏற்படுத்துகின்றது.

அரச கட்டுப்பாட்டில் காணப்படும் பாடசாலைகளை மிக முக்கியமான நடைமுறை முகவராகும். கம்யூனிச நாடுகள் பிரஜைகளின் மீள் உருவாக்கத்திற்கு பாடசாலைகளை அதிகம் பயன்படுத்துகின்றனர். சோவியத் யூனியனின் அரசியல் கற்பித்தல் முறையானது மாக்சிய- லெனினிச கோட்பாடுகளினால் அமைக்கப்பட்டு, பாடசாலைகளிலும் இளைஞர் அமைப்புக்களிலும், கல்லூரிகளிலும் வேலைத் தளங்களிலும் கற்பிக்கப்பட்டது (Ponton and Gill,1995).

### 3. வெகுசன ஊடகம்

அரசியல் சமூகமயமாக்கத்தில் வெகுசன ஊடகம் மாற்றத்தை ஏற்படுத்த கூடியது. புதிய ஊடகங்கள் மற்றும் உலகமயமாக்கம் என்பன பொது உறவுகளுக்கு இடையிலான மாற்றத்தை ஏற்படுத்துகின்றது (Roclman,2006). ஊடகத்துறையானது பொதுவான சமூகமயமாக்கத்திலும், தனியான அரசியல் சமூகமயமாக்கத்திலும் முக்கியத்துவம் வாய்ந்த முகவர் தாபனமாகக் காணப்படுகின்றது. இளம் பராயத்தினரின் அரசியல் சமூகமயமாக்கத்தில் இதன் பங்கு அதிகமாகும். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்த்தல், பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல் என்பன அரசியல் ரீதியாக சிந்திக்க வைப்பதுடன் விழுமியங்கள், நடத்தைகள் என்பனவற்றிலும் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. இது சமூகமயமாக்கத்திற்கும் மீள் சமூகமயமாக்கத்திற்கும் தொடர்ந்து உதவுகின்றது. வேறுப்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் வயது வந்தவர்களின் ஒப்பீட்டு ஆராயும் திறனையும் அதிகரிக்கின்றன.

ஆரம்ப பாடசாலை மாணவர்கள் தொலைக்காட்சி செய்திகளை நேரடியாகப் பார்த்தல், கேட்டல் மூலம் அறிவுப் பெருக்கத்திற்கு உற்பட்டு தகவலைத் தேட முற்படுகின்றார்கள். இதில் 4ஆம், 5ஆம் தரங்களில் கல்வி கற்கின்ற மாணவர்களின் ஆர்வம் என்பது அதிகரித்து காணப்படுகின்றது (Atkim and Gantz,1998). மேலும் தொலைக்காட்சியைப் பார்ப்பதன் மூலம் அரசியல் பங்குப்பற்றலைத் தூண்டுவதில் பாடசாலை, குடும்பம் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன. இங்கு குடும்பத்துடன் சமவயது குழுக்களுடன் தாம் பார்த்தவற்றை அல்லது கேட்டவற்றைப் பற்றி விவாதிக்கின்றபோது தான் பார்த்தவற்றை மீளவும் நினைவுப்படுத்திக் கொள்கின்றார்கள். பழக்கப்பட்ட சிறுவர்கள் செய்தி நிகழ்ச்சிகளைப் பார்க்கின்றபோது அமைதியாக இருந்து செவிமடுக்கின்றார்கள்.

பொருளாதாரத்தில் கீழ் மட்டத்தில் காணப்படும் மூன்றாம் உலக நாடுகளில் செய்திகளை பார்க்கின்றபோது பொருட்களின் விலையேற்றம்மீது அதிக கவனம் செலுத்துகின்றார்கள். மேலும் தேர்தல் காலங்களில் தேர்தல் முடிவுகளை அறிந்துக் கொள்வதற்காக அதிகளவு இலத்திரனியல் ஊடகங்களை பயன்படுத்துகின்றார்கள். விளம்பரப்படுத்தலுக்காக சுவரொட்டிகள், துண்டு பிரசுரங்கள் சில பிரதேசத்தில் அரிதாக காணப்படுவதனால் தொலைக்காட்சியை நாடுவதே அதிகமாக காணப்படுகின்றது. தினந்தோரும் அரசியல் தொடர்பான செய்திகளை பார்பதற்கு ஒதுக்கும் நேரத்தினைவிட விசேடமான சில தினங்களில் (மே தினம், சுதந்திர தினம், நாட்டின் விசேட அரச வைபவங்கள், தேர்தல் காலங்கள், அரசியல் தலைவர்களின் மரணம்) செய்திகளைப் பார்பதிலும், கேட்பதிலும் அதிக ஆர்வம் காட்டுகின்றார்கள். சிலர் தமது மனதை திருப்திப்படுத்தகூடிய செய்திகளை தருகின்ற, பக்கச்சார்பின்றி செயற்படுகின்ற ஊடக நிறுவனங்களின் செய்திகளை நாடுகின்றார்கள்.

முரண்பாட்டுத் தன்மைக் கொண்ட நாடுகளிலேயே அதிகளவான அரசியல் சமூகமயமாதல் இடம்பெறுகின்றன (Rosecrance,1976). குறிப்பிட்ட நாட்களில், குறிப்பிட்ட கிழமைகளில் வன்முறைகள், போராட்டங்கள், குண்டு வெடிப்புகள் மற்றும் அதிகரித்த கைதுகள் இடம் பெறும்போது ஊடகங்களை நாடுகின்ற போக்கு ஏனைய நாட்களைவிட அதிகரித்துக் காணப்படுகின்றது. இதன்போது தனியார் ஊடகங்களையே அதிகளவு நாடுகின்றார்கள். இதனை யுத்தம் நடைபெறும் நாடுகளில் அதிகம் காணலாம். மேலும் அரசியல் கட்சிகள் கிழமை தோறும் ஊடக மகாநாடுகளை நடாத்துவதுடன் தேர்தல் காலங்களில் அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களும் ஊடகங்களை சிறப்பாக பயன்படுத்துகின்றார்கள்.

அரசியல் சமூகத்தில் ஊடகங்களின் பங்களிப்பினை இலங்கையுடன் தொடர்புபடுத்தி பார்க்கின்றபோது சிங்களச் சமூகத்தில் சமூகமயமாக்கல் செயன்முறையானது நேரடியாக ஊடகங்களுடன் தொடர்பு காணப்படுவதனை பெரேரா என்பவர் தெளிவுப்படுத்துகின்றார். மேலும், இம் மக்களின் அரசியல் சமூகமயமாக்கம் என்பது உள்நாட்டு முரண்பாட்டின் மூலம் கட்டியெழுப்பப்பட்டது. இதில் தமிழ், சிங்கள மக்களிடையே இழிவுப்படுத்தக்கூடிய உறவுகளை வளர்ப்பதில் ஊடகங்களின் பங்கு அதிகம் என்கிறார். மேலும் ஊடகங்கள் சிங்களச் சமூக அமைப்பில் அவர்களது உணர்ச்சியை

தூண்டுவதாகவும், உணர்ச்சி வசப்பட்ட சிங்கள மக்களின் மன நிலை தமிழ் மக்களுக்கு எதிராக அமைகின்ற பட்சத்தில் தமிழ் சிங்கள உறவினை பாழ்படுத்துவதாக அமைகின்றது (Perera,1995).

### 4. சமய நிறுவனங்கள்

அரசியல் சமூகமயமாக்கத்தினை ஏற்படுத்தும் மற்றுமொரு சமூக முகவராக சமய நிறுவனங்கள் காணப்படுகின்றன. இவற்றில் தேவாலயங்கள், கோயில்கள், பள்ளிகள், விகாரைகள் என்பன மிக பெரிய பங்களிப்பினை சிறுவர்களின் ஆரம்ப கட்டத்திலிருந்தே கொண்டு காணப்படுகின்றன. ஏனெனில் உலகில் காணப்படும் சமயங்கள் என்பது கலாசாரம் மற்றும் ஒழுக்க ரீதியிலான அம்சங்களை போதிப்பதில் தாக்கம் செலுத்தி வந்துள்ளது. சமயங்கள் அதிகளவான வலு பெற்றனவாக காணப்படுகின்றபோது குடும்பங்கள் அழுத்தங்களை கொடுக்கும் ஒன்றாகக் காணப்படும். மதங்கள் பின்பற்றும் அரசியல் வாதம் என்பது அரசின் செயற்பாடுகளை நன்மை, தீமை என்ற இருப் பிரிவாக மேலான்மை செய்து அரசியல் சமூகமயமாக்கத்தினை மக்கள் மத்தியில் ஏற்படுத்துகின்றன.

குடும்ப அரசியல், விவாத தன்மை, சமய வகுப்புகள், பாடசாலை போன்ற வழிமுறைகள் மாணவர்களின் அரசியல் அடையாளப்படுத்தலை விளக்குகின்றது (Levin,1961). இங்கு சமய நிறுவனங்களின் பங்கு மாணவ பருவத்திற்கோ அல்லது முதியவர் பருவத்திற்கோ மட்டும் உரித்தான சமூகமயமாக்கல் நிறுவனமல்ல. அனைத்து வயதினருக்கும் பொதுவான ஒரு சமூக நிறுவனமாகும். மக்கள் தாம் பின்பற்றும் கலாசார அம்சங்களை சமய நிறுவனங்களுடன் ஒன்றிணைத்து பார்ப்பதனால் சமயம் மிக முக்கிய நடுபங்கினை வகிக்கின்றது. இலங்கையின் பொதுத் தேர்தல் மற்றும் சிங்கள தேசத்தைக் கட்டியெழுப்புவதில் மக்களுக்கு அறிவுரைகளை வழங்கும் ஒன்றாக சுதந்திரத்திற்குப் பின்பு பௌத்த மதம் வளர்ச்சியடைந்துள்ளது (உயன்கொட,2007).

தேர்தல் காலங்களில் அரசியல்வாதிகள் முதலில் ஆலயத்தில் வழிபாடு நடாத்திய பின்னரே தமது பிரசாரத்தினை ஆரம்பிக்கின்றார்கள். மேடைக் கூட்டங்கள் கோயிலுக்கு அருகாண்மையிலேயே நடைபெறுகின்றன. தேர்தல் கூட்டங்களின் போது கட்சி பாகுபாடு இன்றி அனைத்து மக்களும் கூட்டங்களில் பங்கெடுப்பதற்குக் கோயில் ஒரு பொதுவான இடமாகப் பயன்படுத்தப்படுகின்றது. கோயில் வளாகத்தில் அமைதியை கடைப்பிடிக்க பழகிக் கொண்ட மக்கள் அரசியல்வாதிகளின் பேச்சுகளை அமைதியாக இருந்து செவிமடுக்கின்றார்கள். இலங்கை முஸ்லிம் மக்கள் மத்தியில் மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை எடுப்பதில் பள்ளிவாசல்கள் அதிக முக்கியத்துவத்தினை பெற்றிருக்கின்றது. இதற்கு மக்கள் கட்டுப்பட்டு செயற்படுகின்றார்கள்.

### 5. சமவயது குழுக்கள்

அரசியல் சமூகமயமாக்கல் செயன்முறையில் சமவயது குழுக்களுகிடையிலான இடைவினை முக்கியத்துவம் பெற்றக் காணப்படுகின்றது. இங்கு சமவயது குழுக்கள் சிறுவர் பருவம், இளைஞர் பருவம், முதியவர் பருவம் என்ற அடிப்படையில் காணப்படலாம். சமவயது குழுக்களாக விளையாட்டுக் குழுக்கள், பாடசாலை நண்பர்கள், வேலைத்தள குழுக்கள் என்போரைக் குறிப்பிடலாம். அரசியல் சம்பந்தமான தாம் பெற்ற அனுபவங்களை ஒருவருக்கு ஒருவர் பரிமாறிக் கொள்வதுடன் தான் பெற்ற அறிவுகளை விவாதிப்பதன் மூலம் மீள நினைவுப்படுத்திக் கொள்கின்றார்கள். இங்கு இவர்களின் உரையாடலின் போது வாதப்பிரதிவாதங்களும் இடம் பெறுவதுண்டு. பிரித்தானியாவில் சிறுவர்களின் அரசியல் மனப்பாங்கு மற்றும் நடத்தை என்பது மறைமுகமாக குடும்பம், ஆசிரியர், பொதுசன ஊடகம், சமவயது குழுக்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்றமை குறிப்பிட தக்கது (Ponton and Gill,1995). மேலும் சமவயது குழுக்களுடனான கலந்துரையாடலின்போது ஏற்றுக் கொள்ளப்பட்ட நடத்தைகள், மனபாங்குகள் ஊக்குவிக்கப்படுகின்றன. அதில் பாடசாலை சமவயது குழுக்களுக்கு இடையிலான கலந்துரையாடல் மிக முக்கியமானதாகும்.

இலங்கையில் சமவயது குழுக்களுக்கு இடையிலான கலந்துரையாடல் என்பது சில குறிப்பிட்ட காலங்களில் அதிகரித்து காணப்படுகின்றது. அரசாங்கத்தின் வருடாந்த வரவு செலவு திட்டக் காலப்பகுதியில் இதனை நாம் காணலாம். அரச நிறுவனங்களில் தொழில் புரியும் வேலைத்தள குழுக்கள் சம்பள அதிகரிப்பு – அரசாங்கத்தின் கொள்கைத் தொடர்பான கலந்துரையாடல்களில் அதிகம் ஈடுப்படுகின்றார்கள்.

## 6. அரசியல் கட்சிகளும் தொழிற்சங்கங்களும்

மக்களின் அரசியல் அறிவினை அபிவிருத்தி செய்வதில் தொழிற் சங்கங்களினதும் அரசியல் கட்சிகளினதும் பங்கு உயர்வானது. தேர்தல் காலங்களில் அரசியல் கட்சிகள் பிரசாரத்தில் ஈடுப்படுதல், துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தல், மேடை கூட்டங்களை நடாத்துதல், சுவரொட்டிகளை பயன்படுத்தல், கையடக்க தொலைப்பேசிகளில் குறும் செய்திகளை அனுப்புதல், தனிப்பட்ட கடிதங்களை அனுப்புதல் என்பன மூலம் மக்களின் அரசியல் அறிவு வளர்க்கப்படுகின்றது. ஆளும் கட்சிக்கும் எதிர் கட்சிகளுக்குமிடையிலான உரையாடல்களும் முக்கியத்துவம் பெற்றுக் காணப்படுகின்றது. இவ் உரையாடல்களின் மூலம் பொதுமைப்படுத்தப்பட்ட அரசியல் தகவல்களைப் பெற்றுக் கொள்கின்றார்கள். மேலும் தனிப்பட்டவர்களோ குழுக்களோ அரசியல் கட்சியில் இணைந்த பிறகு பல்வேறுப்பட்ட நடவடிகைகளுக்கும் மரபுகளுக்கும் உற்படுகின்றார்கள். மேலும் தொழிற்சங்கத்தின் பங்கு என்பது அரசியல் மற்றும் தொழில் சம்பந்தமான உரிமைகளை பெற்றுக் கொடுப்பதன் மூலம் மக்களை அரசியல் அறிவினை நோக்கி நகர்த்துகின்றது.

அரசியல் கட்சிகள் தேர்தல் சட்ட திட்டங்களை மக்களுக்குக் கொடுப்பதில் முக்கியம் பெறுகின்றது (Ray,1999). நாம் அரசியல் நடத்தை மற்றும் மன்பாங்கினை திறந்த மற்றும் நேரடி காட்சிகளின் மூலம் கற்றுக்கொள்கின்றோம். இது பிரதான முதன்மை சமூகமயமாதல் என அழைக்கப்படுகின்றது. இது சிவில் சமூகத்திலிருந்து உற்பத்தியாகின்ற அரசியல் கலாசார கற்றலை வழங்குகின்றது (Barnes., Carter and Skidmore,1980). சில பொதுவான அரசியல் கூட்டங்களில் அரசியல் தலைவர்களுடன் நேரடியாக பேசக்கூடியதாக உள்ளது. இது தனிமனிதனின் அரசியல் அனுபவத்தை வளர்ப்பதாகவே இருக்கும்.

அரசியல் தலைவர்களை அல்லது ஏனைய தலைமைத்துவத்தைத் தெரிவு செய்ய சுய தெரிவு என்பதை காட்டிலும் சமூக சேவை, அந்தஸ்து என்பன முக்கியத்துவம் பெறுகின்றன (Prewiu,1965). அதிகாரம் பெற்றவர்களையும் சிறந்த கொள்கை உடையவர்களையும் தலைவராக நியமிப்பதற்கு மேற்கத்தேய நாட்டு மக்கள் அதிகளவு ஆர்வம் காட்டுகின்றார்கள்.

மேலும் அரசியல் சமூகமயமாக்கத்தில் குறியீட்டு நிகழ்ச்சிகள் மிக முக்கியமானவை. முன்னால் சோவியத் ரஷ்யாவின் மேதின ஊர்வலம், இந்தியாவின் குடியரசு தினம், கிழக்கு ஐரோப்பாவின் மாக்சிய – லெனினிய வாரதினம், தென் அயர்லாந்தின் சமய மற்றும் வரலாற்று நிகழ்வுகள் இதற்கு உதாரணங்களாகும். இந்தியாவின் அரசியல் முறைமையில் திரைப்படங்கள், தொழில் சங்கங்கள், சமுதாய அபிவிருத்தி நிகழ்வுகள், கட்சி தலைவர்கள் மற்றும் அமைச்சர்களின் உறவுகள், காந்திய இயக்கங்கள் என்பனவும் அரசியல் சமூகமயமாக்கத்திற்கு உதவி புரிகின்றன (Ray,1999).

மேற்கூறிய அடிப்படையில் பல்வேறு காரணிகள் அரசியல் சமூகமயமாதலில் தாக்கம் செலுத்துவதினை கண்டுகொள்ளமுடியும். அரசியல் சமூகமயமாதல், அரசியல் அபிவிருத்திக்கும், ஜனநாய விழுமியங்களைக் கொண்ட நிறுவனங்களை ஸ்தாபிப்பதற்கும், பொதுமக்கள் அரசியல் செயற்பாடுகளில் விழிப்புடன் இருப்பதற்கும், செயலூக்கத்துடன் பங்கெடுப்பதற்கும் வழிசெய்யும்.

**References**


Almond, G. 1992. The Blake Well Encyclopedia of Political Science, . ed. Vernon Bogdanor, 108, Cowely Road, Oxford.OX4 IJF, U.K

Almond, G., Verba, S. 1963. The Civic Culture: Political Attitudes and Democracy in Five Nation. Princeton University Press.

Easton, D. 1968. The Theoretical Relevance of Political Socialization. Canadian Journal of Political Science: Vol. 02. Canadian Political Science Association.

Easton, D., Hess, R.D. 1962. The Child's Political World. Midwest Journals of Political Science: Vol.06. Midwest Political Science Association. Pye, L. W. 1965. Political Culture and Development . Princeton University Press.

# உலகின் இயற்கை அனர்த்தங்கள் பற்றிய பரப்பியல் ரீதியான நோக்கு

# A SPATIAL PERSPECTIVE OF WORLD NATURAL DISASTERS

வீரசிங்கம் வசந்தகுமாரி, உதவி விரிவுரையாளர், புவியியற்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்.

## 1. அறிமுகம்

தொழில்நுட்ப விஞ்ஞானத்தின் அளப்பரிய வளர்ச்சியினால் இருபத்தோராம் நூற்றாண்டில் பல்கோணங்களிலும் வெற்றிநடை போட்டுக்கொண்டிருக்கும் மனிதன் மறுபுறம் இயற்கை அனர்த்தங்களினால் அல்லல்பட்டுக் கொண்டிருக்கின்றான். உலகிலுள்ள நாடுகள் அனைத்தும் ஏதோவொரு வகையில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட இயற்கை அனர்த்த தாக்கங்களுக்கு உட்பட்டே வருகின்றன. இவ் இயற்கை அனர்த்தங்களானவை, அபிவிருத்தியடைந்த நாடு அபிவிருத்தியடைந்து வரும் நாடு என்றோ அல்லது பணக்கார நாடு வறியநாடு என்றோ எந்தவொரு பேதமுமின்றி எல்லா நாடுகளிலும் தனது வல்லமையினைக் காட்டிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் பல வழிகளிலும் பலம் படைத்த வல்லரசு நாடுகளைக் கூட ஒரே கணத்தில் நிலைகுலையச் செய்துவிடும் வல்லமை கொண்டவையாக இவை விளங்குகின்றன. இதுமட்டுமன்றி முன்னேற்றப் பாதையில் சென்றுகொண்டிருக்கும் நாடுகளும் இயற்கை அனர்த்தங்களால் ஏற்படும் பாதிப்புக்களால் மிகக் குறுகிய காலப்பகுதியினுள்ளே மீள முடியாத பேரவலத்திற்கு உள்ளாகிவிடுகின்றன. இயற்கை அனர்த்தங்களின் பாரபட்சமற்ற இத்தாக்குதலானது, அதனை ஒரு “பொதுவான எதிரி” எனவே எம்மை எண்ணச்செய்கின்றது. எல்லா நாடுகளுக்கும் பொதுவான எதிரியாக இவ் இயற்கை அனர்த்தங்கள் காணப்படினும் அவற்றின் வகை (types), அளவு (magnitude) மற்றும் தீவிரத்தன்மை (severity) என்பவற்றுக்கிடையில் நாட்டுக்கு நாடு, பிரதேசத்திற்குப் பிரதேசம் பரப்பியல் ரீதியான பல்வேறு வேறுபாடுகளை அவதானிக்கலாம். இவற்றின் பின்னணியில் உலகின் இயற்கை அனர்த்தங்கள் தொடர்பான தேடலும் அறிவும் காலத்தின் கட்டாய தேவையாக விளங்குகின்றது.

## 2. இயற்கை இடர்களும் இயற்கை அனர்த்தங்களும் (Natural Hazards and Natural Disasters)

அனர்த்தங்கள் (Disasters) எனப்படுவது இடர்கள்/ஆபத்துக்களில் (Hazards) இருந்து வித்தியாசப்படும் ஒரு எண்ணக்கருவாகும். இயற்கை அல்லது மானிட செயற்பாடுகளினால் சமூகத்திற்கு, உடமைகளுக்கு அல்லது சூழலுக்கு பாதிப்பினை ஏற்படுத்தக்கூடிய “தோற்றப்பாடே” இடர் என அழைக்கப்படுகின்றது. இத்தகைய தோற்றப்பாட்டினால் ஏற்படுத்தப்படுகின்ற “விளைவுகள்” அனர்த்தம் எனப்படுகின்றது. சுருக்கமாகக் கூறின் அனர்த்தம் என்பது இடரும் இயலாமையும் சேர்ந்து உருவாகுகின்ற நிலையாகும். விரிவாக நோக்கின் இடர், இடைஞ்சல், இடையூறு, ஆபத்து ஆகியவற்றால் ஏற்படுகின்ற விளைவு அல்லது நிர்க்கதியான நிலையே அனர்த்தமாகும். இதனை பின்வருமாறு சூத்திரம் மூலம் சுருக்கமாகக் குறிப்பிடமுடியும்.

இடர் (Hazard) + இயலாமை (Vulnerability) = அனர்த்தம் (Disaster)

பாதிப்பினை ஏற்படுத்தக்கூடிய இடர்களுடன் அவ்விடரை எதிர்கொள்ள முடியாத இயலாமைக்கு தள்ளப்படும் போதே அது அனர்த்தமாக மாறுகின்றது. சுருக்கமாகக் கூறின் இடரும் இயலாமையும் ஒருங்கிணையும் போது அனர்த்தம் ஏற்படுகின்றது. இவ்வாறான அனர்த்தங்களின் விளைவுகள் பாரதூரமானவையாக இருப்பதுடன் இவை ஏற்படுகின்ற பிரதேசமானது மிகவும் பாரதூரமான நிலைக்கு தள்ளப்பட்டு இயல்பு நிலையினையும் பாதிப்படையச் செய்கின்றது. அத்துடன் மக்கள் தமது இயல்பு வாழ்க்கையினைக் கையாளும் திறனற்ற நிலைக்கும் தள்ளப்படுகின்றனர். இத்தகைய அனர்த்தங்களை நாம் பிரதானமாக இரு வகைப்படுத்தி நோக்கமுடியும்.

அனர்த்தம்

| இயற்கை அனர்த்தங்கள் | மனிதனால் உருவாக்கப்படும் அனர்த்தங்கள் |
| --- | --- |
| 1.<u>பாரிய இயற்கை அனர்த்தங்கள்:</u> வெள்ளப்பெருக்கு, சூறாவளி, வரட்சி, புவிநடுக்கம் | 1.<u>மனிதனால் உருவாக்கப்படும் பாரிய அனர்த்தங்கள்:</u> தீ வைத்தல், காடழிப்பு, தொற்றுக்கள், மாசடைதல், யுத்தம்.... |
| 2.<u>சிறிய இயற்கை அனர்த்தங்கள்:</u> குளிரலைகள், இடிமின்னல், சேற்றுச்சரிவு, வெப்ப அலைகள், புயல்... | 2.<u>மனிதனால் உருவாக்கப்படும் சிறிய அனர்த்தங்கள்:</u> வீதி விபத்துக்கள், கலவரம், உணவுநஞ்சாக்கம், கைத்தொழில் அனர்த்தங்கள், சூழல் மாசாக்கம்.... |

இயற்கை இடர்கள் மற்றும் செயற்கை இடர்கள் எனும் பிரதான வகைப்பாட்டிற்கு அப்பால் இடர்கள் மேற்குறிப்பிடப்பட்டுள்ளவாறு பாரிய அனர்த்தங்கள், சிறிய அனர்த்தங்கள் எனவும் வகைப்படுத்தப்படுகின்றன. செயற்கையான இடர்களில் மனிதனால் ஏற்படுத்தப்படும் இடர்களும் இயற்கை இடர்களில் இயற்கையாகவே ஏற்படக்கூடிய புவிவெளியுருவவியல், நீரியல், காலநிலையியல், தொற்றுநோய்கள் என்பன சார்ந்த இடர்களும் உள்ளடங்குகின்றன. அவையாவன,

- காலநிலை அனர்த்தங்கள் : சூறாவளி, பனிச்சூறாவளி, அனற்காற்று, கடும் குளிர் காற்று, பனிக்கட்டியாகுதல், இடிமின்னல், வரட்சி, சூறைப்புயல் (டொர்னாடோ), வெப்பக்காற்றலை

- நீரியல் அனர்த்தம் : வெள்ளப்பெருக்கு, சுனாமி
- புவிவெளியுருவவியல், புவிச்சரிதவியல் அனர்த்தம் : புவிநடுக்கம், எரிமலை வெடிப்பு, நிலவழுக்குகை, பனிப்பாறைச் சரிவு
- உயிரியல் அனர்த்தம் : இயற்கையாக ஏற்படும் தொற்றுநோய்கள்

இவை இயற்கை இடர்களாகக் காணப்படினும் அவற்றின் செயற்பாட்டில் மனித தலையீடுகளும் பிரதான பங்கினை வகிக்கின்றன. மனிதனின் பல்வேறு செயற்பாடுகள் காரணமாகவே சாதாரண இயற்கை இடர்கள் கூட பாரிய அனர்த்தங்களாக மாறிவருகின்றன. இனி இவ் இயற்கை அனர்த்தங்களையும் அவற்றின் பரிமாணங்களையும் ஒவ்வொன்றாக நோக்குவோம்.

### ❖ புவிநடுக்கம்

புவிப்பௌதீகவியல் சார்ந்த இயற்கை இடர்களுள் முக்கியமானதும் பாரிய அழிவை ஏற்படுத்தக்கூடியதுமான இடராகப் புவிநடுக்கம் விளங்குகின்றது. புவியின் உட்பகுதியில் உருவாகும் அதிர்வு அலைகளின் தாக்கத்தினால் புவிமேற்பரப்பில் ஏற்படும் சடுதியான மாற்றமே புவிநடுக்கம் எனப்படுகின்றது. புவிநடுக்கத்தின் மூல சக்தியான அதிர்வு அலைகளின் உட்புறத் தாக்கத்தினால் புவியோட்டிலுள்ள கவசத்தகடுகள் மோதுகைக்கும் உதைப்பிற்கும் விலகலுக்கும் தாழ்த்துதலுக்கும் உள்ளாகின்றன. இவ்வாறு கவசத்தகடுகள் அசைவிற்கு உள்ளாவதற்குக் காரணமான அதிர்வு அலைச்சக்தி புறப்படுகின்ற இடம் குவிமையம் எனவும் இக்குவியத்திற்கு நேர் எதிரே உள்ள மையம் மேன்மையம் எனவும் அழைக்கப்படுகின்றது. குவிமையத்திலிருந்து புறப்படும் அலைகளே புவிமேற்பரப்பில் புவிநடுக்கத்தினை தோற்றுவிக்கின்றன.

நில அதிர்வுகள் வருடந்தோறும் நூற்றுக்கணக்கில் ஏற்பட்டாலும் மிகச்சில நில அதிர்வுகளே மனிதனால் உணரக்கூடியனவாக உள்ளன. புவிநடுக்கத்தின் பரிமாணத்தினை அளவீடு செய்வதற்கு

செய்ஸ்மோகிராப் (Seismograph) என்ற கருவி பயன்படுத்தப்படுகின்றது. இப்புவிநடுக்க எழுச்சிகளை அடிப்படையாகக் கொண்டு தற்போது உலகில் புவிநடுக்கப் பிரதேசங்களும் எல்லைகளும் இணங்காணப்பட்டுள்ளன. பசுபிக்கின் நெருப்பு வலயம், வட அமெரிக்காவின் அலாஸ்கா முதல் தென்னாபிரிக்கா வரையுள்ள பிரதேசங்கள், கிழக்கே ஜப்பானியத் தீவுகளில் இருந்து கம்சட்காவினூடாக அலாஸ்காவரை செல்லும் பகுதிகள், மத்திய தரைக்கடலில் இருந்து கருங்கடல், ஆப்கானிஸ்தான், இமயமலை பமீர்முடிச்சு, சீனாவினூடாக பசுபிக் வலயம் வரை செல்லும் இமாலய வலயம், ஐஸ்லாந்து முதல் தென் அத்திலாந்திக் மத்திய சமுத்திர வலயம், ஆபிரிக்காவின் சிறப்பு வலயம், இலங்கையின் தனிக்கவசத் தகட்டுப் பகுதி ஆகியனவே பிரதான புவிநடுக்கப் பிரதேசங்களாக இணங்காணப்பட்டுள்ளன, (K.Radhakrishnan, 2007). இவற்றுள் உயர்வான புவிநடுக்க இடர்கள் நிறைந்த வலயமாக பசுபிக் நெருப்பு வலயமே விளங்குகின்றது. சாதாரணமாக 5.5 றிச்டர் அளவிற்கு மேற்பட்ட அதிர்வுகள் சில சந்தர்ப்பங்களில் பாரிய அழிவுகளையும் சுனாமிப் பேரலைகளையும் உருவாக்குகின்றன. உலகில் உயர்வான றிச்டர் அளவில் இடம்பெற்ற புவிநடுக்கங்கள் சில கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

உலகில் பாரிய அழிவை ஏற்படுத்திய புவிநடுக்கங்கள்

| ஆண்டு | பெயர் | அளவு |
|---|---|---|
| 1960 | வல்டிவ்யா (Valdivia), சில்லி | 9.5 |
| 1964 | அலாஸ்கா | 9.2 |
| 2004 | இந்து சமுத்திரம், சுமாத்திரா, இந்தோனேசியா | 9.1 – 9.3 |
| 1952 | கம்சட்கா, ரஸ்யா | 9.0 |
| 2011 | பசுபிக் சமுத்திரம், டொகாகு பிரதேசம், யப்பான் | 9.0 |
| 2010 | சில்லி | 8.8 |

❖ சூறாவளி

சூறாவளியானது காலநிலையியலுடன் தொடர்புடைய முக்கியமான ஒரு அனர்த்தமாகும். சூறாவளிகள் பெரும்பாலும் சமுத்திரப்பகுதிகளிலேயே மையங்கொள்கின்றன. பொதுவாக சமுத்திரப் பகுதிகளில் நிரம்பிய குளிர்காற்றும் வெப்பக்காற்றும் ஒன்றுடன் ஒன்று மோதும் போது வெப்பக்காற்றுக்கள் சுழன்று மேலெழுவதனால் அவ்விடத்தினை நிரப்புவதற்கு உயரமுக்கப்பகுதியில் இருந்து காற்றுக்கள் வீசும். இவ்வாறு வீசும் காற்றுக்கள் வேகமாகச் சுழன்று மேலெழும்போது சூறாவளி தோற்றுவிக்கப்படுகின்றது. பொதுவாக கரையோரப்பகுதியைச் சார்ந்த நாடுகளே சூறாவளியின் தாக்கத்திற்கு அதிகளவில் உள்ளாகின்றன. சூறாவளியானது ஹரிக்கென்ஸ், தைபூன், அயனச்சூறாவளி எனப் பலபெயர்களால் அழைக்கப்படினும் இவை ஒவ்வொன்றும் ஒன்றுடன் ஒன்று மிக நெருங்கிய தொடர்புடையனவாகக் காணப்படுகின்றன. சமுத்திரங்களுக்கு மேல் உருவாகும் ஒரு சூறாவளிப் புயல் முறைமையின் ஒத்த தோற்றப்பாட்டிற்கு வழங்கப்படும் பெயர்களாகவே இவை விளங்குகின்றன. சூறாவளி மையங்கொள்ளும் பிரதேசம், நகரும் பிரதேசம், சுழல் காற்றின் வேகம் என்பவற்றை பொறுத்து வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றது. தென்பசுபிக் சமுத்திரத்தில் இது அயனச் சூறாவளி எனவும், அத்திலாந்திக் சமுத்திரத்தில் ஹரிக்கேன்ஸ் எனவும் வடமேற்கு பசுபிக் சமுத்திரத்தில் தைப்பூன்ஸ் எனவும் அழைக்கப்படுகின்றது. அயனச் சூறாவளிகள் பாரிய வெள்ளப்பெருக்கு மற்றும் தீவிரமான புயல் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. பின்வருவன அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்

- 1970 இல் பங்களாதேஸினை தாக்கிய போலா சூறாவளி
- 1975 இல் சீனாவை தாக்கிய தைபூன் நினா சூறாவளி
- 2005 இல் நிவ்ஓர்லியன்ஸ், லோயிசியானா ஆகியவற்றை தாக்கிய ஹரிக்கேன் கத்ரீனா
- 2011 இல் அவுஸ்திரேலியாவினை தாக்கிய சூறாவளி யசீ

உலகில் அதிக உயிரிழப்புக்களை ஏற்படுத்திய சூறாவளி 1970 ல் அத்திலாந்திக் சமுத்திரத்தில் மையங்கொண்ட ஹரிக்கேன்ஸ் சூறாவளி ஆகம். 2005 இல் ஐக்கிய அமெரிக்காவில் ஹரிக்கேன் கத்ரீனா நிகழ்வினால் பாரியளவில் இழப்புக்கள் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

❖ வரட்சி

காலநிலையியல் சார்ந்த அனர்த்தங்களுள் வரட்சி மற்றுமொரு முக்கிய இடராகும். ஒரு பிரதேசம் பல மாதங்கள் அல்லது வருடங்களுக்கு அதன் நீர் விநியோகத்தில் பற்றாக்குறையினை எதிர்நோக்குகின்ற நீண்டவொரு காலப்பகுதியே வரட்சி எனப்படுகின்றது. பொதுவாக நீர்ப்பற்றாக்குறைக்கு வழிவகுக்கும் எந்த ஒரு அசாதாரணமான பருவமும் வரட்சி என வரையறுக்கப்படுகின்றது. இது ஏனைய சூழல் இடர்களை விட மாறுபட்டவொரு இடராகக் காணப்படுவதுடன் மெதுவாகவும் பல வருடங்களுக்கு தொடர்ந்து நீடித்து செல்லக்கூடியதுமான இடராக செயற்படுகன்றது. இவ்வாறான வரட்சி நிலமைகள் ஏற்படுவதற்கு காலநிலை மாற்றங்களும், மனித நடவடிக்கைளுமே பிரதான ஏதுவாகின்றன. ஆண்டுக்குரிய சராசரி மழைவீழ்ச்சியில் குறைவு, மிகை பண்ணையாக்கம், அளவுக்கதிகமான நீர்ப்பாசனம், காடழிப்பு, தின்னல் ஆகிய பல்வேறுபட்ட காரணிகள் வரட்சி நிலமைகளை தோற்றுவிப்பதில் பிரதான காரணிகளாகச் செயற்படுகின்றன. மானிட நடவடிக்கைகள் குறிப்பாக நிலம் நீரை சேர்த்து தக்கவைத்துக்கொள்ளும் திறனை தீவிரமாக பாதிக்கின்றன. பொதுவாக வரட்சி எப்போதும் குறைந்த மழைவீழ்ச்சி, மற்றும் குறைவறள் காலநிலைகளுடன் தொடர்புபட்டதாக இருந்த போதிலும், சாதாரணமாக மிகையான மழைவீழ்ச்சியை அனுபவிக்கும் பிரதேசங்களில் கூட இது ஏற்பட வாய்ப்புண்டு. அத்துடன் இதன் தாக்கமானது மட்டுப்படுத்தப்பட்டதாக இராமல் பாரிய பிரதேசங்களுக்கு பரந்திருக்கக் கூடியது. இவ்வரட்சியானது அதன் தன்மை மற்றும் தாக்கங்களின் தீவிரத்தன்மை அடிப்படையில் பொதுவாக வளிமண்டலவியல் வரட்சி, நீரியல் வரட்சி, விவசாய வரட்சி, பஞ்ச வரட்சி என நான்கு வகையாக வகைப்படுத்தப்படுகின்றது.

வரட்சியானது அதிக வருடங்களுக்கு தொடர்ந்தாலும் குறுகியகாலத்திற்கு தீவிரமானதாக இருந்தாலும் உள்நாட்டு பொருளாதாரத்தில் அது பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தும். பூகோளரீதியான இத்தோற்றப்பாடு குறிப்பாக விவசாயத்தின் மீது பரந்தளவிலான தாக்கத்தினைக் கொண்டுள்ளது. அத்துடன் அபிவிருத்தியடைந்த நாடுகள் மற்றும் குறைவிருத்தி நாடுகளுக்கு இடையில் கூட வரட்சியின் தாக்கம் பரந்தளவில் வேறுபடுகின்றது. வரட்சியினால் ஏற்படும் இறப்புக்கள் நடுத்தர அபிவிருத்தியடைந்த நாடுகளில் ஒப்பீட்டளவில் குறைவாகும். எனினும் குறைவிருத்தி நாடுகளில் வரட்சியினால் பெரும் பாதிப்பு ஏற்படுவதுடன் பஞ்சம், பட்டினி என்பவற்றுடன் அதிகளவிலான இறப்புக்கள் ஏற்படவும் வழிவகுக்கின்றது. வரட்சி காலப்பகுதிகள் முக்கியமான சூழல், விவசாய, சுகாதார, பொருளாதார மற்றும் சமூக ரீதியான விளைவுகளைக் கொண்டுள்ளன. உலகில் இடம்பெற்ற மிக முக்கியமான வரலாற்று ரீதியான வரட்சி நிகழ்வுகள் பின்வருமாறு,

- 1900 : இந்தியாவில் 250,000 க்கும் 3.25 m க்கு இடைப்பட்ட இறப்புக்கள்
- 1921 : 1922 சோவியத் யூனியனில் 5 மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டமை
- 1928 : 1930 வடமேல் சீனாவில் பஞ்சத்தினால் 3 மில்லியனுக்கு மேற்பட்ட இறப்புக்கள்
- 1936, 1941 : சிசுவான் மாகாணத்தில் முறையே 5m மற்றும் 2.5m இறப்புக்கள்
- 2006 : சிசுவான் மாகாணத்தில் இடம்பெற்ற மிகமோசமான வரட்சியின் பாதிப்புக்கள், குறிப்பாக 8m மக்கள் மற்றும் 7m மந்தைகள் நீர் தட்டுப்பாட்டினால் பாதிப்பிற்குட்பட்டமை..
- தற்போது கிழக்கு ஆபிரிக்கா இத்தசாப்தத்தின் மிக மோசமான வரட்சியினை அனுபவித்து வருகின்றது.

❖ இடி மின்னல்

திடீர் ஆபத்தை விளைவிக்கக்கூடிய இயற்கை இடர்களுல் முக்கியமானவொன்றாக இடிமின்னல் விளங்குகின்றது. விண்ணில் கண நேரத்தில் தோன்றி மறையும் பளிச்சிடும் ஒளிக்கீற்று மின்னல் எனவும் அதனைத் தொடர்ந்து ஏற்படும் அதிர்வொலி இடி எனவும் அழைக்கப்படுகின்றது (K.Radhakrishnan, 2007). சூரியக் கதிர்களின் வெப்பச் செயற்பாட்டால் ஆவியாக்கம் நடைபெற்று புவியிலுள்ள நீர்நிலைகளில் நீர் ஆவியாகி மேலெழுந்து மேகமாக திரண்டு வளியுடன் உராய்ந்து மின்னேற்றம் அடைகிறது. மின்னேற்றம் பெற்ற முகில் நேர்மின், எதிர்மின் அயன்களைக் கொண்டிருப்பதனால் அவை ஒன்றுடன் ஒன்று மோதி மின்னலாக மாற்றமடைகின்றன. இவ்வாறான மின் தாக்கம் மேகத்திலிருந்து புவியை நோக்கிச் செல்வதே இடி எனப்படுகின்றது. இது புவியை நோக்கிச் செல்லும் வேகம் $10^3$ ஆளு என்ற கதியுடனாகும். மூன்று வழிகளில் இடி மின்னல் தாக்கம் ஏற்படுவதாக கூறப்படுகிறது.

1. புவி இடி மின்னல் - முகில் கீழ்பகுதியில் இருந்து புவிக்கு வருதல்.
2. முகில் இடி மின்னல் - முகில்களுக்கு இடையில் ஏற்படுவது.
3. காற்று இடி மின்னல் - முகில்களுக்கும் அண்ட வெளிக்கும் இடையில் ஏற்படுவது.

உலகில் புவி இடி மின்னலே அதிகளவில் ஏற்படுவதுடன் அதிக பாதிப்புக்களையும் ஏற்படுத்துகிறது. குறிப்பாக விலங்குகளுக்கும், மனிதர்களுக்கும் அதிகளவில் உயிர்சேதங்கள் ஏற்படுகின்றன. இவ்வாறான இடி மின்னல் தாக்கம் அதிகமாக வெப்ப வலயப் பகுதிகளிலேயே நிகழ்வதுடன் வரட்சியான காலப்பகுதியில் மழை பொழியும் சந்தர்ப்பங்களில் இடி மின்னல் தாக்கம் அதிகமாக இருக்கும். அதுமட்டுமன்றி இடியுடன் கூடிய மழையின் போதும் மின்னல் தாக்கம் அதிகரித்துக் காணப்படும். இவ் அனர்த்தத்தினால் பெருமளவில் உயிர் சேதங்கள் ஏற்படாவிடினும் உயிரிழப்புக்கள் ஏற்படவே செய்கின்றன. குறிப்பாக இடிமின்னல் இடம்பெறும் சந்தர்ப்பங்களில் திறந்த வெளிகளில் நடமாடுதல், மின்னியல் உபகரணங்களை பயன்படுத்துதல் என்பன உயிரிழப்புக்களை ஏற்படுத்தக்கூடிய செயல்களாகும். மின்னல் தாக்கத்தினால் பயிர் நிலங்கள் பட்டுப்போகுதல், பெறுமதியான இலத்திரனியல் உபகரணங்கள் செயலிழந்து போதல் போன்ற பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. உலகிலேயே இடி மின்னல் தாக்கத்தினால் அதிகம் பாதிப்புக்குள்ளாகும் நாடாக சிங்கப்பூர் விளங்குகின்றது. உலகில் வருடாந்தம் 2000 பேர் வரை இத்தாக்கத்தினால் பாதிக்கப்படைவதாக ஆய்வுகள் கூறுகின்றன. இலங்கையில் இவ்வருடத்தில் மாத்திரம் இதுவரை இடிமின்னல் தாக்கத்தினால் ஏறத்தாழ 30 இறந்துள்ளமை குறிப்பிடத்தக்கது, (Disaster Management Centre, 2011). ஆய்வுகளின்படி பூமியில் வெப்பம் அதிகரிக்க அதிகரிக்க மின்னல் தோன்றும் சந்தர்ப்பங்கள் அதிகரித்துச் செல்லும் எனக்கூறப்படுகின்றது.

### ❖ பனிப்பாறைச் சரிவு

பனிப்பாறைச் சரிவுகளும் இயற்கை இடர்களில் முக்கியமானவொன்றாகும். உயர்நிலப்பகுதிகளில் இருந்து பாரியளவில் பனிக்கட்டியானது கீழ் நோக்கி சரிவுக்கு உட்படுவதனையே பனிப்பாறைச் சரிவு என அழைப்பர். முனைவிலுள்ள குளிர்வலயங்களிலும் உயர்மலைப்பகுதிகளில் காணப்படும் பனிபடர்ந்தப் பகுதிகளிலும் இவ்வாறான பனிப்பாறைச் சரிவுகள் பொதுவாக இடம்பெறுவதுடன் பாரிய அனர்த்தங்களையும் தோற்றுவிக்கின்றன. இவ்வாறான பனிப்பாறைச் சரிவுகள் ஏற்படுவதற்குப் பல்வேறு காரணிகள் அடிப்படையாய் அமைகின்றன. வெப்ப அதிகரிப்பு, எரிமலைச் செயற்பாடுகள், காடழிப்பு, புவிநடுக்கம், சூரியக்கதிர்வீசல், நவீன விவசாய நடவடிக்கைகள் போன்ற பல்வேறு காரணிகள் பனிப்பாறைச் சரிவில் செல்வாக்குச் செலுத்துகின்றன. குறிப்பிடத்தக்க சில பனிப்பாறை நிகழ்வுகள் பின்வருமாறு,

- 1910 - வெலிங்டன் பனிப்பாறைச்சரிவு
- 1954 - புலோன்ஸ் பனிப்பாறைச்சரிவு
- 1962 - பேரூ பனிப்பாறைச்சரிவு
- 1999 - கல்டூர் பனிப்பாறைச்சரிவு
- 2002 - கொல்கா – கார்மடொன் பனிப்பாறைச்சரிவு

மூலம்: http://en.wikipedia.org/wiki/ avalanches, 2011

1962 இல் பேருவில் நிகழ்ந்த பனிப்பாறைச் சரிவினால் ஏறக்குறைய 3000 பேர் பலியாகியதுடன் பாரியளவில் சொத்துக்கள் அழிவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

### ❖ பனிப்புயல்

பனிப்புயல்கள் சில பிரதேசங்களுக்கு மாத்திரம் உரித்தான இயற்கை இடர்களுள் முக்கியமானவொன்றாகும். இவை தீவிரமான பனிப்புயல்களாகும். இது பொதுவாக தாழ்வான வெப்பநிலை, பலமான காற்று, கடும் பனிப்பொழிவு ஆகியவற்றின் போதே நிகழும். இவ்வாறான பனிப்புயல்கள் ஒரு மணித்தியாலத்திற்கு 35 மைல்களை அடையக்கூடியதாக இருப்பதுடன் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட மணித்தியாலத்திற்கு மிக நீண்டதாக இடம்பெறும். தரைபனிப்புயல்களை பொறுத்தவரையில் புதிதாக பொழியும் பனியைக் காட்டிலும் ஏற்கனவே நிலத்தில் பொழிந்துள்ள பனியைக் கொண்டே இது செயற்படுவதால் காற்றுக்கள் அவசியமாகும்.

- 1888 ஐக்கிய அமெரிக்கா பனிப்புயல்
- 2008 ஆப்கானிஸ்தான் பனிப்புயல்
- 1947 வடஅமெரிக்க பனிப்புயல்
- 1972 ஈரான் பனிப்புயல்

பொருளாதாரத்தின் மீது பாதகமான தாக்கத்தினையும் கொண்டிருப்பதுடன் பனிப்பொழிவு அரிதாகக் காணப்படும் பிரதேசங்களிலும் பிரதேசத்தின் கட்புலப்பாட்டினை பாதிக்க முடியும்.

### ❖ சுனாமி

புவிவெளியுருவியல் சார்ந்த இயற்கை இடர்களுல் மிக முக்கியமானதும் மிகவும் ஆபத்தானதுமான இடராக சுனாமி விளங்குகின்றது. ஜப்பானிய மொழியிலிருந்து பிறந்த சுனாமி என்ற பதம் துறைமுக அலை என பொருள்படுகின்றது. நீரினுள் பிரயோகிக்கப்படும் உயரழுத்தம் காரணமாக திடீரென பல மீற்றர்கள் கடல் மட்டத்திற்கு மேல் குத்தாக எழுச்சியுற்று கரையோரங்களில் மிக மோசமான விளைவுகளை தோற்றுவிக்கின்ற விரும்பத்தகாத ராட்சத அலைகளின் ஒரு வடிவமே சுனாமி என அழைக்கப்படுகின்றது. கரையோரங்களில் கடலின் ஆழம் குறைவானதாகையால் கரையை நெருங்கும் சந்தர்ப்பத்தில் சுனாமியின் வேகம் குறைவடையும். பொதுவாக சுனாமி அலை கரையை நெருங்கும் போது ஆழமும், வேகமும் குறைவடைவதனால் அது தன் விசையை உருமாற்றி மிக அதிகமாக உருவெடுக்கும். சுனாமியின் அதிகூடிய வேகம் மணிக்கு 500 கி.மீ இலிருந்து 1000 கி.மீ வரை காணப்படலாம். இத்தகைய இயல்பினைக் கொண்ட சுனாமிப் பேரலைகள் கரையை வந்தடையும் போது பாரிய விளைவுகளை ஏற்படுத்துகின்றன. கடற்கரையில் செயற்படும் சாதாரண அலையை விட சுனாமி அலை பல்வேறு வகையில் வேறுபட்டு செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சுனாமி உருவாகுவதற்கு பல்வேறு காரணிகள் அடிப்படையாய் அமைகின்றன. அவற்றில் பிரதானமானவையாக நில நடுக்கம், எரிமலை கக்குகை, நில வழுக்குகை, பனிச்சரிவு, விண்கற்கள் வீழ்வு, அணுகுண்டு பரிசோதனை ஆகியவற்றைக் குறிப்பிடலாம். சுனாமியால் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படினும் உயிரிழப்புகள் மீளப்பெற முடியாதவையாக விளங்குகின்றன. பின்வரும் அட்டவணை உலகை உலுக்கிய சுனாமி நிகழ்வுகள் சிலவற்றையும் முக்கியமாக பாதிக்கப்பட்ட இடங்களையும் தருகின்றது.

**உலகில் இடம்பெற்ற பிரதான சுனாமி நிகழ்வுகள்**

| திகதி | ஆரம்ப இடம் | பாதிக்கப்பட்ட இடங்கள் |
|---|---|---|
| 1755 | அத்திலாந்திக் சமுத்திரம் | போர்த்துக்கலின் லிஸ்பன் நகரம் பாதிப்பு |
| 1868 | பெரு சிலி | - |
| 1986 | ஜப்பான் | ஜப்பானின் கிழக்கு கரையோரம் |
| 1908 | சிசிலி | சிசிலியின் கிழக்கு கரையோரம் |
| 1993 | ஜப்பான் | ஹோன்ஹூ சன்ரிகு மாவட்டங்கள் |
| 1976 | சிலேப்ஸ் கடல் | தென்மேற்கு பிலிப்பைன்ஸ் |
| 1998 | பபுவா நியூகினியா | பபுவாநியூகினி |
| 2004 | சுமாத்ரா | இந்தோனேசியா, இலங்கை, இந்தியா, தாய்லாந்து, மலேசியா |

மூலம்: http://en.wikipedia.org/wiki/tsunami, 2011.

உயிரிழப்புக்களுடன் இயற்கை சூழற்தொகுதிகளின் பாதிப்புக்கள், பொருளாதார ரீதியான பாதிப்புக்கள், உடல் மற்றும் உளவியல் பாதிப்புக்கள் என்பனவும் சுனாமி நிகழ்வுடன் மிக நெருங்கிய தொடர்புடையனவாக விளங்குகின்றன.

### ❖ நிலச்சரிவு

நிலச்சரிவு உலகநாடுகளைப் பொறுத்தவரை பொதுவானதொரு இயற்கை இடராகக் காணப்படுவதுடன் இது நாடுகளின் அபிவிருத்தியில் பல்வேறு வழிகளிலும் பாதிப்பினை ஏற்படுத்தக்கூடிய அனர்த்தமாகவும் காணப்படுகின்றது. பொதுவாக நடைபெறும் பாறை அல்லது மண்திணிவுகளின் சடுதியான அசைவுகளே நிலச்சரிவு என அழைக்கப்படும். இவை பொதுவாக உயரமான

மலைப்பகுதிகளில் அல்லது சாய்வான பகுதிகளிலேயே இடம்பெறுவதுண்டு. இவ்வாறான சரிவுகள் பல்வேறு முறைகளில் இடம்பெறுவதனால் அவற்றின் இயல்பிற்கேற்ப வேறுபட்ட பெயர்களால் அழைக்கப்படுகின்றன. சரிவுக்கு உட்படுகின்ற பொருட்கள் பாரிய மண் திணிவுகள், பாறைத்திணிவுகள், சேற்று அசைவுகள் என எதுவாகவும் இருக்கலாம். நிலச்சரிவுகளை தோற்றுவிப்பதில் இயற்கை காரணிகளுக்கு அப்பால் மானிடக்காரணிகளும் முக்கிய செல்வாக்கினை செலுத்துகின்றன. தொடர்ச்சியான மழைவீழ்ச்சி, தீவிரமான மழைவீழ்ச்சி, புவிநடுக்கச் செயற்பாடுகள், பாறைகளில் இடம்பெறும் வானிலையாலழிதல் செயற்பாடுகள், உயர்மலைப்பகுதிகளில் மற்றும் சாய்வுப்பகுதிகளில் பொருத்தமற்ற மானிட நடவடிக்கைகள், பாரிய அழுத்தங்கள் போன்றன நிலச்சரிவு ஆபத்திற்கு அடிப்படை காரணிகளாகும். நிலச்சரிவானது விழுதல், உருளல், சரிதல், நகர்தல் என பல முறைகளில் இடம்பெறுகின்றது. குறிப்பாக 1000 – 4000 மில்லிமீற்றருக்கு இடையில் மழைவீழ்ச்சி பெறும் மலைப் பிரதேசங்களிலேயே இவ்வகைச் செயற்பாடுகள் அதிகமாக இடம்பெறுகின்றன. உலகில் தொடர்ச்சியாக நிலச்சரிவு அனர்த்தங்கள் இடம்பெற்று வருகின்றதெனினும் இவை வெவ்வேறு வடிவங்களில் வேறுபட்ட இடங்களில் வெவ்வேறு காரணிகளின் அடிப்படையில் இடம்பெறுகின்றன. அண்மையில் உலகில் இடம்பெற்ற சில நிலச்சரிவு அனர்த்த நிகழ்வுகள் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

**உலகில் அண்மையில் இடம்பெற்ற நிலச்சரிவு அனர்த்தங்கள்**

| ஆண்டு | இடம் | வகை | காரணி |
|---|---|---|---|
| 2005 | பாக்கிஸ்தான், இந்தியா | நிலச்சரிவு, பாறைவீழ்கை, பாறைச்சரிவு | காஷ்மீர் புவிநடுக்கம், அளவு 7.6 |
| 2006 | பிலிப்பைன்ஸ் (Leyte) | பாறைச்சரிவு, சேற்றுச்சரிவு | மழைவீழ்ச்சி |
| 2008 | சீனா (சிசுவான்) | நிலச்சரிவு, சேற்றுப்பாய்ச்சல், பாறைச்சரிவு, | வென்சுவான் புவிநடுக்கம், அளவு 8.0 |
| 2008 | எகிப்து (கிழக்கு கெய்ரோ) | பாறைச்சரிவு | கட்டுமாணங்களால் ஏற்படுத்தப்பட்ட நிலையற்ற தன்மை |
| 2010 | உகன்டா (புதுதா) | சேற்றுப் பாய்ச்சல் | செறிவான மழைவீழ்ச்சி |
| 2010 | பிரேசில் (ரியோடிஜெனிரோ நகரம்) | சேற்றுப்பாய்ச்சல் | செறிவான மழைவீழ்ச்சி |

மூலம் : http://landslides.usgs.gov/learning/majorls.phl

### ❖ சூறைப்புயல் - டொர்னாடோ

ஏனைய இயற்கை இடர்களை விட டொர்னாடோ சற்று வித்தியாசமான ஒரு இடராகும். இது தரைமேற்பரப்பிற்கும் திரண்முகிலுக்கும் இடையில் தீவிரமானதும் ஆபத்தானதுமான சுழலக்கூடிய தொடர்பினை ஏற்படுத்தும் வளியின் நிரல் ஆகும். உலகில் வட மற்றும் தென்னமெரிக்க பிரதேசங்களில் இவ் இயற்கை இடர் அதிகளவில் இடம்பெறுகின்றது. டொர்னாடோ பல்வேறு வடிவங்களில் மட்டுமன்றி பல்வேறு அளவுகளிலும் ஏற்படலாம். அதிகமான டொர்னாடோ நிகழ்வுகள் ஒரு மணித்தியாலத்திற்கு 110 மைல்களை விடக் (177 km/h) குறைவான காற்றின் வேகத்தினைக் கொண்டிருப்பதுடன் குறுக்காக ஏறத்தாழ 250 அடியையும் (80 மீற்றர்) கொண்டிருக்கும். இடிமுழக்கத்துடன் கூடிய புயற்காற்றுடன் டொர்னாடோ ஏற்பட்டாலும் கூட காற்றின் கதி மணிக்கு 50 தொடக்கம் 300 (Kmph) வரை காணப்படும். அதாவது புயற்காற்றுக்கள் வீசும் எல்லைகளையும் கடந்து வீசக்கூடிய வேகம் உடையதாகவே இச்சுழல்காற்றுக்கள் விளங்குகின்றன. சமுத்திர நீர்ப்பரப்புக்களில் அதிகரித்த வெப்பம் காரணமாக வளிமேல் எழும் போது நீரும் சேர்ந்து எழும்பும். இதனால் நீர் மட்டத்தில் இருந்து வானம் வரை நீர்க்குழாய் போன்று டொர்னாடோ காட்சித்தரும். இவை பாரமான பொருட்களை மேலுயர்த்தும் வல்லமை உடையன. உலகில் மிக மோசமான டொர்னாடோ நிகழ்வு 1999 ஒக்லஹோமாவில் இடம்பெற்றதாகும். இதன் போது கட்டிடங்கள், வீடுகள், உடமைகள் அதிகளவில் சேதமடைந்துள்ளன.

### ❖ வெள்ளப்பெருக்கு

உலகளாவிய ரீதியில் பொதுவானதாக மட்டுமன்றி அடிக்கடி ஏற்படுகின்ற இயற்கை இடராகவும் வெள்ளப்பெருக்கு விளங்குகின்றது. வருடாவருடம் பாரியளவில் வெள்ளப்பெருக்கு நிகழ்வுகள் உலகில் இடம்பெற்று வருகின்றன. பொதுவாக வெள்ளப்பெருக்கானது நீர்மூலங்களிலுள்ள நீர் மட்டம்

உயர்வடைந்து நீர் நிரம்பி வழிதலால் ஏற்படுகின்றது. நீர் இலகுவில் வடிந்துசெல்ல முடியாத சமவெளிப் பகுதிகளிலேயே வெள்ளப்பெருக்கு அடிக்கடி ஏற்படுகின்றது. துரிதமான மானிட நடவடிக்கைகள் இவற்றின் தீவிரத்தன்மையினை அதிகரித்து வருகின்றன. நதிகளில் நீரின் அளவு கூடும் போது அவை கரைபுரண்டு பரவி ஓடுவதனால் கரை விளிம்புகளை உடைத்து விடுகின்றன. அத்துடன் வடிநிலங்களில் வண்டல் படிந்து வெள்ளத்தை உருவாக்குகின்றது. தொடர்ச்சியான மற்றும் அதிகளவிலான மழைவீழ்ச்சி, பருவக்காற்று, சூறாவளி, புயல், போன்றவற்றால் ஏற்படும் அதிக செறிவான மழைவீழ்ச்சி, புவி வெப்பம் அதிகரித்தலால் ஏற்படும் தாக்கம், உயரணைகள் உடைப்பெடுத்தல், நதிக்கழிமுகம் கடல் மட்டத்தைவிட தாழ்ந்து காணப்படல், மனித நடவடிக்கைகளான காடழிப்பு, அகழ்வு நடவடிக்கைகள், மேட்டு நில விவசாயம், தாழ்நிலங்களை நிரப்புதல், ஒழுங்கற்ற வடிகாலமைப்பு, என்பன வெள்ளப்பெருக்கிற்கான முக்கிய காரணிகளாக அமைகின்றன.

உலகில் வெள்ளப்பெருக்கு அபாயம் ஏற்படும் பிரதேசங்களாக சில இடங்கள் அடையாளங் காணப்பட்டுள்ளன. சீனாவின் ஹொவாங்கோ நதிப்பள்ளத்தாக்கு, யாங்கிசியாங் நதிப்பள்ளத்தாக்கு, இந்தியாவின் கங்கை நதி, பிரம்மபுத்திரா நதிப்படுக்கைகள், வட அமெரிக்காவின் ரெக்சாஸ் மாநிலம், ஒரிசோனா ஆற்றுமுகம், பங்களாதேஷ், மேற்கிந்திய தீவுப்பகுதி, மிசிசிப்பி பள்ளத்தாக்கு, பிலிப்பைன்ஸ் தீவுப்பகுதி ஆகியன அவற்றில் முக்கியமானவையாகும். உலகில் முக்கியமான வெள்ள அனர்த்த நிகழ்வுகள் என நோக்குகையில் சீனாவில் குவாங்கோ (மஞ்சள் நதி) பகுதியில் அடிக்கடி இடம்பெறும் வெள்ளப்பெருக்கு முக்கியமானதாகும். 1931 இல் இடம்பெற்ற பாரிய வெள்ளப்பெருக்கினால் 800,000 க்கும் 4,000,000 க்கும் இடைப்பட்ட இறப்புக்களை ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஐக்கிய அமெரிக்காவில் இடம்பெற்ற வெள்ளப்பெருக்குகளில் 1993 ஆம் ஆண்டு இடம்பெற்ற வெள்ளப்பெருக்கு வரலாற்றில் அதிக செலவினை ஏற்படுத்திய ஒன்றாகும். அதேபோல் 2010 இல் பாக்கிஸ்தானில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு பல உயிர்களை பலிகொண்டதுடன் பயிர்கள் மற்றும் உட்கட்டமைப்புக்களில் பாரிய சேதத்தினை ஏற்படுத்தியது. இது மட்டுமன்றி வருடந்தோறும் பங்களாதேஸ் வெள்ளப்பெருக்கு அனர்த்தத்திற்கு உட்பட்டு வருகின்றமையினால் பாரிய நெருக்குதலுக்கு உள்ளாகி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

### ❖ எரிமலை

புவிவெளியுருவவியல் சார்ந்த இயற்கை இடர்களுள் எரிமலை முக்கியமானவொரு இடராகும். இது புவிக்கவசத்தகடுகளின் செயற்பாட்டுடன் மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. கோளவகத்தினுள் காணப்படும் பாறைக்குழம்பானது வெப்பம் மற்றும் அமுக்கம் போன்றவற்றின் காரணமாக புவியோட்டின் பலவீனமான வெடிப்புக்கள் மற்றும் பிளவுகளின் ஊடாக வெளியே தள்ளப்படுவதே எரிமலை செயற்பாடாகும். பாறைக்குழம்பானது புவியோட்டின் நொய்தலான பகுதிகளை தகர்த்துக் கொண்டு வெளியே பாயும் போது லாவாக்குழம்புடன் தூசுத் துணிக்கைகள், சாம்பல், புகை, சிறுசிறுகற்கள் ஆகியவற்றினையும் வெளியே கக்குகின்றது. உலகின் பிரதான எரிமலை வலயங்களாக கவசத்தட்டு தாழ்ந்து செல்லும் வலயம், தட்டுக்களுக்குள்ளே அமைந்து காணப்படும் வெப்ப வலயம், சமுத்திரத்தின் நடு வலயம் ஆகியன காணப்படுகின்றன. எரிமலைச் செயற்பாடானது யப்பான், இந்தோனேசியா போன்ற பகுதிகளில் அதிகமாக ஏற்படுகிறது. உலகில் இது வரை இடம்பெற்ற எரிமலை வெடிப்புக்களில் கி.மு.1450 இல் இடம்பெற்ற கிறீஸ் சன்ரோறி எரிமலை கக்குகை, கி.மு.1979 இத்தாலி விசூவியஸ் எரிமலைக் கக்குகை, கி.பி.1981 மற்றும் 1991, 2006 ஆகிய ஆண்டுகளில் பிலிப்பைன்ஸில் இடம்பெற்ற எரிமலை கக்குகைகள், 2007 இல் இடம்பெற்ற எட்னா எரிமலை கக்குகை ஆகியன உலகில் இணங்காணப்பட்ட உயர்தர எரிமலைக் கக்குகைகளில் சிலவாகும். இவை சாதாரண எரிமலைகளுடன் ஒப்பிடும் போது ஆயிரம் மடங்கு பாரிய தாக்கத்தினை கொண்டவை. இத்தகைய மிகப் பாரியளவான எரிமலை வெடிப்பினால் குறித்த பிரதேசக் காலநிலையிலும் பாரிய மாற்றங்கள் உணரப்பட்டன. எரிமலை நிகழ்வுகளில் இருந்து வெளிப்படும் வாயுக்கள் அமில மழைக்குப் பிரதான பங்காளராகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

### ❖ காட்டுத் தீ

உலகின் உயிரியல் வளங்களில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடியதொரு இயற்கை அனர்த்தமாக காட்டுத் தீ விளங்குகின்றது. காட்டுத்தீயானது தாவரப்போர்வையினை எரிக்கும் கட்டுப்படுத்தமுடியாத தீயாகும். சூரிய வெப்பம், வேகமான காற்று, மரங்களின் உராய்வு, எரிமலைக்

கக்குகை, வெப்பக்காற்றலை, வரட்சி, மின்னல் தாக்கம் என்பன காட்டுத் தீ ஏற்படுவதற்கு ஏதுவான பிரதான காரணிகளாக அமைகின்றன. இவை தவிர மானிட நடவடிக்கைகளாலும் காட்டுத்தீ பரவலாக ஏற்படுகின்றது. இது தீக்கிரையாகும் தாவரப்போர்வையின் தன்மையைக் கொண்டு பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றது. காட்டுத்தீயானது அதன் விரிவான அளவு, அது தோன்றிய இடத்திலிருந்து ஏனைய இடங்களுக்கு பரவும் வேகம், எதிர்பாராதவிதமாக திசையை மாற்றியமைப்பதற்கான சாத்தியத்தன்மை, தீ தடைகளை (வீதிகள், நதிகள்) தாண்டும் திறன் ஆகியன மூலம் வேறுபடுகின்றது.

அந்தாட்டிக்கா கண்டம் தவிர்ந்த ஏனைய எல்லாக் கண்டங்களிலும் காட்டுத்து நிகழ்கின்றது. பொதுவாக வெப்பவலயம் மற்றும் இடைவெப்ப வலயப் பிரதேசங்களில் காட்டுத் தீ அனர்த்தம் பாரியளவில் இடம்பெறுகின்றது. சீனா, இந்தோனேசியா, அவுஸ்திரேலியா, ஐக்கிய அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், மத்திய ஆபிரிக்கா, இந்தியா போன்ற பிரதேசங்களில் அதிக பாதிப்பினை ஏற்படுத்துகின்றது. காட்டுத் தீ அபாயங்களுள் இதுவரை பதிவு செய்யப்பட்ட பாரியளவிலான காட்டுத்தீ நிகழ்வுகள் பின்வருமாறு,

- 1960 : கலிபோர்ணியா
- 1997/1998 : இந்தோனேசியா, யாவா
- 2002 : கொலராடோ
- 2003 : கலிபோர்னியா
- 2006 : அவுஸ்திரேலியா, சிட்னி, கன்பெரா.
- 2009 : விக்டோரியா மாநிலம்
- 2010 : ரஷ்யா, இஷ்ரேல்
- 2011 : வடகாஸ்

இது மானிட வாழ்விற்கும் சொத்துக்களுக்கும் பாரியளவான சிதைவுகளை ஏற்படுத்தக்கூடியதொரு இடராகும். இதனால் பாரியளவில் சூழலியல், சமூகப் பொருளாதார பாதிப்பு ஏற்படுகின்றது. மறுபுறம் ஒரு சில சாதகமான விளைவுகளையும் இது கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. சில தாவர இனங்கள் அவற்றின் வளர்ச்சிக்கும் மீள் உற்பத்திக்கும் தீயின் விளைவுகளில் தங்கியுள்ளன. இருப்பினும் பொதுவான நோக்கில் பாரிய காட்டுத்தீ நிகழ்வுகள் பாதகமான சூழலியல் விளைவுகளையே கொண்டிருக்கின்றன. 2009 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அவுஸ்திரேலிய விக்டோரியா மாநிலத்தில் ஏற்பட்ட காட்டுத்தீயால் சில நகரங்கள் முற்றாக அழிந்தன. 750 வீடுகள் எரிந்து சாம்பலாகியதுடன் 135 பேருக்கு மேல் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு உலகளாவிய ரீதியில் பல்வேறு வகையான இயற்கை இடர்கள் காணப்படினும் அவை வித்தியாசமானதும் பல்வகைப்பட்டதுமான பரிமாணங்களைக் காட்டிநிற்கின்றன. அவை ஒவ்வொன்றினதும் ஆக்கக் காரணிகள், செயற்படும் திறன், ஏற்படுத்தப்படும் அழிவு, அவற்றை எதிர்கொள்ளும் திறன் ஆகியவற்றுக்கிடையில் வேறுபாடுகள் காணப்படுவதனாலேயே இயற்கை அனர்த்தங்கள் பற்றிய நிலைப்பாடும் தன்மைகளும் இடத்துக்கிடம் வித்தியாசப்படுகின்றது. சில பிரதேசங்களில் இவற்றின் தாக்கம் மிகத்தீவிரமாகக் காணப்படுவதுடன் சில நாடுகள் ஒரே தருணத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட இயற்கை அனர்த்த தாக்கங்களையும் எதிர்கொண்டு வருகின்றன. இதனால் ஒரு நாட்டின் சமூகப் பொருளாதார நிலைமைகள் மாத்திரமன்றி அரசியல் மற்றும் சூழல் அபிவிருத்தியின் ஸ்திரதன்மைகளிலும் பாரியளவில் பாதிப்புக்கள் ஏற்படுத்தப்படுகின்றன. நாடுகளின் சமூகப் பொருளாதார மற்றும் சூழலியல் பின்னணிகளின் அடிப்படையில், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் குறிப்பாக வறிய நாடுகளில் இவற்றின் தாக்கம் அதிகமாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. ஒப்பீட்டளவில் அபிவிருத்தியடைந்த நாடுகள் இயற்கை அனர்த்த விளைவுகளை சமாளிக்கும் இயலுமையினை அதிகளவில் கொண்டிருக்கின்றமையினால் அங்கு இடர்களின் பாதக விளைவுகளும் குறைவாகவே காணப்படுகின்றன. ஆனால் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளைப் பொறுத்தவரையில் அனர்த்தங்களானவை, அவற்றின் சமூகப் பொருளாதார பின்னணிக்கு இணங்க அவற்றை மேலும் மோசமான நிலைக்கு தள்ளிவிடுகின்றன. இந்நிலமையானது பாதிப்பிற்குள்ளாகும் சமூகத்தின் மீது பாரியளவிலான கரிசணையினை ஏற்படுத்தச் செய்துள்ளது. இதன் காரணமாகவே உலக நாடுகளின் கவனம் பாரியளவில் இயற்கை அனர்த்தங்கள் என்ற பதத்தினை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது. எனவே, இத்தகைய பின்னணியின் அடிப்படையில் இயற்கை அனர்த்தங்களினால் ஏற்படும் பௌதீக மற்றும் மானிட அவலங்களைக் குறைக்கவேண்டியது உலகளாவிய கடமை என எண்ணுவது மாத்திரமன்றி ஒவ்வொருவரும் அதனைப் பொறுப்புடன் உணர்ந்து செயற்படவேண்டியது அவசியமாகும்.

## உசாத்துணை நூற்பட்டியல்

அருளானந்தம், ச. (2008) "அனர்த்த முகாமைத்துவம் ஒரு அனுபவ அணுகுமுறை" அருள் வெளியீடு: திருகோணமலை.

ராதாகிருஸ்ணன், கே, (2007) "இயற்கை அனர்த்தங்களும் இடர் முகாமைத்துவமும்" மதூசா வெளியீடு, திருகோணமலை.

Abbott,L,P. (2006), "Natural Disasters", Fifth Edition, USA : Mc Grow Hill.

Gunawardene,N & Noronha,F. (2007), "Communicating Disasters", UNDP Regional Centre in Bankok & TVC Asia Pacific.

International Federation of Red Cross & Red Crescent Societies, (1997), "World Disasters Report", New York: Oxford University Press.

International Federation of Red Cross & Red Crescent Societies, (2007), "World Disasters Report", Swistland.

http://disasterplanzulu.com/2010/01/emergency-management-overview-, 2010.08.28, 7.37pm

http://emergencyreactiondisasterservices.com/Home.html, 2010.08.28, 7.58pm

http://en.wikipedia.org/wiki, 2011.08.23, 5.35pm

http://landslides.usgs.gov/learning/majorls.php, 2011.08.25, 6.25pm

## நாளையைப் பற்றியது

வாருமென் மக்களே
வாருமென் மக்களே
சூரியனை சுமக்கும்
அம்மலைகளின் மீதேறி
நமக்கான வாழிடத்தை
வசதியாய் செய்து கொள்வோம்
அம்மலைகள் நமதே
அதன் நதிகளும் நமதே
உழைக்கும் நம் கரங்கொண்டு
ஆக்கிய இவ்வுலகும் நமதே
பூக்களால் வரையப்பட்ட
மரங்களின் நிழலில்
பறவைகளோடும் விலங்குகளோடும்
வாழ்வைப் பகிர்ந்து கொள்வோம்
சுதந்திரத்தின் பாடல்களை
இசைத்தபடி
குடிலமைப்போம்
வாருமென் மக்களே
வாருமென் மக்களே
சூரியனை விழுங்கிய
கடலினை கடந்துபோய்
நமக்கான வாழிடம் செய்வோம்
வானின் நீலமும்
மண்ணின் ஈரமும்
நம் உழைப்பும் நம்பிக்கையும்
நம் சந்ததியை நிச்சயம் வாழ்விற்கும்
அவர்கள் சொல்வது போல்
ஒரே இரவில்
அழிந்து ஒழிந்துவிட
உலகமென்ன
கையளவான
களிமண்ணுருண்டையோ!

மு. கீர்த்தியன்

# புவி வெப்பமடைதலும் அதன் விளைவுகளும்
# (Global Warming and Its Repercussions)

பெ. யோகேஸ்வரன் BA. (Hons), MA

" பூமி மனிதனுக்குச் சொந்தமானதல்ல மனிதன் தான் பூமிக்குச் சொந்தமானவன்"

(செவ்விந்திய தலைவன் சியாட்டில் - 1854)

## 1. அறிமுகம்



புவியின் சராசரி வெப்பநிலையில் ஏற்பட்டு வருகின்ற அதிகரிப்பினை புவி வெப்பமடைதல் என எளிமையாக வரைவிலக்கணப்படுத்தலாம். ஞாயிற்றுத் தொகுதியில் காணப்படுகின்ற பல கோள்கள் கடுமையான வெப்பம், குளிர் காரணமாக உயிரினங்கள் அற்ற கோள்களாக இன்று காணப்படுகின்றன. இருப்பினும், ஞாயிற்றுத் தொகுதியில் காணப்படுகின்ற கோள்களில் ஒன்றான நாம் வாழும் புவி மட்டும் உயிர்ச்சூழலை வரப்பிசாதமாகக் கொண்ட கோளாகத் திகழ்ந்து வருகின்றது. புவியின் விசேட தன்மைக்கு அடிப்படையாக இருப்பது வெப்ப சமநிலையாகும். புவிக்கு சிற்றலைகளாக (Short Wave Radiation) வருகின்ற ஞாயிற்றுக் கதிர்கள் புவியில் பட்டு மீண்டும் நெட்டலைகளாக (Long Wave Radiation) வளிமண்டலத்தைக் கடந்து அண்டவெளிக்கு திரும்பி செல்கின்றன. இவ்வாறு சிற்றலைகளாக புவிக்கு வரும் ஞாயிற்றுக் கதிர்கள் முழுவதும் திரும்பி சென்றால் புவி கோளானது குளிர்ந்து குளிர்சாதன பெட்டியின் உள் காணப்படுவது போல உறைந்த தன்மை உடையதாக மாறி இருக்கும். இத்தன்மையில் இருந்து மீட்டெடுத்து புவியினை ஓரளவு சூடாக வைத்திருக்க இயற்கையானது காபனீரொட்சைட்டு ($CO_2$), மெதேன் ($CH_4$), நைதரஸ் ஒட்சைட்டு ($N_2O$), குளோரோ புளோரோ காபன் சேர்வைகள் ($CFC_s$), கந்தகவீரொட்சைட்டு ($SO_2$), நீராவி ($H_2O$) போன்ற வெப்பத்தை உறிஞ்சும் வாயுக்களைப் பயன்படுத்துகின்றன. இவ்வாயுக்களானது வெப்பத்தை உறிஞ்சி சேமித்து வைத்திருக்கக் கூடியன. புவியில் பட்டு திரும்பி செல்லும் ஞாயிற்றுக் கதிர்களில் குறிப்பிட்ட அளவை புவியைச் சூழ்ந்து காணப்படுகின்ற வாயுக்களான போர்வைக்குள் இட்டு மூடிக்கொள்கின்றன. இதனால் புவியில் ஓரளவு வெப்பம் சேமிக்கப்பட்டு (ஏறத்தாழ $15^0$ செல்சியஸ்) எந்நேரமும் குறிப்பிட்டளவு வெப்பத்தைக் கொண்டு கதகதப்பாக இருப்பதுடன், புவிக்கோள் இரவில்கூட குறிப்பிட்டளவு வெப்பத்தைக் கொண்டு காணப்படுகின்றது.

சூரிய உதயத்தின்போது, தாவரங்கள் ஞாயிற்றுச் சக்தியை பெற்று மண்ணில் உள்ள ஊட்டச்சத்துக்களை மண்படையில் காணப்படும் நீரின் துணைக் கொண்டு, வேர்களின் மூலம் உள்ளெடுப்பதுடன், வளிமண்டலத்தில் காணப்படும் காபனீரொட்சைட்டு ($CO_2$ ) வாயுவை உள்ளெடுத்து ஒளித்தொகுப்பின் மூலம் தமக்கு தேவையான உணவினை உற்பத்தி செய்துக் கொள்கின்றன. இதனால் புவியில் பசுமைப் போர்வை உருவாகியுள்ளன. இப்பசுமைப் போர்வை நேரடியாகவும் மறைமுகமாகவும் எல்லா உயிரிகளும் உயிர் வாழ்வதற்குத் துணை புரிந்து வருகின்றன. இவ்வுயிர்ச் சூழலுக்கு காபனீரொட்சைட்டு உள்ளீட்ட சேமிப்பு வாயுக்கள் இன்றியமையாதவைகளாக விளங்குகின்றன.

பனிப்பொழியும் குளிர் நாடுகளில் தாவரங்களை வளர்பதற்குக் கண்ணாடி அல்லது பிளாஸ்டிக் கூடாரங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. கூடாரத்தினுள் தாவரத்துக்குத் தேவையான வெப்பத்தினை செயற்கையான முறையில் வழங்கப்படுகின்றது. அவ்வெப்பம் கூடாரத்தினுள் பட்டு உட்பகுதியிலேயே தெறிப்படைந்து கொள்வதால் வெப்பம் வெளிச்செல்லாது பாதுகாக்கப்பட்டு வருவதுடன் தாவரங்கள் கூடாரத்தினுள் செழிப்பாக வளரவும் உதவுகின்றது. இதனை பச்சை வீடு என அழைக்கின்றனர். கூடாரம் எவ்வாறு வெப்பத்தைத் தடுத்து பசுமைப் போர்வைக்குக் காரணமாக இருக்கின்றதோ, அது போலவே புவியில் வெப்பத்தை உறிஞ்சும் வாயுக்கள் வெப்பத்தை சேமித்து பூகோளத்தில் தாவரப் போர்வைகளை உருவாக்குவதால், வெப்பத்தை உறிஞ்சும் வாயுக்களை 'பசுமை இல்ல வாயுக்கள்' என அழைக்கின்றனர்.

பசுமை இல்ல வாயுக்கள் புவியில் பெறுமதியான வாயுக்களாகத் திகழ்ந்தன. ஆனால், இன்று பல்வேறு மானிட நடவடிக்கைகள் காரணமாக இவ்வாயுக்களின் வீதம் அசாதாரண அளவில் அதிகரித்து வருகின்றன. இவற்றின் அதிகரிப்பால் புவி சேமித்து வைத்திருக்கும் வெப்பநிலையில் அதிகரிப்பு ஏற்பட்டு புவி படிப்படியாக சூடேறி வருகின்றது. இச்செயற்பாடு காரணமாகப் புவியில் பல்வேறு தீய விளைவுகள்

ஏற்பட்டு வருவதுடன் பசுமைக்கே கெடுதல் செய்ய தொடங்கியுள்ளன. இதனால் பசுமை இல்ல வாயுக்களை பசுமைக்குக் கேடு விளைவிக்கும் வாயுக்கள் என இன்று அழைக்கின்றனர். இவை பாரதூரமான விளைவுகளை புவியில் ஏற்படுத்தி வருகின்றன. எனவே, இக்கட்டுரையில் வெப்பம் அதிகரிப்பு அளவு, அதன் எதிர்கால விளைவு, வெப்பமடைவதற்கான பிரதான காரணங்கள், அதனால் ஏற்படும் விளைவுகள், அதனைத் தடுக்க மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நடவடிக்கைகள் என்பன தொடர்பாக விரிவாக ஆராய்வது பயனுடையதாக அமையும்.

## 2. புவியின் வெப்பநிலை போக்கு

புவியில் கடற்பிரதேசம், கரையோரப் பிரதேசம். உயர் மலைப் பிரதேசம், இடைப்பட்ட உயர் பிரதேசம், அயனம், இடைவெப்பம், முனைவு என பல்வேறு பிரதேசங்களிலும் வெவ்வேறுபட்ட வெப்பநிலைகள் நிலவுகின்றன. இவைகளில் $-0^0$ செல்சியஸ்க்கு குறைவான பிரதேசங்களும் $30^0$ செல்சியஸ்க்கு மேற்பட்ட பிரதேசங்களும் காணப்படுகின்றன. இருப்பினும், சராசரியாக புவியின் வெப்பநிலை $15^0$ செல்சியஸ் ஆக காணப்படுகின்றது.

1880 ஆம் ஆண்டு தொடக்கம் பூமியில் வெப்பநிலை தரவுகள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இதன்படி 20ஆம் நூற்றாண்டில் புவியின் சராசரி வெப்பநிலை $0.6^0$ செல்சியஸ் ஆக அதிகரித்துள்ளதாகவும் 1990-2000 ஆண்டு வெப்பம் கடந்த நூற்றாண்டின் வெப்பதசாப்பதமாகவும் 1998ஆம் ஆண்டு வெப்பமான ஆண்டாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது. உலக ரீதியாக காணப்படும் பிராந்திய நிலையங்கள் மற்றும் கரையோர கடல் மேற்பரப்பு வெப்பநிலை பதிவேடு (Sea – Surface Temperature – SST) தரவுப்படி 1980ம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலப்பகுதியிலேயே உலகில் வெப்பம் மிகுந்த ஆண்டுகளில் முதல் 7 ஆண்டுகள் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது. அமெரிக்காவின் வளிமண்டலவியல் நிர்வாகம் 2005ம் ஆண்டினை வெப்பம் மிகுந்த ஆண்டாகவும் புவியின் வெப்ப சரித்திரத்தில் முதல் பத்து ஆண்டுகள் 1990ம் ஆண்டுக்கு பிறகு வந்த ஆண்டுகள் என சுட்டிக்காட்டியது. இத்தகவல்களில் வேறுபாடுகள் காணப்பட்டாலும் கடந்த இரண்டு மூன்று தசாப்தத்தில் அதிகரிக்கின்றது என்பதை ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

காலநிலை மாற்றம் தொடர்பான விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சிகளின் படி $0.6 \pm 0.2$ பாகை செல்சியஸ் ஆக வெப்பநிலை அதிகரிப்பதாக கூறப்படுகின்றது. இது உரு சிறிய மாற்றம் தானே என யோசிக்க தோன்றினாலும் இவ்வதிகரிப்பு பாரதூரமான அழிவுகளை ஏற்படுத்தக் கூடியது. காலநிலை மாற்றம் தொடர்பான அரசாங்கங்களுக்கிடையிலான ஆணைக்குழு (Inter – Governmental Panal On Climate Change,- IPCC) 1990க்கும் 2100 ஆம் ஆண்டுக்கும் இடையில் உலக வெப்பநிலையானது $1.4^0$ செல்சியஸ் - $5.8^0$ செல்சியஸ் இடையில் அதிகரிக்கும் என எதிர்வுக் கூறியுள்ளமை இங்கு மனங்கொள்ளத்தக்கது.

## 3. புவியின் வெப்பநிலை அதிகரிப்பதற்கான காரணங்கள்

புவியின் வெப்பநிலையை அதிகரிப்பதில் 90 சதவீதத்திற்கும் மேலான பங்கினை காபனீரொட்சைட்டு ($CO_2$), மெதேன் ($CH_4$), நைதரஸ் ஒட்சைட்டு ($N_2O$), குளோரோ புளோரோ காபன் சேர்வைகள் ($CFC_s$), உள்ளிட்ட வாயுக்களும் சிறிய அளவான பங்களிப்புக்கு கந்தகவீரொட்சைட்டு( $So_2$), சூரியப் புள்ளி வட்ட செயற்பாடு என்பனவும் காரணமாக அமைகின்றன.

### 3.1. காபனீரொட்சைட்டு வாயு ($CO_2$) அதிகரித்தல்

எரிமலை வெடிப்பு மற்றும் உயிரினங்களினால் வெளியிடப்படும் காபனீரொட்சைட்டு ($CO_2$) வாயு அதிகரிக்கப்படாமல் சமநிலையில் வைத்திருப்பதற்கு இயற்கை தாவரப்படைகளை பயன்படுத்துகின்றது. அதாவது தாவரப்படைகள் ஒளித்தொகுப்பு செயற்பாட்டின் போது காபனீரொட்சைட்டு ($CO_2$) வாயு தாவரத்தினால் உள்ளெடுக்கப்பட்டு இலைகளினுள்ளும் தண்டுகளினுள்ளும் அடைந்து நிரப்பி வளியில் காபனீரொட்சைட்டு ($CO_2$) வாயுவை கட்டுப்படுத்தி வைக்கின்றன. நீரில் கலந்த காபன் கடற்பகுதியை அடைந்து முருகைகற்களை உருவாக்கும் அங்கிகளின் வன்கூடுகளில் சேமிக்கப்படுகின்றன. மிகுதி கடற்கரையோரத்தில் சுண்ணாம்பு கல்லாக மாறுகின்றன. மரங்கள் உறிஞ்சிய காபன் மில்லியன் கணக்கான ஆண்டுகள் மண்ணில் புதையுண்டு நிலக்கரி பெற்றோல் என்னும் இயற்கை வாயுவாக மாறுகின்றன. ஆனால் இன்று வேகமாக காடுகள் அளிக்கப்பட்டு வருகின்றன. 1950 – 1982 க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் அயன மலைக் காடுகள் 50 சதவீதம் அழிக்கப்பட்டுள்ளது. இதனால்

ஒளித்தொகுப்பு செயற்பாடு குறைவடைந்து தாவரங்களால் உள்ளடக்கப்படுகின்ற காபனீரொட்சைட்டு ($CO_2$) குறைவடைந்து வளிமண்டலத்தில் வெளியிடப்படும் காபனீரொட்சைட்டு ($CO_2$) வாயு அதிகரிக்கின்றது.

கைத்தொழில் நடவடிக்கைக்குத் துணையாக இருக்கும் நிலக்கரி, பெற்றோல், இயற்கை வாயு போன்ற எரிவாயுக்கள் எல்லாம் தாவங்கள் மில்லியன் கணக்கான ஆண்டுகளாக சிறுகச்சிறுக சேகரித்த வைத்த காபனை நொடிப்பொழுதில் எரியூட்டலின் மூலம் வளிமண்டலத்தில் விடுகின்றது. காடுகள் எரியூட்டப்படுதல், விறகுகளை எரித்தல் என்பவற்றின் காரணமாக வருடந்தோரும் 1.5 பில்லியன் மெற்றிக் தொன் காபன் ஆண்டு தோறும் வளிமண்டலத்திற்கு விடப்படுகின்றது. இதனால் காபனீரொட்சைட்டு ($CO_2$) வாயு அசுர வேகத்தில் அதிகரிக்கின்றது. 1980 இல் காபன் ஈரொட்சைட்டு ($CO_2$) வாயு அளவு 284 ppm (Parts Per Million) ஆகவும் 1994 இல் 330 ppm ஆகவும் அதிகரித்துள்ளது. 2000 ஆம் ஆண்டில் 379 ppm ஆகவும் அதிகரித்துள்ளது. அடுத்து வருகின்ற 50 ஆண்டுகளில் 540 ppm ஆக அதிகரிக்கும் என உலகிற்கு ஆய்வுகள் எச்சரிக்கின்றது. இவற்றின் அதிகரிப்பு புவிக்கு வரும் வெப்பத்தை அதிகமாக உறிஞ்சி புவி வெப்பமடையும் ஆபத்தில் தனது பங்கை பிரதானமாக செலுத்துகின்றது. இவ்வாயு மாத்திரம் புவி வெப்பமடைவதில் ஏறத்தாழ 64 சதவீத பங்கினை கொண்டுள்ளது.

### 3.2. மெதேன் ($CH_4$) வாயு அதிகரித்தல்

காபனீரொட்சைட்டு ($CO_2$) வாயுவுக்கு அடுத்த படியாக புவியை வெப்பமடைய செய்வதில் மெதேன் ($CH_4$) பெரும் பங்கு வகிக்கின்றது. இவ்வாயு உருவாகுவதற்கு அசைபோடும் விலங்குகளாக ஆடு, மாடு, எருமை, ஒட்டகம் போன்ற உயிரினங்களின் இரை மீட்டுவதற்குத் துணை புரியும் நுண்ணங்கிகள் சமிப்பாட்டு தொகுதியில் காணப்படுகின்றன. இவற்றின் நொதித்தல் செயற்பாடு காரணமாகக் குறிப்பிட்டளவு மெதேன் ($CH_4$) வளிமண்டலத்தை அடைகின்றது. பண்ணைகளில் காணப்படுகின்ற விலங்குகளின் கழிவுகள் தேங்கியிருந்து அவற்றில் பற்றீரியாக்கள் பெருகி அதிலிருந்தும் மெதேன் ($CH_4$) வாயு வெளியேறுகின்றன. இன்று உலகளாவிய ரீதியில் வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஐரோப்பா, ஆசிய, ஆபிரிக்கா உள்ளிட்ட இடங்களில் விலங்குப் பண்ணைகள் இறைச்சி, பால், ரோமம், தோல் தேவைக்காக அதிகரித்து வருகின்றது. இதனால் மெதேன் ($CH_4$) வாயு வெளியேற்றம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது,

இன்று உலகில் அதிகரித்து வருகின்ற சனத்தொகை வளர்ச்சிக்காக நெல் நிலமானது அதிகரிக்கப்பட்டு வருகின்றது. நெல் நிலங்களில் தேக்கப்படுகின்ற நீரில் அதிக இரசாயன பசளைகள் ஈரலிப்பு காற்று இல்லாத சூழல் பக்டீரியாக்களுக்கு உவப்பாக அமைய அவ்விடத்தில் இருந்து மெதேன் ($CH_4$) வாயு வெளியேறி வாயு அளவு அதிகரித்து புவி வெப்பமடைய காரணமாக அமைகின்றது. ஒவ்வொரு வருடமும் மெதேன் ($CH_4$) வாயு வளிமண்டலத்தில் 0.8 சதவீதம் அதிகரித்து வருகின்றது. இவ்வாயு மாத்திரம் புவி வெப்பமடைவதில் 19 சதவீதமான பங்கினை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

### 3.3. நைதரஸ் ஒட்சைட்டு ($N_2O$) வாயு அதிகரித்தல்

மண்ணில் இன்று அதிகமான நைதரசன் வளமாக்கிகள் விவசாய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இது பக்டீரியாக்களின் தாக்கத்திற்கு உட்படுவதன் காரணமாக நைதரஸ் வாயு வளிமண்டலத்தக்கு விடப்படுகின்றது. மேலும் இவ்வாயு வெளியேற்றத்திற்கு சுவட்டு எரிபொருட்கள் எரியூட்டப்படுவதும் முக்கிய செயற்பாடாகவும் காணப்படுகின்றது. எரியூட்டப்படும் போது வெளியேற்றப்படுகின்ற நைதரஸ் ஒட்சைட்டு ($N_2O$) வாயுவானது இன்று ஏறத்தாழ வருடந்தோரும் 0.3 சதவீதமாக அதிகரித்து வருகின்றது. இவ்வாயு புவி வெப்பமடைதலில் 6 சதவீத பங்கினை வகிக்கின்றது.

### 3.4. குளோரோ புளோரோ காபன் சேர்வைகள் ($CFC_s$) வாயு அதிகரித்தல்

குளிரூட்டிகள், குளிர் சாதன பெட்டிகள், மின் விசிறிகள், வாசனை திரவியங்கள், சுத்திகரிக்கப் பயன்படுத்தப்பட்டு வருகின்ற பொருட்கள் என்பனவற்றில் இருந்து கசிந்து குளோரோ புளோரோ காபன் சேர்வைகள் ($CFC_s$) வளிமண்டலத்துக்கு வெளிவிடப்படுகின்றது. இன்று உலகலாவிய ரீதியில் இதனது பயன்பாடுகள் பன்மடங்காக அதிகரித்து வருவதனால் இவ்வாயுவின் வெளியேற்றமும் வளிமண்டலத்தில் அதிகரிக்கின்றது. ஒவ்வொரு வருடமும் 5 சதவீதம் இவ்வாயுவின் அளவு அதிகரிக்கின்றது. இவை மிக உறுதியான சேர்வைகளாக காணப்படுவதால் 100 வருடங்களுக்கு மேல் வளிமண்டலத்தில் நிலைத்து நின்று வெப்பமுறும் செயற்பாட்டில் பங்கெடுக்கக்கூடியது. குளோரோ புளோரோ காபன் சேர்வைகள்

($CFC_s$) வாயு புவி வெப்பமடைவதில் 5 சதவீத பங்கினை வகிக்கின்றது.

### 3.5. கந்தகவீரொட்சைட்டு ($SO_2$) வாயு அதிகரித்தல்

உலகில் பசுபிக் கரையோரம், உலக மலைத்தொடர் வலயம், ஆபிரிக்காவை சுற்றிய விசேட வலயம், சமுத்திர மலைத் தொடர் வலயம் உள்ளிட்ட கவசத்தகடுகளின் விளிம்பு பகுதிகளிலும் விளிம்புக்கு அருகாமையிலும் எரிமலை குமுறல்கள் இடம்பெறுகின்றன. இவ்வியற்கை செயற்பாட்டின் போது பெருமளவான கந்தகவீரொட்சைட்டு ($SO_2$) வெளியேறி வளிமண்டலத்தில் கலக்கின்றன. இதனால் கந்தகவீரொட்சைட்டு ($SO_2$) வாயு வளிமண்டலத்தில் அதிகரித்து வெப்ப உறிஞ்சல் அதிகரிப்புக்குத் துணை புரிந்து புவி வெப்பமடைவதற்கு இவ்வாயுவும் ஒரு காரணியாக அமைகின்றது.

### 3.6. நீராவி ($H_2O$) அதிகரித்தல்

இன்று அதிகரித்து வருகின்ற சுவட்டு எரிபொருட்கள் எரியூட்டப்படுகின்ற போது அவற்றில் இருந்து நீராவி ($H_2O$) வெளியேறுதல், தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படுகின்ற நீராவி ($H_2O$), மற்றும் இன்று அதிகரித்து வருகின்ற புவி வெப்பமடைதலால் புவி மேற்பரப்பில் காணப்படுகின்ற நீரானது கூடுதலாக ஆவியாகின்றது. இதனால் வளிமண்டலத்தில் நீராவி ($H_2O$) யின் அளவு அதிகரித்து ஞாயிற்று கதிரின் வெப்பத்தினை உறிஞ்சி புவி வெப்பமடைவதில் பங்கு வகிக்கின்றது. இவற்றின் காரணமாக புவி வெப்பமடைகின்ற அளவானது மிக மிக குறைவாகக் காணப்படுவதாக கருதப்படுகின்றது

### 3.7. பனிப்படலங்களின் மேல் மாசுக்கள் படிதல்

பனிப்படலங்களின் மேல் மாசுக்கள் படிவதன் காரணமாகவும் புவியின் வெப்பநிலை சிறு அளவுக்கு அதிகரிக்கின்றது. அதாவது பனிப்படலங்கள் பளபளப்பாகக் காணப்படுவதால் புவிக்கு வருகின்ற ஞாயிற்றுக் கதிர்கள் இவற்றில் பட்டு தெறிப்படைகின்றன. இதனால் புவியின் வெப்பநிலையை சிறு அளவாவது குறைக்கும் வாய்ப்பு காணப்படுகின்றது. ஆனால் இன்று வெளியேற்றப்படுகின்ற அளவுக்கு அதிகமான புகை, தூசு துணிக்கைகள் பனிப்பாறையின் மேல் படிந்து பனிப்படலத்தின் பளபளப்புத் தன்மையைக் குறைத்து விடுகின்றது. இதனால் பட்டுத் தெறிக்கும் சூரிய கதிரின் அளவு குறைவடைவதால் கதிர்கள் திரும்பி செல்வது குறைக்கப்பட்டு புவி வெப்பமாதலுக்குத் துணை புரிகின்றன.

### 3.8. ஞாயிற்றுப் புள்ளி வட்டம்

ஞாயிற்றுப் புள்ளி வட்ட செயற்பாடு என்பது புவியின் கீழ் உள்ள காந்த வலய ரேகைக்குள் எடுக்கும் மேற்காவுகையை ஆதாரமாகக் கொண்டு ஞாயிற்றின் அகச்சிவப்பு வெளியீட்டில் அதிகரிப்பு ஏற்படுகின்றது. ஜேர்மனிய வானியல் அறிஞரான எஸ். எம். சுவேபே செய்த ஆய்வின் படி ஒவ்வொரு 11 வருடங்களுக்கு ஒரு முறை சூரியனிலிருந்து வெளியாகும் வெப்ப சக்தி அதிகரிப்பதாக தெரிவித்துள்ளார். இவ்வாறு வெளியாகும் சக்தியில் குறிப்பிட்ட பங்கினை புவியின் வளிக்கோளம் உறிஞ்சிகின்றது. இதன் காரணமாகவும் புவி வெப்பம் அதிகரிக்கின்றது.

## 4. புவி வெப்பமடைவதனால் ஏற்படும் விளைவுகள்

### 4.1. பனிப்படலம் உருகுதல்

புவி வெப்பமடைவதனால் பனிப்படலம் உருகுதல், கடல் மட்டம் உயர்வு, முருகை கற்பாறைகள் அழிவுகள், காலநிலை மாற்றங்கள் என்பனவற்றின் காரணமாக ஏற்படுகின்ற பாதிப்புக்கள் சூழல். சமூக, பொருளாதார, அரசியல் விடயங்களில் பல்வேறு விளைவுகளை ஏற்படுத்துகின்றன. பனிப்படலங்கள் உருகும் ஆடிக், அந்தாடிக் துருவ பகுதி மற்றும் இமய மலை, அந்தீஸ் மலை, ரொக்கீஸ் மலை, பிரனீஸ் மலை, அல்ப்ஸ் மலைகளில் பனிப் படலங்கள் காணப்படுகின்றன. இவை வெப்ப அதிகரிப்பினால் உருகத் தொடங்குகின்றன. இதனால் நீர் சமநிலையில் பனிப்பாறையின் அளவு குறைவடைந்து உருகும் பனியானது இறுதியில் கடலை வந்தடைகின்றது.

அந்தாடிக் பிரதேச நிலப்பகுதியில் 99 சதவீத பகுதி பனியால் மூடப்பட்டுள்ளது. இவை முழுமையாக உருகுமாயின் கடல்மட்டம் 69 மீற்றர் ஆக உயரும் எனக் கூறப்பட்டுள்ளது. இப்பனிப்படலங்கள் கடந்த சில தசாப்தங்களாக மெதுவாக உருகத் தொடங்கியுள்ளன. ஆடிக் கடல் பனிப் பிரதேசம் கோடை காலத்தில் 20 சதவீதம் குறைகின்றது. 1980 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆடிக் பனிப் போர்வையில் 20 – 30 சதவீதம் இழக்கப்பட்டுவிட்டது. இதனால் சில மீனினங்கள், பறவைகள். துருவக் கரடிகள் என்பன பாதிக்கப்படுவதுடன் வேட்டையாடும் தொழிலை நம்பி வாழும் பழங்குடியினரான எஸ்கிமோவர்களின் வேட்டையாடும் தொழில் மற்றும் வாழ்க்கை முறைமை என்பனவும் பாதிக்கப்படுகின்றன.

1999 ஆம் ஆண்டு தகவல்களின் படி இமயமலை சிகரமான எவரெஸ்ட் பகுதியில் பனி உருகுவதால் 1.3 மீற்றர் பனிபாறைகள் குறைந்துள்ளன. இப்போது ஆண்டுக்கு 0.1 மீற்றர் குறைந்து கொண்டே வருகின்றது. இந்த நிலை நீடிக்குமானால் 2050 ம் ஆண்டு இமயமலையின் கிழக்கில் காணப்படும் சீனாவில் பனிமலைகளில் 64 சதவீதம் உருகிவிடும் என சீன அறிவியல் கழகம் அண்மையில் எச்சரித்துள்ளது. வேகமாக உருகும் செயற்பாடு காரணமாக சீனாவில் மேற்கு பிரதேசம் பனி உருகலால் பெறப்பட்டு வந்த நீர் குறைவடையும் அபாயம் ஏற்பட்டு 300 மில்லியன் பேர் குடிநீர் தட்டுப்பாட்டை எதிர்நோக்கும் அபாய நிலை உருவாகும் என அஞ்சப்படுகின்றது.

## 4.2. கடல் மட்ட உயர்வு

உலகில் மொத்த நன்னீரில் 75 சதவீதத்திற்கு மேற்பட்ட பங்கு துருவப் பகுதிகளிலேயே பனிப் பாறையாகப் படிந்துள்ளது. இவை உருகி கடலில் வந்தடைந்துக் கொண்டிருக்கின்றன. இதனால் கடல்மட்டம் படிப்படையாக உயர்வடைந்துக் கொண்டு வருகின்றது. உலகில் சராசரியாக 1961 இல் இருந்து வருடமொன்றிற்கு சராசரியாக 1.8 மில்லிமீற்றரில் இருந்து 1993ம் ஆண்டில் 3.1 மில்லிமீற்றராக அதிகரித்துள்ளது. காலநிலை மாற்றம் தொடர்பான அரசாங்களுக்கிடையிலான ஆணைக்குழு (IPCC) கணிப்பீட்டின் படி 2100 ஆம் ஆண்டளவில் 20 – 165 சென்றிமீற்றர்களாக கடல்மட்டம் உயர்ந்து காணப்படும். அத்துடன் அதி உயர்வான முன் மதிப்பீட்டின் படி 2100 இல் இது 3.5 மீற்றர்களாக இருக்கும் எனவும் வேகமாக உருகி வருகின்ற கிறீன்லாந்து தீவுப் பனிப்படலம் முழுமையாக உருகி முடியும் போது கடல்மட்டம் 7 மீற்றர்களாக உயரலாம் என்றும் குறிப்பிட்டுள்ளது. 5 – 6 மீற்றர்கள் உயர்வடையுமானால் புளோரிடா மாநிலத்தில் அரைவாசி பகுதி இழக்கப்படும். அத்துடன் பங்களாதேசத்தில் 12 சதவீதமான நிலப்பரப்பும் 10 மில்லியன் மக்களும் பாதிக்கப்படுவர். எகிப்தில் 15 சதவீத நிலம் இழக்கப்படும். இந்தியாவின் மும்பை வரையான கரையோர நகரங்கள் இழப்புகளுக்கு உள்ளாகும் என தெரிவிக்கின்றனர்.

1196 தீவுகளைக் கொண்ட மாலைத்தீவில் கடல்மட்டம் 3 மீற்றர் உயர்ந்தால் முழு நிலமும் நீரில் அமிழ்ந்து விடும். இந்த பேராபத்தை உலகுக்கு உரத்து கூறுவதற்காக அண்மையில் கடலுக்கு கீழ், நாட்டின் அமைச்சரவை கூட்டத்தினை நடத்தி உலகத்திற்கு பனிப்படலப் பாதுகாப்பின் அவசியத்தை எடுத்துக்காட்டியது. இது ஒரு மனித உரிமை பிரச்சினையாக எடுத்துக்காட்டி உலகில் சில நாடுகளிடம் சூழல் அகதிகளை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகோள் ஒன்றையும் முன்வைத்துள்ளது. சுமார் 300,000 மாலைத்தீவு வாசிகளை வேறு நாடுகளில் குடியமர்த்தவும் தீர்மானித்துள்ளது.

இதுமட்டுமல்லாது கடல்மட்ட உயர்வு காரணமாக, கரையோர அரிப்பு அதிகரிப்பு கரையோர பகுதிகளில் உவர் நீர் உள்நுழைவினால் நன்னீர் உவர் தன்மை நீராக மாறுதல், கரையோரசதுப்பு நிலச்சூழல் தொகுதி அழிவு போன்ற பாதிப்புகள் ஏற்படுகின்றன.

## 4.3. கடற்கரையோர முருகை கற்பாறை அழிவு

வெப்ப அதிகரிப்பினால் முருகை கற்பிரதேசம் வேகமாக பாதிப்படைந்து வருகின்றது. சூடு அதிகரிக்கும் போது பவளப் பிராணிகள் அழிவடைய, பவள பாறைகள் நிறமிழந்து உணவு இன்றி இறக்கத் தொடங்குகின்றன. ஏற்கனவே 15 சதவீத முருகை கற்பாறைகள் இதனால் அழிவடைந்துள்ளதாகவும் இன்றும் 30 வருடங்களில் 30 சதவீதம் அழிவடைந்து விடும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் கடல் உயிரினங்களில் 25 சதவீதத்திற்கும் மேலான உயிரினங்களுக்கு புகழிடம் வழங்கி வருகின்ற உயிரின பல்வகைமை நிறைந்த முருகைக்கற் பிரதேசம் அழிவுக்குள்ளாகி சமுத்திர உயிர்பல்வகைமையில் பாரிய பாதிப்பக்களை ஏற்படுத்தி வருகின்றன.

### 4.4. காலநிலை மாற்றம் ஏற்படல்

கடல் நீரின் வெப்பம் அதிகரிப்பதால் வளிடண்டலத்தில் நீராவியின் அளவு கூடி மழை வீழ்ச்சி மற்றும் பனிப் பொழிவுகளில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. 1998 இல் கடும் வரட்சி காரணமாக 20 லட்சம் ஏக்கர் காடுகள் எரிந்து நாசமாகின. சூடான கடல் நீரின் காரணமாக அயன சூறாவளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றன. 2005 ம் ஆண்டில் அமெரிக்காவின் புளொரிடா மானிலத்தை தாக்கிய கட்ரினா சூறாவளி வெள்ளத்தாலும் புரட்டி எடுத்தது. 2011 டிசெம்பரில் கூட பிலிப்பைன்ஸ் நாட்டில் ஏற்பட்ட சூறாவளி மற்றும் அதனால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு 1000 கணக்கான மக்களை காவு கொண்டதுடன் பல்வேறு பாதிப்புக்களையும் ஏற்படுத்தியது.

வடதென் அமெரிக்காவின் கிழக்கு பகுதிகள், வட ஐரோப்பா, வட மற்றும் மத்திய ஆசிய பிராந்தியத்தில் 1900 – 2005 க்கும் இடையில் மழைவீழ்ச்சி அதிகரித்தது. மத்திய தரைக்கடல், தென் ஆபிரிக்கப் பிராந்தியத்தில் மழைவீழ்ச்சி வீழ்ச்சியடைந்துள்ளது ஆபிரிக்கப் பகுதிகளில் மழையை நம்பியே விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள். மழைவீழ்ச்சி குறைவடைந்து வெப்ப அதிகரிப்பு இப்பிரதேசத்தை தொடர்ச்சியாகத் தாக்குகின்றன. அண்மையில் கூட சோமாலியா கடும் பஞ்சத்துக்கு உள்ளானது. நைகர் நாட்டின் சனத்தொகையானது 12 மில்லியன் ஆகும். இவர்களில் 20 சதவீதமானவர்கள் போசணை குறைபாட்டினால் அவதியுருகின்றனர். நான்கில் ஒரு குழந்தை 5 வயதை அடையும் முன் பசியால் இறக்கின்றது. கென்ய மக்கள் மலேரியா நோயால் பாதிக்கின்றனர்.

உலக சுகாதார நிறுவனத்தின் தகவலின் படி வெப்ப அதிகரிப்பால் மலேரியா, வாந்திபேதி நோய் காரணமாக ஆண்டு ஒன்றிற்கு 150.000 பேருக்கு அதிகமானோர் இறப்பதாகவும் இதன் எண்ணிக்கை 2030 ஆம் ஆண்டு 2 மடங்குகளாக உயரும் என அஞ்சப்படுகின்றது. வெப்ப அலைகள் ஏனைய காலநிலை மாற்ற காரணிகளினால் பயிர் விளைச்சல் வீழ்ச்சியடைதல், கரையோர நிலங்கள் நீரில் மூழ்குவதால் உயர் நிலத்தை நோக்கி மக்கள் நகர அங்கு சனச்செறிவு ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுவதுடன் வெப்பத்துடன் தொடர்புடைய இறப்புக்களின் வீதமும் அதிகரிக்கும். குறிப்பாக வயது முதிர்ந்தவர்கள், நோயாளிகள், சிறுவர்கள், குழந்தைகள் என வெப்ப அதிகரிப்பின் விளைவுகளை எதிர்நோக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## 5. புவி வெப்பமடைதலை தடுக்க மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள்

1972 ஆம் ஆண்டு சுவீடன் நாட்டின் ஸ்ரொக்கொமில் மனித சூழல் மாநாடு ஒன்று நடைபெற்றது. இது சர்வதேச ரீதியாக நடைபெற்ற முதல் சூழல் பிரச்சினை மாநாடாகும். ஐக்கிய நாடுகள் சபையின் கீழ் சூழல் பராமரிப்புக்கான பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டது. இது ஐக்கிய நாடுகளின் சூழல் நிகழ்ச்சித் திட்டம் (UNEP- United Nation Environmental Programme) என பெயரிடப்பட்டது. இத்திட்டத்தில் புவியின் காலநிலை மாற்றம் தொடர்பான பல பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன, ஆனால் அவை செயற்றிறன் மிக்கவையாகக் காணப்படவில்லை.

புவி வெப்பமடைதலில் இருந்து புவிக் கோளத்தையும் புவிக்கோள உயிர்ச்சூழலையும் மனிதனையும் பாதுகாத்துக் கொள்ள ஐக்கிய நாடுகள் சபை 1992 இல் பிறேசில் நாட்டின் நகரமான ரியோடி ஜெனிரொவில் புவி உச்சி மாநாட்டை கூட்டியதுடன் பூமியை காப்பாற்ற கடைசி சந்தர்ப்பம் என விடுக்கப்பட்ட அரைக்கூவலில் அதுவரை நிகழாத அளவுக்கு உலக நாடுகள் ஒன்று கூடின. 108 நாடுகளின் அரச தலைவர்கள், 180க்கு மேற்பட்ட நாடுகளின் பிரதிநிதிகள் பங்குபற்றினர். இதன் பயனாக புவி வெப்பமடைவதை கட்டுப்படுத்துவதற்கான வாயுக்களின் வெளியேற்றத்தினை குறைப்பதற்கான உடன்படிக்கை ஒன்று உருவாக்கப்பட்டது. அதில் ஏராளமான நாடுகளும் கைச்சாத்திட்டன. ஆனால் வாயு வெளியேற்றத்தில் பிரதான நாடான ஐக்கிய அமெரிக்கா உடன்படிக்கையில் கைச்சாத்திடவில்லை.

பச்சை வீட்டு வாயுக்களைக் குறைப்பதற்கான இலக்குகளை இவ்வுடன்படிக்கை கொண்டிருந்தாலும் கட்டாயப்படுத்தலில் காணப்பட்ட குறைபாடு காரணமாக வாயு வெளியேற்றத்தில் குறைவு ஏற்படாமல் அதிகரிப்பு போக்கு உலக நாடுகள் பலவற்றில் காணப்பட்டன. இதனை குறைப்பதற்கு மீண்டும் இன்னொரு நடவடிக்கையாக 1997ம் ஆண்டு டிசெம்பர் 11ம் திகதி ஜப்பான் நாட்டின் கியோட்டோ என்னும் நகரத்தில் உடன்படிக்கை ஒன்று உருவாக்கப்பட்டது. இதனை அமுலுக்கு கொண்டு வர ஐரோப்பிய நாடுகள் சில பெரிதும் பாடுபட்டன.

கியோட்டோ உடன்படிக்கையை அமுலாக்குவதற்கு இரண்டு பிரதான நிபந்தனைகள் காணப்பட்டன. ஒன்று, உலகில் குறைந்தது 55 நாடுகளாவது கைச்சாத்திட வேண்டும்.

இந்நிபந்தனை நூற்றுக்கணக்கான நாடுகளின் கையொப்பத்துடன் விரைவாகப் பூர்த்தி செய்யப்பட்டது. இரண்டாவது நிபந்தனை, இந்நாடுகள் வெளியேற்றும் பச்சை வீட்டு வாயுக்களின் கூட்டு அளவு உலக மொத்த சதவீதத்தில் (100%) 55 சதவீதத்தை தாண்டி இருக்க வேண்டும் என்பதாகும். 140க்கும் மேற்பட்ட நாடுகள் கைச்சாத்திட்டும் 44.2 சதவீத வாயுக்கள் இந்நாடுகளின் கூட்டு வாயு வெளியேற்றமாக இருந்தன. இதனால் 17 சதவீத வாயுவை வெளியேற்றும் ரஷ்யாவை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வைப்பதற்காக ஐரோப்பிய ஒன்றியம், ரஷ்யாவிடம் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டால் உலக வர்த்தக அமைப்பில் இணைய ஆதரவு தருவதாக கூறி ரஷ்யாவை கைச்சாத்திட வைத்தது. இதனால் 2005ம் ஆண்டு பெப்ரவரி 16ம் திகதி கியோட்டோ உடன்படிக்கை அமுலுக்கு வந்தது. சூழல் மீதான தாக்கத்தை குறைப்பதற்கு புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தலாம் என கூறிவந்த அமெரிக்கா அண்மையிலேயே கைச்சாத்திட்டது.

கியோட்டோ உடன்படிக்கையும் குறைபாடுடையதாகவே காலப்போக்கில் மாறியது. இவ்வுடன்படிக்கையின்படி, காபனை குறைவாக வெளியேற்றும் நாடுகள் பட்டியல் படுத்தப்பட்டு புவியை பாதுகாக்கும் நாட்டிற்கு புள்ளிகள் வழங்கப்படுகின்றது. அவ்வாறு வழங்கப்படும் புள்ளிகளை, காபனை கூடுதலாக வெளியேற்றும் நாடுகள் புவியை பாதுகாக்கும் நாட்டிற்கு சில நிதியுதவிகளை வழங்கி அந்த நாட்டின் அனுமதியுடன் தனக்கு சொந்தமாக்கிக் கொள்ளலாம். இவ்வாறு சொந்தமாக்கப்படும் புள்ளி மூலம் தான் வெளியேற்றும் காபனின் அளவை கழித்துக்கொள்ள முடியும்.

இந்த உடன்படிக்கையின் கூட்டல் கழித்தலை பயன்படுத்தி கூடுதல் காபனை வெளியேற்றும் அமெரிக்கா வருடம் ஒன்றிற்கு 300 மில்லியன் தொன் காபனை உறிஞ்சக்கூடிய காடுகளை வளர்த்துள்ளோம் எனவே பச்சை வீட்டு வாயுக்களைக் குறைக்க வேண்டிய தேவை எமக்கில்லை என்கின்றது. ஏனைய சில கைத்தொழில் நாடுகள் போலி ஆவணங்களை காட்டி குறைந்துள்ளதாக ஏமாற்றிவருகின்றன. கியோட்டோ உடன்படிக்கை, குறைவிருத்தி நாடுகளின் காபன் வாயுக்களை குறைக்க கட்டாயப்படுத்தாததன் காரணத்தினால் அதனைப் பயன்படுத்தி இந்தியா, சீனா போன்ற குறைவிருத்தி நாடுகள் கூடுதலான அளவு காபன் வாயுக்களை வெளியிட்டு வருகின்றன.

## முடிவுரை

திட்டம் வகுக்கப்பட்டு வாயுக்களைக் குறைத்து புவி வெப்பமடைதலைத் தடுக்க முயற்சிகள் மேற்கொண்டாலும், சட்டதிட்டத்தில் காணப்படுகின்ற குறைபாடுகளை எப்படியாவது கண்டுபிடித்து வெப்பவாயு வெளியேற்றத்தை தொடர்ச்சியாக வெளியிட்டுக் கொண்டிருக்கவே அதிகமான கைத்தொழில் நாடுகள் முயற்சிக்கின்றன என்பதே யதார்த்த உண்மையாகும். புவி வெப்பமடைதல், அதனோடு தொடர்புடைய விளைவுகள், தடுப்பதில் காணப்படுகின்ற மந்தப்போக்கு என்பன நீடிக்குமானால், உலகம் சூடேறி அபாயத்துடனான அனர்த்தத்தை உருவாக்குவதுடன் எமது எதிர்கால சந்ததியை இந்தப் பூமியில் இருந்தே அழித்துவிடும். இதனை வெப்ப வாயுக்களை வெளியேற்றும் அனைத்து நாடுகளும் உணர்ந்து கொள்ள வேண்டும். இதனை உணர்ந்து, விட்டுக் கொடுப்புடன் செயற்பட்டு ஞாயிற்றுத் தொகுதியில் புவிக்கோளின் சிறப்பினை உணர்ந்து செயற்படுவது மனித குலத்தின் அத்தியாவசியக் கடமையாகும்.

## உசாத்துணை


அன்ரனி நோர்பட். எஸ். (2007). புவியியல்: சூழலியல் முகாமைத்துவம். சேமமடு பதிப்பகம். கொழும்பு. பக் 260-264.

அன்ரனி நோர்பட். எஸ். (2008). புவியியல்: சூழலியல் முகாமைத்துவம். சேமமடு பதிப்பகம். கொழும்பு. பக் 104-109, 150-154.

ஐங்கரநேசன். பொ. (2010). ஏழாவது ஊழி, சுற்றுச்சூழல் கட்டுரைகள். சேமமடு பதிப்பகம். கொழும்பு.பக் 17-31.

http://globalwarming.sdsu.edu

www.edf.org/climate/**global-warming-facts**

www.**globalwarming**.org

# குறிஞ்சித் தென்னவனின் கவிதைகளில் பெண் தொழிலாளர் பிரச்சினைகள்

## சம்பளநாள் கவிதையை அடிப்படையாகக் கொண்ட ஒரு மதிப்பீடு

**எம்.எம். ஜெயசீலன், உதவி விரிவுரையாளர், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்.**

(I)

மலையகத் தமிழ்க் கவிதை வளர்ச்சிக்கு வளம் சேர்த்த ஆளுமைகளில் குறிஞ்சித் தென்னவனுக்கு முக்கிய இடமுண்டு. குறிப்பாக சி.வி. வேலுப்பிள்ளையின் கவிதைகளின் தொடர்ச்சியாகவும் வளர்ச்சியாகவும் குறிஞ்சித் தென்னவனது கவிதைகள் கணிக்கப்படுகின்றமை அவதானிக்கத்தக்கது. வேலு என்ற இயற்பெயரைக் கொண்ட குறிஞ்சித் தென்னவன் (1934 – 1998) ஒரு தோட்டத் தொழிலாளியாக தொழிலாளர்களோடு தொழிலாளியாக வாழ்ந்து, தான் கண்டு, கேட்டு அனுபவித்த தனது சமுதாயத்தின் துயர்தோய்ந்த வாழ்க்கையினை சோகவுணர்வுத் ததும்ப யதார்த்தபூர்வமாகவும் எளிமையாகவும் வெளிப்படுத்தியுள்ளார். இதனால் இவரது படைப்புக்கள் ஓர் உழைக்கும் சமுதாயம் அனுபவித்த துயர்தோய்ந்த வாழ்வின் சாட்சியமாகவும் பதிவேடாகவும் விளங்குவதோடு, கண்ணீருக்கும் கொடுமைகளுக்கும் கொடுங்கோண்மைகளுக்கும் துரோகங்களுக்கும் இடையே தத்தலித்துக்கொண்டிருக்கும் ஒரு சமுதாயத்தின் உணர்வு வெளிப்பாடாகவும் அமைவதைக் காணலாம். இதனை வெளிப்படுத்தவதாகவே தென்னவனது கவிதைக் கோட்பாடும் அமைகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.

> “கவிதைப் புனைதலைப் பலர் தொழிலாகக் கொண்டிருக்கலாம். ஆனால், எனக்கு கவிதை தொழில் அல்ல. எனது இரத்த நாளங்களில் ஓடும் உயிர்த்துடிப்பு – தீமையைக் கண்டு கொதித்தெழும் உணர்வின் வடிகால். பொழுதுபோக்காக மனக்கிளர்ச்சியின் உந்துதலால் எழுதப்பட்டவையல்ல. மலைகள், அவைகளில் ஓய்வு கொள்ளும் முகிழ்கள், அதன் மேனி எங்கும் பட்டொளிவீசிப் பரிமளிக்கும் தேயிலைப் பசுமைகள், அம்மண்ணின் அடியில் புதைக்கப்பட்ட இம்மக்களின் அவலம் நிறைந்த வாழ்க்கைச் சரிதங்கள் இவையாவும் எனது கவிதைகளின் 'கருக்கள்' இவர்கள் கொட்டிய கண்ணீரும் செந்நீரும் வேதனைக் குமுறல்களும், விட்டிடும் ஏக்கப் பெருமூச்சுக்களும், எதிர்கால கனவு தரிசனங்களுக்காக நிகழ்கால வாழ்வின் சுகங்களை எவரெவர்க்கோ அர்ப்பணித்துவிட்டு வெறுமையை அரவணைத்து ஏங்கும் நெஞ்சங்களும் எனது கவிதையின் ஜீவத்துடிப்புக்கள்”

என்ற குறிஞ்சித் தென்னவனது கவிதைக் கோட்பாடானது அவரது ஆழ்ந்த சமுதாயப் பற்றினையும் படைப்புக்களின் உள்ளடக்கத்தினையும் வெளிப்படுத்துவதாக அமைகின்றது. அத்தோடு இக்கோட்பாட்டிலுள்ள கருக்கள் மற்றும் அதன் ஜீவத்துடிப்புக்கள் யாவும் தென்னவனது படைப்புக்கள் முழுவதிலும் இழையோடிக்கிடப்பது சிறப்பம்சமாகும்.


இத்தகைய ஆழ்ந்த சமுதாய பற்றின் காரணமாகக் குறிஞ்சித் தென்னவன் தனது கவிதைகளில் துன்பசாகரத்தில் மூழ்கித் தவிக்கின்ற மலையகப் பெண் தொழிலாளர்களது வேதனைகளை, அவலங்களை, ஆற்றாமைகளை, ஏக்கப் பெருமூச்சுக்களை, எதிர்கால கனவு தரிசனங்களுக்காக நிகழ்கால வாழ்வின் சுகங்களை எவரெவர்க்கோ அர்ப்பணித்துவிட்டு வெறுமையை அரவணைத்துக் கொண்டு ஏங்கித் தவிக்கின்ற துயரினை மிகவும் உணர்வுபூர்வமாகப் பதிவு செய்துள்ளார். அதாவது 'மலையகத் தொழிலாளருள்ளுள் பெண்கள் அனுபவிக்கும் கொடுமைகளும் துயரங்களும் கவிஞரது உள்ளத்தினை அதிகம் ஈர்த்துள்ளதை அவதானிக்கலாம். ஒருபுறம் தோட்ட அதிகாரிகள் தமது காமப்பசிக்குத் தொழிலாளப் பெண்களை இரையாக்க முயலும் கொடுமை, அதனடிப்படையில் ஏற்படும் பல்வேறுப்பட்ட அவஸ்தைகள். மறுபுறம் மிகச்சிறிய வருவாயைக் கொண்டுள்ள கணவன்மார் அச்சிறிய வருவாயையும் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகிச் செலவிட்டுப் போதாதக் குறைக்குத் தமது குடும்பத்தினரையும் துன்புறுத்தல், இன்னொருபுறம் தொழிலாளப் பெண்கள் தோட்டத்து அதிகாரிகளின் யதேச்சதிகாரம், பிள்ளைகளின் தொல்லைகள், குடும்பப் பராமரிப்புகள், பொறுப்புகள் ஆகியவற்றின் மத்தியில் பகல் நேரம் முழுவதும் ஓய்வு ஒழிச்சலின்றித் தொழிலாளியாக உழைக்க வேண்டிய நிர்ப்பந்தம்...” (அருணாசலம்,க, (2003) மலையகத் தமிழ் இலக்கியம் 2ஆம் பதிப்பு, ப 148)

இத்தகைய துயர்தோய்ந்த வாழ்வினை மிகவும் துல்லியமாகவும் யதார்த்தபூர்வமாகவும் மிகமிக எளிமையாக வெளிப்படுத்துவதாக குறிஞ்சித் தென்னவனின் படைப்புக்கள் விளங்குகின்றன. இவரது படைப்புக்களில் வேகம் விளைந்தெழுவாய், தீபங்களை ஏற்றுவோம், புதுமைப் பெண்ணாய் மாறிடுவாய், உணர்வினை வெல்லும் பெண்மை, அக்கறை உண்டா சொல்லு மச்சான், அன்பெனும் போர்வை அளித்திடும் பெண், தொழிலாளர் வாழ்க்கையிலே, நாணலைப் போல் தலைசாயாதே, பெண் தெய்வம், சம்பளநாள், மலையகப் பெண்ணாள், ஆசை மச்சானுக்கு, கவிபாடும் மச்சான், அழகொன்று சிரிக்குமங்கே, போலிகள், வக்கிர மனங்கள், கற்பு, ஊருக்குழைச்சது போதும் மச்சான், பொம்பல பாட்டுல திங்கனுமா, தாய்மைப் பேறு, நாலு பேர் பார்த்து சிரிக்க விட்டான் போன்ற பல கவிதைகள் பெண் தொழிலாளர்களது பிரச்சினைகளை வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன.

இக்கவிதைகளில் வெளிப்படுகின்ற பெண்தொழிலாளர்களது பிரதான பிரச்சினைகளாக

01. வறுமை
02. குடும்பச்சுமை
03. தொழில்நிலைக் கஸ்டங்கள்
04. தோட்ட அதிகாரிகளின் அடக்குமுறை
05. குடும்ப ஆண்களின் பொறுப்பற்றத் தன்மை
06. அதிகரித்த ஆணாதிக்கம்
07. அரசியல், தொழிற்சங்கங்களின் போலித்தனம்
08. சுரண்டல் கொடுமை
09. பாலியல் பலாத்காரங்கள்
10. சீதனக் கொடுமை

போன்ற பலவற்றைக் கூறலாம். இப்பிரச்சினைகளைக் கவிஞர் தன் கூற்றாகவும் தன்னை ஒரு பெண்ணாகப் பாவனை செய்து கொண்டு, பெண் குரலாகவும் வெளிப்படுத்தியுள்ளார். இங்கு பெண் குரலாக ஒலிப்பவை உணர்ச்சிபூர்வமானதாகவும் ஆத்மார்த்தமாகவும் தொனிப்பதைக் காணலாம்.



(II)

குறிஞ்சித் தென்னவனின் படைப்புக்களில் பலரது கவனத்தையும் ஈர்த்தக் கவிதைகளுள் ஒன்றாக சம்பள நாள் விளங்குகின்றது. 'தென்னவனின் கவித்துவ ஆற்றல், மானுட நேயம், இரக்க சுபாவம், நிதர்சன உண்மைகளை வெளிப்படுத்தும் துணிச்சல், இதய சுத்தி முதலியவற்றை ஒருங்கே வெளிப்படுத்துவதாக இக்கவிதை அமைந்துள்ளது.' (அருணாசலம்,க, (2003) மலையகத் தமிழ் இலக்கியம் 2ஆம் பதிப்பு, ப 149) பொதுவாக எல்லாவித தொழிலாளர்களுக்கும் மகிழ்ச்சியைத் தருகின்ற சம்பளநாள், மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு எவ்வாறு எதிர்நிலையாக அமைகின்றது என்பதை வெளிப்படுத்துவதாக சம்பள நாள் கவிதை அமைந்துள்ளது.

'சம்பள நாளிது வீட்டி லிருக்கிற
சந்தோச மெல்லாம் பறந்திடும் நாள்!
வம்பும் தும்புகளும் பேசிடும் நாள்! இவர்
மண்டை யுடைந்திடும் நாளிதடா!
கம்புத் தடிகளைத் தூக்கிடும் நாள் பொலிஸ்,
கச்சேரி, கோர்ட்டுக்குப் போயிடும் நாள்!
வெம்மியழுதிடும் பெண்களின் குரல்கள்
வீடுகளில் கேட்கும் நாளிதடா!'

என்ற கவிவரிகளானது மலையகத் தோட்டத் தொழிலாளர்களது சம்பள நாளானது வீட்டில் இருக்கின்ற சந்தோசங்களை எல்லாம் பறித்திடும் நாளாகவும் வம்பு தும்புகள் பேசிடும் நாளாகவும் கம்புத் தடிகளைத் தூக்கிச் சண்டைப்பிடித்து மண்டை உடைத்திடும் நாளாகவும் பொலிஸ், கச்சேரி, கோர்ட்டுக்குச் சென்றிடும் நாளாகவும் வெம்மியழுதிடும் தொழிலாளப் பெண்களின் புலம்பல்கள் வீடுகளில் கேட்டிடும் நாளாகவும் அமையுமாற்றினை படம்பிடித்துக் காட்டுகின்றது.

இவ்வாறு பல்வேறுவிதமான பிரச்சினைகளைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு கொண்டுவரும் நாளாக சம்பள நாளினை கூறும் கவிஞர், இக்கவிதையில் வெம்மியழுதிடும் பெண்களின் குரலும் அவர்களது செயற்பாடுகளும் எவ்வாறு அமைகின்றன என்பதை வெளிப்படுத்துவதன் வாயிலாக வீட்டில் இருக்கின்ற சந்தோசங்களை எல்லாம் சம்பள நாள் எவ்வாறு பறித்துச் செல்கின்றது என்பதை வெளிப்படுத்துகின்றார். அதாவது குறிப்பிட்டதொரு சம்பள நாளில் தேயிலைத் தோட்டத் தொழிலாளப் பெண்களில் கவிஞன் தேர்ந்தெடுத்துக் கொண்ட ஒரு சிறுவன் உட்பட முத்தம்மா, சிறுமி – செந்தாமரை,

குப்பாயி, சின்ன ருக்மணி, வள்ளி, பாப்பாத்தி, சின்ன நீலாவதி ஆகிய பெண்களின் செயற்பாடுகளையும் புலம்பல்களையும் வசைகளையும் காட்சிப்படுத்துவதன் மூலம் சம்பள நாள் தரும் துயரினை வெம்மியழுதிடும் பெண்களின் குரலாகப் பதிவு செய்கின்றார். இப்பதிவுகளின் வாயிலாக மலையகப் பெண் தொழிலாளர்களின் பல்வேறுவிதமான பிரச்சினைகளையும் கவிஞர் வெளிப்படுத்துகிறார். அப்பிரச்சினைகளில் மிகமுக்கியமானதாக தொழிலாளர்களது வறுமை நிலை அமைவதைக் காணலாம்.

குறிப்பாக மலையகத் தொழிலாளர்களுக்கு உழைப்பிற்கேற்ற ஊதியம் இன்மை, அதிகரித்த சுரண்டல், ஆண்களின் பொறுப்பற்றத் தன்மை, தோட்ட அதிகாரிகளின் யதேச்சதிகாரம் மற்றும் அதிகார துஸ்பிரயோகம், சிறந்த பொருளாதார முகாமைத்துவமின்மை போன்ற பல காரணங்களால் தோட்டத் தொழிலாளிகள் மீளா வறுமையில் உழல்கின்றனர். மேலும், இவ்வறுமை நிலையே அச்சமுதாயத்தின் பின்னடைவுகளுக்கெல்லாம் காரணமாக அமைவதோடு, தொழிலாளிப் பெண்களை பாரதூரமாக துன்பத்திற்குள் தள்ளுவதாகவும் இதனடியாக வேறு பல பிரச்சினைகளை தோற்றுவிப்பதாகவும் அமைகின்றது. இவற்றினை மிகக் காத்திரமாக குறிஞ்சித் தென்னவன் பதிவுசெய்துள்ளார்.

'சீட்டுப் பணத்த நான் கட்டுவேனா? பட்ட
சில்லறக் கடன அடைப்பேனா? அந்தச்
சேட்டுப்பய மலை போலவந்து பெருந்
தொல்லைக் கொடுப்பான் கடன்கேட்டு
ஈட்டுக் கடையில வச்ச நகையினை
இந்த மாசம் திருப்பலன்னா, ஏலம்
போட்டுடு வானாம்! என்ன செய் வே' னென
புலம்பும் வள்ளியொரு பக்கத்திலே!

என்ற வள்ளியின் புலம்பலும் பள்ளிக் கூடம் போகும் குழந்தைக்கு பாவாடை, ரவிக்கை தைத்தல், வள்ளி மகளின் சடங்குக்கு ஐந்து ரூபா கடிகாரத்தை மொய்யாக எழுதுதல், வீட்டுக்குத் தேவையான மளிகை பொருட்களை வாங்கிய ஒத்தக் கடைக்குக் கொடுக்க வேண்டிய கடன் போன்றவற்றை எவ்வாறு சமாளிப்பது என்ற பாப்பாத்தியின் விம்மலும் தோட்டத் தொழிலாளர்களின் வறுமை நிலையினைச் சிறப்பாகக் காட்டுகின்றது. அத்தோடு, முத்தம்மா என்ற தொழிலாளிப் பெண் சம்பள நாளில் தனது மகனின் சித்தம் நிரம்பிய எதிர்பார்ப்பாக இருந்த ஒரு ரூபாயினைக் கொடுக்காது, அவன் முதுகில் நாலு கொடுத்து பையனின் எதிர்பார்ப்பை சிதைப்பதும் வியாபாரிகள் விற்பனை செய்கின்ற இனிப்புப் பண்டங்கள், வடை, வாழைப்பழம் போன்றவற்றில் தனது உள்ளத்தினைக் பறிகொடுத்து, ஆசை அதிகரித்து ஊளை ஒழுக வாய் எச்சில் வடிய நிற்கும் சிறுமி செந்தாமரையின் எதிரப்பார்ப்பினை அவளது தாய் நிறைவேற்றாததும் அவர்களது வறுமையின் பிரதிபளிப்பே. அதாவது குழந்தைகளின் சின்னஞ்சிறிய எதிர்பார்ப்புக்களைக் கூட நிறைவேற்ற முடியாத ஒரு சமுதாயத்தின் துயர நிலையினை கவிதை படம்பிடித்துக் காட்டுகின்றது.

மேலும், குடும்பத் தலைவர்களின் பொறுப்பற்ற செயற்பாடுகளும் இவ்வறுமை நிலை நீடிக்க முக்கிய காரணமாக அமைகின்றது என்பதை சின்ன நீலாவதியின் வசையின் மூலம் வெளிப்படுத்துகின்றார் கவிஞர். அதாவது சம்பளத்தைப் பெற்றுக் கொண்ட சின்ன நீலாவதியின் கணவன் தனது குடும்பத்தின் நிலமைகள் பற்றிய எவ்வித அக்கறையும் இல்லாமல் நன்றாக கள் குடித்துவிட்டு தனது சக நண்பர்களான சில நாதாரிகளைக் கூட்டிவந்து தன்னை துன்புறுத்தப் போவதாகவும் அவனை திருமணமுடித்த நாளிலிருந்து தான் எவ்வித சுகத்தையும் காணவில்லை என்பதையும் தனது வசையின் மூலம் சின்ன நீலாவதி வெளிப்படுத்துகின்றாள். எடுத்துக்காட்டாக

'நாட்டுக்குப் போய் குடிச்சிப்புட்டு, சில
நாதாறிப் பசங்களக் கூட்டிவந்து, கரு
வாட்டுக்கயிவேனும் என்று, என்னையிந்த
மனுசன் புடுங்கியே தின்னப் போறான்!
வீட்டுல என்ன சொகத்தக் கண்டேன்? இந்த
வெத்து மனுசனக் கட்டிகிட்டு?'

இவற்றோடு மலையகத்தில் அதிகரித்துக் காணப்படும் சுரண்டலும் தோட்ட அதிகாரிகளின் யதேச்சதிகாரமும் தொழிலாளர்களின் மீளா வறுமைக்குக் காரணமாக அமைவதையும் பதிவு செய்துள்ளார் கவிஞர்.

'சீவி முடிச்சி, சிரிக்கலைன்னா? நல்லா
சிங்காரம் பண்ணி தலைக்கலைன்னா?
பாவிப் பயஅரைப் பேருபோட்டான்? அவன்
பாடையி லேபோக, மாடாக என்
ஆவி துடிக்கச் சுமந்துவந்தும், தினம்
அரைப் பேரு போட்டுல்ல வச்சிருக்கான்'

என்ற குப்பாயியின் புலம்பலானது தோட்ட அதிகாரிகளின் அதிகரித்த பாலியல் சேட்டைகளையும் அவர்களது தேவைகளை தொழிலாளிப் பெண்கள் நிறைவேற்றாத விடத்து, அல்லது அவர்களது தேவைகளுக்கு ஏற்ப தொழிலாளர்கள் இனங்கி நடக்காத விடத்து தொழிலாளர்களை பழிவாங்கும் முயற்சியாக, எவ்வளவு தான் கஸ்டப்பட்டு உழைத்தாலும் தொழிலாளர்களுக்கு அரை நாளுக்குரிய வேலையே செய்ததாகக் கூறி அவர்களது வருவாயைக் குறைக்கும் உத்தியினை அதிகாரிகள் கைகொள்வதினையும் உணர்த்துகின்றது. இத்தகைய அவல நிலையினால் ஒரு சில பெண்கள் தோட்ட அதிகாரிகளிடத்து சோரம் போகின்றவர்களாக விளங்குகின்றனர் என்பதை பின்வரும் சின்ன ருக்மணியின் வசை வெளிப்படுத்துகின்றது.

'காமாச்சிக்கு எம்பத் தஞ்சி ரூவா அவ
கையில வாங்கிட்டா பாத்தியாடி? சுத்த
சோமாறி வேலைக்கும் போகமாட்டா, போனா
சொத்தவேலை, துப்புப் பட்டிடுவா!
ஏமாளி கந்தன் அவபுருசன் - அவ
இழுத்த இழுப்புக்கு வளையுறானே!'

இவ்வாறு ஒரு சில பெண்கள் தோட்ட அதிகாரிகளிடத்தில் சோரம் போவதானது ஏனைய பெண்களுக்குப் பிரச்சினையாக அமைவதால் அத்தகைய பெண்களுக்கு எதிரான எதிர்க்குரலையும் சின்ன ருக்மணியின் குரலில் கவிஞர் வெளிப்படுத்தியுள்ளார்.

மேற்கூறியவாறு தோட்டத்து அதிகாரிகளின் பல்வேறுவிதமான அடக்குமுறைகளுக்கு பெண்கள் உட்படுவதோடு தமது குடும்ப அமைப்பிலும் தந்தை, கணவன், சகோதரன் போன்றோராலும் அடக்குமுறைகளுக்கும் வன்முறைகளுக்கும் உட்படுபவர்களாக விளங்குகின்றனர். இதனையும் குறிஞ்சித் தென்னவன் சிறப்பாக புலப்படுத்தியுள்ளார். சின்ன நீலாவதியின் பெருங்கோபம் ஆணாதிக்க அடக்குமுறையினால் ஏற்பட்டதாகும். இவளது வசையில் வரும் 'வீட்டுல என்ன சொகத்தக் கண்டேன்? இந்த வெத்து மனுசனக் கட்டிக்கிட்டு!? என்ற வரிகள் மலையகத்தில் ஆண்களின் அதிகரித்த அடக்குமுறையின் உச்சகட்ட விளைவெனலாம்.

இத்தகைய கொடிய வறுமையினாலும் குடும்ப ஆண்களின் பொறுப்பற்ற தன்மையினாலும் கொழுந்துக் கூடைச் சுமையுடன் குடும்பச் சுமையையும் சுமப்பவர்களாக மலையகப் பெண்கள் விளங்குவதாக தென்னவன் கூறுகின்றார். அதாவது, நாள் முழுவதும் தோட்டத்து அதிகாரிகளின் பழிப்பு, ஏச்சு, பேச்சுக்களுக்கு மத்தியில் ஓய்வு ஒழிச்சலற்று கடின உழைப்பில் ஈடுபடும் பெண்களுக்கு குடும்பத்தை நிர்வகிப்பதும் குடும்பப் பொருளாதாரத்தை ஏற்று நடத்துவதும் பொறுப்பாக உள்ளது. குறைந்த வருமானத்துடன் கடன் தொல்லைகள், சமுதாயச் சடங்குகள், பிள்ளைகளின் தேவைகள், கணவன்மாரின் விருப்பு, வெறுப்புக்கள் போன்றவற்றை எவ்வாறு நிறைவேற்றுவது எனச் செய்வதறியாது தவிக்கும் மலையகத் தொழிலாளிப் பெண்களின் நிலையினை பின்வருமாறு பதிவு செய்கின்றார்.

'பள்ளிக்கூடம் போகும் சின்ன மகளுக்கு
பாவாடை ரவிக்கை தைக்க வேணும்
வள்ளி, மகளின் சடங்குக்கு அஞ்சிரு
வா, வாச்சும் மொய்யா எழுதிடனும்
கொள்ளைக்கா ரப்பய ஒத்த கடைக்கும்
கொடுத்திட னும் போன மாசக் கடன்'
உள்ளத்தில் எண்ணி அடுப்பரு கில் சும்மா
உட்கார்ந் திருக்கிறாள் பாப்பாத்தி!

என்ற வரிகள் தொழிலாளிப் பெண்ணின் குடும்பச் சுமையின் கனத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இவ்வாறு பெருந்தோட்டத்துறைப் பெண் தொழிலாளர்கள் அனுபவிக்கின்ற பல்வேறு பிரச்சினைகளை


ஆத்மார்த்த ரீதியாக வெளிப்படுத்துவதாக அமைந்துள்ள இக்கவிதையானது பல்வேறுவகையான சிறப்புக்களைக் கொண்டதாக அமையப்பெற்றுள்ளது. குறிப்பாக குறிஞ்சித் தென்னவனது பெரும்பாலான கவிதைகளில் இழையோடுகின்ற நாட்டார் பாடல் மரபு இக்கவிதையிலும் மேலோங்கியுள்ளதைக் காணலாம். குறிப்பாக பெண்களுடைய வசையாகவும், புலம்பலாகவும், எதிர்ப்புக்குரலாகவும் கவிதை வெளிப்படுத்தப்பட்டிருப்பதும் மலையகப் பிரதேசப் பேச்சு வழக்குச் சொற்கள் சிறப்பாக கையாளப்பட்டிருப்பதும் (அரைப்பேறு, ரவிக்கை, மொய்காசு) நாட்டார் பாடல் மரபிலிருந்து விடுபடா தன்மையை கவிதைக்கு அளிக்கின்றது. மேலும், கவிஞன் தான் கூற வந்த விடயத்தினை தான் தேர்ந்தெடுத்துக் கொண்ட ஒவ்வொரு பாத்திரத்தையும் அறிமுகப் படுத்துவதன் ஊடாகப் படம்பிடித்துக் காட்டுவதோடு அவர்களது செயற்பாடுகளையும் புலம்பல்களையும் காட்சிப் படுத்துவதன் வாயிலாக தனது கருத்துக்களை வெளிப்படுத்தியிருப்பது சுவைக்கத்தக்கதாகவும் உணர்வு பூர்வமானதாகவும் அமைந்துள்ளது எனலாம்.

உலகலாவிய ரீதியில் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்படும் பெண்களின் ஒரு கூறான, மலையகப் பெருந்தோட்டத்துறை தொழிலாளிப் பெண்கள், முழு உலகிலும் உழைக்கும் பெண் சமூகங்களிலிருந்து வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகம்கொடுப்பவர்களாக விளங்குகின்றனர். அதாவது தேசிய ரீதியில் அரசியல், சமூக, பொருளாதார ரீதியில் சுரண்டல்களுக்கும் அடக்குமுறைகளுக்கும் உட்படுவதோடு தமது சமுதாயம் மற்றும் குடும்ப அமைப்பிலும் பல்வேறுவிதமான வன்முறைகளுக்கும் கொடுமைகளுக்கும் சுரண்டல்களுக்கும் உட்படுபவர்களாக விளங்குகின்றனர். எனவே தான் இத்தோட்டத் தொழிலாளிப் பெண்கள் அனுபவிக்கும் துயரின் உச்சத்தினை வெளிக்காட்டும் வகையில் குறிஞ்சித் தென்னவன், அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்ற சம்பள நாள் கூட மலையகத் தொழிலாளிப் பெண்களுக்கு எத்தகைய துயரினைத் தருகின்றது என்பதை பெண்களின் புலம்பல்கள் மற்றும் வசைகளின் மூலமாக யதார்த்த பூர்வமாகவும் மிகமிக எளிமையாகவும் வெளிப்படுத்தியுள்ளமை மனங்கொள்ளத்தக்கது.

## வறுமை

அன்றைய நாளில்
கதையிலும் காவியத்திலும்
பார்த்ததைப் போல
வீட்டுக்குள் இருந்தே நட்சத்திரங்களை
எண்ணும் அளவிற்கு
சுருங்கிக் கிடக்கும் கூரைகள்
தெருவின் ஓரத்தில் கூடிக்கிடக்கும்
குடிசைகளெல்லாம்
ஏழைகளின் மாட மாளிகையாய் இன்னும்
வறுமையின் சின்னமாய்...
மறுபுறம் கண்ணீர் குளம்கூட வற்றிய நிலையில்
வரட்சிக்குப் பலியான அப்பாவியினர்!
உறக்கத்தில் கூட விடிவு காணும் கனவு இல்லை
கனவு காணும் அளவிற்கு உறங்குவதற்கு
உயிருக்கு உத்தரவாதமில்லை!
கொடுமையிலும் மிகக் கொடுமை
காய்ந்து கருகும் ஓலைக் குடிலுக்குள்
வெயிலிலும் பனியிலும்
தத்தளிக்கும் உயிருக்கு
கண்ணீர் மட்டுமே...
வாழ்க்கை என்னும் வட்டம்
மீண்டும் மீண்டும் சுழல்கிறது
விதியின் சதியால் வீதியில் உறங்கும்
வாழ்வற்றக் கண்ணீருக்கு
விடையளிப்பான் யாரோ!

ஷர்மிளா




**Eswaran Book Deport**
**ஈஸ்வரன் புத்தகாலயம்**

126, முதலாவது மாடி
கொழும்பு வீதி,
கண்டி.

சகல பாடப்பரப்புக்களையும் உள்ளடக்கிய இலங்கை, இந்திய புத்தகங்கள்.
சகல பாடங்களுக்குமான பயிற்சி புத்தகங்கள்.
எழுத்தாளர்கள், கல்விமான்கள் நலன்கருதி பதிப்பகம்.
நூலகங்களுக்கும், பாடசாலை நூலகங்களுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

# ESWARAN'S BOOK DEPOT

**No: 126/1,COLOMBO STREET, KANDY.**
Tel: 081-2220820
Email: eswarancybervila@gmail.com